இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 19 சுடர் - 08

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

60ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும்

இந்து ஆராய்ச்சி மாநாடு

சிறப்பிதழ்

மன்மத வருடம்
ஆனி - ஆடி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

June - July
2015

மாமன்றத் தலைமையகத்தில் நடைபெற்ற
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை (24.07.2015)

இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரியில் கற்று இன்று
வெளிநாட்டில் பதவிவகிக்கும் திருநிறைசெல்வன்
மு. யோகேஸ்வரன் திருமண விழாவின்போது (12.07.2015)

07.06.2015 இல் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

இந்திய உதவித் தூதுவர்
திரு. ஏ. பி. நடராஜன், மாமன்றத் தலைவரும்
திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை பிரதித்
தலைவருமான திரு. க. நீலகண்டன்

பூசையில் கௌரி பசு

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை
அறங்காவலர் சபைத்தலைவர்
திரு. வி.கயிலாசபிள்ளை சபைத் தலைவர்
திரு. மா. தவயோகராஜா, இந்திய உதவி
தூதுவர் திரு. ஏ. பி. நடராஜன்

07.06.2015இல் திருக்கேதீஸ்வரத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம்
கட்டவிருக்கும் மடத்திற்கு அத்திவாரமிட்டபோது

பூசையின்போது
திரு. மா. தவயோகராஜா,
திரு. ஏ. பி. நடராஜன், மாமன்றத்
தலைவர், திரு வே. கந்தசாமி

மாமன்றத் தலைவர்
அத்திவாரமிடுகிறார்.



இந்திய உதவி தூதுவர்
திரு. ஏ. பி. நடராஜன் அடிக்கல்
வைக்கிறார்.

திருமதி அ. கயிலாசபிள்ளை
அடிக்கல் வைக்கிறார்.

உ
சிவமயம்

தீயர் - 19

இந்து ஒளி

சுடர் - 6

மன்மத வருடம் ஆடித் திங்கள் 15 ஆம் நாள் (31.07.2015)

பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே!

திருவாசகம்

வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்
டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீள்முடி உத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னுமன்ன
தோற்றச் செழுஞ்சுடரே!

திருவிசைப்பா

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம்பு அலம்பச்
சடைவிரித்து அலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத்து அரும்பித்
திருமுகம் மலர்ந்துசொட்டு அட்டக்
கிளரொளி மணிவண்டு அறைபொழிற் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே!

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே!

திருப்புராணம்

சீர்வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழில் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர்!

திருச்சிற்றம்பலம்

ஈழத்து இந்து மதம் தொடர்பான ஆய்வு முயற்சிகள்

சிவபூமி எனப் போற்றப்படும் ஈழத்திருநாட்டில் மிகத் தொன்மைமிக்க சைவசமய தொல்லியல் சின்னங்கள் சரியான முறையில் இதுவரை ஆராயப்படவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எமது சமய அடையாளங்களை அழிவுறச்செய்தனர். இவர்களது ஆட்சிகளால் அழிந்து ஒழிந்துபோன எமது சமயம் தொடர்பான தொல்லியல் விடயங்கள் முழுமையாக ஆராயப்பட்டு நிறைவு பெறவில்லை.

கடந்த ஐம்பது வருடகால அரசியல் சூழ்நிலையில் எமது இனத்தையும் சமயத்தையும் பாதித்துள்ள விடயங்களும் சொல்லில் வடிக்க முடியாதுள்ளது. எதுவாயினும் அறிவியல் பூர்வமாக ஆய்வுகளை மேற் கொண்டு எமது சமய மேன்மைகளை, வரலாறுகளை எதிர்காலத்தில் நாம் சாதிக்க வேண்டியவற்றை ஆவணப்படுத்தல் அவசியமாகும். அகில இலங்கை இந்து மாமன்றம் அறிவியல் ரீதியாக இந்து ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே.

பத்து வருடங்களுக்கு முன், மாமன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாடு பல்வேறு விடயங்களை ஆவணப்படுத்துவதற்கு வித்திட்டது. அவ்வகையில் மாமன்றத்தின் அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி ஈழத்து இந்து மதம் தொடர்பான புதிய சிந்தனைகளோடு ஆராய்ச்சி மாநாடு சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் பிரதேசத்தில் நடைபெறுவது வரலாற்று முக்கியத்துவமானது எனலாம்.

தொன்மையை மட்டும் ஆராய்வதனால் பயனில்லை. இருபத்தோராம் நூற்றாண்டு காலத்திற்குப் பொருத்தமான சீர்திருத்த சிந்தனைக் கருத்துக்களுக்கு மாநாட்டு ஆய்வரங்கில் முக்கியத்துவம் கொடுத்திருப்பது சிறப்புக்குரியது. பொதுவாக, ஆய்வுகள் வெறும் வரலாற்றைச் சொல்வனவாக மட்டும் அமையக்கூடாது. எதிர்கால விருத்திக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆய்வரங்காக அமைதல் பயன் அதிகம் எனலாம். இதுவரை ஆராயப்படாத சில விடயங்களை இந்த ஆய்வு மாநாட்டில் முன்னெடுத்திருப்பது அறிஞர் அவையின் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் பதினைந்து பல்கலைக்கழகங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன. ஒரு சில பல்கலைக் கழகங்களில் மட்டும் இந்து நாகரிகத்துறை, இந்து தத்துவவியல்துறை என்பன இயங்குகின்றன. இங்கு நடைபெறும் ஆராய்ச்சிகள் இந்து சமய ஆய்வுகளை முழுமைப்படுத்தும் என சொல்ல முடியாது. எனவே, பல்கலைக்கழகங்களுக்கு அப்பால், எமது சமயம் தொடர்பான ஆய்வுகளுக்கு சந்தர்ப்பம் அளித்தல் அவசியமாகும்.

இன்று மேலைத்தேய நாடுகளில் இந்துமதம் தொடர்பான ஆராய்ச்சியில் அங்குள்ளவர்கள் ஈடுபடுவதை அனைவரும் உணரலாம். இந்துக்களின் பண்பாடு சார்ந்த உடல், உள ஆரோக்கியத்திற்கான யோகக் கலை இன்று மேலைநாட்டவர்களால் பெரிதும் நேசிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை, உலக சுகாதார நிறுவனம் என்பன இக்கலை தொடர்பாக தற்போது அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதை நாம் அறிவோம். இதே போல, எமது சமயம் சார்ந்த சித்த ஆயுர்வேத வைத்தியம் உலக அரங்கில் நன்கு ஆராயப்பட்டு வருகிறது. பக்கவிளைவு அற்ற சிறந்த வைத்தியத்துறை என உலக அரங்கில் எமது மருத்துவக் கலை பேசப்பட்டு வருகிறது.

எனவே, எமது சமயம் சார்ந்த அரும் பொக்கிஷ ங்களை அவற்றின் பெறுமதியை நாம் உணர்ந்ததைவிட, மேலை நாட்டவர்கள் ஆராய்ந்து, அவற்றை உலகப் பொது விடயமாக பிரகடனப்படுத்தி வருகிறார்கள்.

சுத்தசைவ போசனம் அல்லது தாவர போசனம் என்பது கீழைத்தேய இந்துப்பண்பாட்டின் அடையாளமாக விளங்கியது. இவ்விடயம் தொடர்பாக மேலைத் தேயத்தவர்கள் ஆய்வுகள் செய்து தாவர போசனம் சிறந்தது என பிரகடனப்படுத்தி வருகின்றனர். ஆனால் அப்பிரகடனங்களின்போது அது எமது சமயம் சார்ந்த பண்பாடு என்பதை அவர்கள் தவிர்த்து விடுகின்றனர். எங்கள் சமயம் சார்ந்த நல்ல விடயங்களை உள்வாங்கி அவர்கள் புதிய வடிவம் கொடுக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது அல்ல. நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் எமது ஆய்வுகள் பிறநாட்டவர்கள் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். எனவே, மாமன்ற அறுபதாவது நிறைவையொட்டிய இந்து ஆய்வு மாநாடு பல தூரநோக்கு சிந்தனைகளோடு திட்டமிடப்பட்டது என்ற தெளிவு கற்றோர் மத்தியில் உருவாக வேண்டும். இந்த ஆய்வு மாநாடு வெற்றிபெற பிரார்த்திப்போமாக!

அடுத்த சுடர்

மன்மத வருடம் ஆவணி – புரட்டாதி

வாழ்த்து

சுந்தர வாழ்வு வாழி தூய்மையும் பொறையும் வாழி
அந்தரத் தேவர் வாழி அனைத்துயிர் வர்க்கம் வாழி
மைந்தரும் மனையும் வாழி மாண்புறு பெரியார் வாழி
இந்து மாமன்றம் என்றும் எழிலுடன் வாழி வாழி!!

இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
இந்து ஆராய்ச்சி மாநாடு சிறப்பிதழ்
மன்மத வருடம் ஆனி - ஆடி (31. 07 .2015)

ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்

ஒரு பிரதியின் விலை	ரூபா 50.00
வருடாந்தச் சந்தா (உள்நாடு)	ரூபா 300.00 (தபாற் செலவு தனி)
வருடாந்தச் சந்தா (வெளிநாடு)	US டொலர் 15

அகில இலங்கை இந்து மாமன்றம்
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

HINDU OLI

Publication of
HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS
Hindu Research Conference
Special Issue - 31.07.2015

Editorial Board :
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar

Price	Rs. 50.00
Annual Subscription (Inland)	Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign)	U. S. $ 15 (Including Postage)

ALL CEYLON HINDU CONGRESS
A.C.H.C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

ISSN : 2012 - 9645



ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்

இலங்கையில் சிவவழிபாட்டுத் தலங்கள் எழுச்சிபெற வேண்டும்

சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கையில் சைவ சமயம் மிகப் பெருமைபெற்று விளங்கியதை இதிகாச புராணங்கள், கல்வெட்டுக்கள், வரலாறுகள் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்துள்ளன. இலங்கை வேந்தன் இராவணன் இலங்காபுரியை சிவப்பொலிவோடு பேணினான் என்பதை இதிகாசம் சான்று பகருகிறது. சித்தர் தலைமகனாகப் போற்றப்படும் திருமூலர் இலங்கையை சிவபூமி என விழித்ததன் கருத்து ஆழமானது. சம்பந்தர், சுந்தரர் திருமுறைப் பாடல்களில் பஞ்ச ஈஸ்வர தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றி பாடியிருப்பது மேலும் சான்றாக உள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழில் ஈழத்து திருத்தல்ங்கள் மீதும் புகழ்மாலை சூட்டியிருப்பதும் அனைவரும் அறிந்ததே.

இலங்கையும் இந்தியாவும் ஒரே மக்கள் வாழ்ந்த புண்ணிய பூமிகள் எனலாம். முதலாம் உலக யுத்தத்துக்கு முன்பு கடலை ஒரு பொருட்டாக கருதாது தென்னாட்டிலுள்ளவர்கள் இங்குள்ள பஞ்ச ஈஸ்வர தலங்களுக்கு யாத்திரை வருவதும், ஈழத்திருநாட்டவர்கள் இந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செல்வதும், சிதம்பரத்து திருப்பணியில் ஈழத்தவர்கள் தமது உடைமைகளை தாராளமாக வழங்கியிருப்பதும் மறக்கமுடியாத வரலாறாகும்.

பசுந்தீவு எனப் போற்றப்படும் நெடுந்தீவில் இருந்து பால், தயிர், இளநீர், பூக்கள் என்பன வாரந்தோறும் படகில் சிதம்பரம் சென்ற வரலாறு இன்றும் வாய்மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. ஈழத்து சித்தர்கள் இந்தியாவில் குடியேறியிருப்பதும், இந்திய சித்தர்கள் ஈழத்து மண்ணில் வாழ்ந்து சமாதியடைந்திருப்பதும் யாவரும் அறிந்த உண்மை. கடையிற் சுவாமிகள் கடல் வழியாக வந்தவர். புதுவையில் வாழ்ந்த யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் கடல் வழியாகச் சென்றவர்.

வேதாரணியத்துக்கென எம் மண்ணில் மடங்கள் உண்டு. சிதம்பரத்துக்கென இங்கு பெருவாரி நிலங்கள் இருக்கின்றன. சிதம்பரத்திலும் இராமேஸ்வரத்திலும் யாழ்ப்பாணத்தவர்களின் மடங்கள் உள்ளன. சுதந்திரமாகப் போய்வந்த பக்தர்களின் யாத்திரை, உலக யுத்தத்துக்குப் பின்னர் கட்டுப்பட்டுப் போய்விட்டது. இலங்கை, இந்திய சுதந்திரத்துக்குப் பின் யாத்திரிகர்களின் பயணம் மேலும் குறைந்தது எனலாம். வசதி உள்ளவர்கள் மட்டும் யாத்திரை செல்கின்றனர்.

இலங்கை யாத்திரிகர்கள் இந்தியாவுக்கு கலபமாக செல்வதற்கும், இந்திய யாத்திரிகர்கள் ஈழத்து சிவாலயங்களை தரிசிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இந்திய தூதுவராலயம் இது விடயத்தில் அக்கறை செலுத்துவது அவசியமானது.

இந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்கு அருகில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான விடுதிகளை தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சு தொடர்ந்து அமைத்து வருகிறது. இவ்விடுதிகள் பலருக்கும் பயன்தருகிறது. தமிழக அரசுக்கும் அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கிறது. இங்கும் ஆலய தரிசனம் மேற்கொள்பவர்களுக்கு வடக்கு மாகாண சபையும், இலங்கை அரசின் இந்து கலாசார அமைச்சும் இணைந்து சிறப்பான முறையில் யாத்திரிகர்கள் விடுதிகளை அமைப்பது வரவேற்கத்தக்கது. இது வடக்கு மாகாண சபைக்கு வருவாயையும் பெற்றுக்கொடுக்கும். அகில இலங்கை இந்து மாமன்றம் கீரிமலையில் சிவபூமி அறக்கட்டளை ஊடாக சிறந்ததொரு யாத்திரிகர் விடுதியை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. திருக்கேதீஸ்வரத்திலும் இந்து மாமன்றம் யாத்திரிகர் விடுதி யொன்றை அமைத்து வருவதும் வரவேற்புக்குரியது. திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், சிவனொளிபாதமலை சூழல், கொக்கட்டிச்சோலை, வெருகல், முல்லைத்தீவு தான்தோன்றீஸ்வரம், கதிர்காமம் போன்ற பகுதிகளிலும் யாத்திரிகர்கள் விடுதிகள் நல்லமுறையில் அமையவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பாரம்பரியமான சிவவழிபாட்டுக்குக் குந்தகமான புது வழிபாடுகள் போர்ச்சூழலின் பின் பெருகிவருவதாக பலரும் கவலை தெரிவிக்கின்றனர். ஐந்நூறு ஆண்டுகளுக்கும் மேலான அந்நியர் ஆதிக்கத்தில் கூட எமது சமூகம் எங்களது பாரம்பரிய சைவநெறிமுறைகளை தொலைத்து விடவில்லை. இன்று ஏற்பட்டுள்ள சலனங்கள் சில காலங்களுக்குள் அமைதி பெற்று விடும். எனினும் சிவபூமியாகிய எம் மண்ணில் சிவவழிபாடு எழுச்சி பெறுவதற்கு நாம் அனைவரும் அக்கறை செலுத்துவோமாக!

சிவ ஞானந்தன்

விநாயகர் வணக்கம்

விநாயகர் என்ற சொல் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக்கெல்லாம் தலைவன் எனப் பொருள்படும். எந்தக் கடவுளை வழிபட்டாலும் முதலிலே வழிபடப்படும் தெய்வம் விநாயகக் கடவுள் ஆகும். விநாயகரின் தோற்றம் பற்றி சம்பந்தரின் பின்வரும் தேவாரம் விளக்கி நிற்கின்றது.

"பிடியதன் உருவுமை கொளமிகு களியது
வடிகொடு தனதடி வழிபடுமவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

"உமை பெண் யானையின் உருவெடுத்தாள், சிவன் ஆண் யானையின் வடிவெடுத்தான். இருவரும் இணைந்தனர். தன்னை வழிபடுகின்றவர்களது துன்பங்களை நீக்குகின்ற கணபதி பிறக்குமாறு சிவன் இவ்வாறு அருள் செய்தார்" என்பது அப்பாட்டின் பொருள் ஆகும்.

நாம் எழுதத்தொடங்கும் முன் "உ" எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குவது வழமை. விநாயகர் ஒங்கார வடிவினர். அ+உ+ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடு எழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி.

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்தும் இந்து ஆராய்ச்சி மாநாடு (31.07.2015–02.08.2015)

அரங்குகளை அலங்கரிக்கும் ஆன்மீக ஞானிகள்/அறிஞர் பெருமக்கள்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி "ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு" என்ற தொனிப்பொருளிலான இந்து ஆராய்ச்சி மாநாடு ஜூலை 31ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வரையிலான மூன்று நாட்கள் யாழ் மண்ணிலுள்ள நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறுகிறது.

ஆரம்ப நிகழ்வு, சிறப்பு அமர்வு, சமகால அமர்வு மற்றும் நிறைவு நிகழ்வு என்பன இடம்பெறும்போது, அவை நிகழும் மண்டப அரங்குகளுக்கு ஆன்மீக ஞானிகள் மற்றும் அறிஞர் பெருமக்களது பெயர்களை சூட்டுவதற்கு மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த வகையில் ஆரம்ப நிகழ்வு (ஜூலை 31 ஆம் திகதி) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அரங்கிலும், இரண்டாம் நாள் (ஆகஸ்ட் முதலாம் திகதி) சமகால அமர்வு - 1 சேர் பொன்.இராமநாதன் அரங்கிலும், சமகால அமர்வு - 2 திரு.வே.பாலசுப்பிரமணியம் அரங்கிலும், சமகால அமர்வு - 3 சேர் பொன். அருணாசலம் அரங்கிலும், சமகால அமர்வு - 4 சேர் கந்தையா வைத்தியநாதன் அரங்கிலும், சமகால அமர்வு - 5 கலாநிதி க.வேலாயுதபிள்ளை அரங்கிலும், சமகால அமர்வு - 6 இந்து போர்ட் சு.இராசரத்தினம் அரங்கிலும், மூன்றாம் நாள் (ஆகஸ்ட் 2 ஆம் திகதி) சமகால அமர்வு - 7 தவத்திரு செல்லப்பா சுவாமிகள் அரங்கிலும், சமகால அமர்வு - 8 தவத்திரு யோகர்சுவாமிகள் அரங்கிலும், சமகால அமர்வு - 9 சுவாமிஜி ஜீவானானந்த மகராஜ் அரங்கிலும், சமகால அமர்வு - 10 தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கிலும், நிறைவு நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அரங்கிலும் இடம்பெறுகின்றன.



அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் இந்து ஆராய்ச்சி மாநாடு இடம்பெறும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தின் முகப்புத் தோற்றம்.

தீயர் – 19

சுடர் – 06

மாமன்ற

இந்து ஆராய்ச்சி மாநாடு சிறப்பிதழ்

இலங்கை வாழ் இந்து மக்களின் உச்ச நிறுவனமாக இந்நாட்டிலுள்ள இந்து மத நிறுவனங்களின் கூட்டமைப்பாக ஐய வருடம் தைத்திங்களின் (1955 பெப்பரவரி 6ஆம் நாள்) தைப்பூசத் திருநாளன்று அகில இலங்கை இந்து மாமன்றம் தோற்றம் பெற்றது.

"இறைபணி நிற்க" என்பதனை இலட்சியமாகக் கொண்டு. நாடளாவிய ரீதியில் இயங்கும் இந்து நிறுவனங்களை ஒன்றிணைத்து சமயம். சமூகம் மற்றும் கல்விசார்ந்த நற்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் மாமன்றம். வரலாற்றுப் பாதையில் அறுபது வருடங்களை நிறைவு செய்திருப்பது அனைவரும் அறிந்ததே.

இதனையொட்டி இவ்வருட ஆரம்பத்திலிருந்து மாமன்றம் நாடளாவிய ரீதியில் பல்வேறுபட்ட சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்திவருகிறது. இந்த வகையில் ஒன்றாக மூன்று நாள் பெருவிழாவாக யாழ் மண்ணில் ஏற்பாடு செய்துள்ள இந்து ஆராய்ச்சி மாநாட்டையொட்டி மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி"சிறப்பிதழாக மலருகிறது.

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் திருப்பாதங்களில் இந்த சிறப்பிதழை சமர்ப்பித்து வணங்கி நிற்கிறோம்.

இந்து மாமன்றம் என்றும் எழிலுடன் வாழி! வாழி!

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

உலகத்தின் மாபெரிய உண்மைநெறி செப்பும்
பலபெற்றி கண்ட தனித்துவமும்
சிலபற்றிச் செப்பின் சிலிர்ப்பெய்தும் அற்புதமும்
உளவென்பதால் உயர்ந்த தத்துவமும்
நலமென்பதால் நன்கு செழித்தோங்கும் வித்தகமும்
சிவன்பேரில் கொண்ட திறமும்
கலகத்தாலுற்ற கருத் தெல்லாம் வென்றுயர்ந்த
மாமன்றம் இந்துவென்றும் வாழி!

சித்தாந்தம் வேதாந்தம் போற்றும் மன்றம்
சிறப்பாகப் பணியாற்றுஞ் சிறந்த மன்றம்
நற்றாய் எம் சிவகாம சுந்தரியும்
நடராசர் திருவழகும் நயக்கும் மன்றம்
பற்றார்வலர் பலரும் இணைந்த மன்றம்
பரிதவிப்போர் நலங் காக்கும் பசுமை மன்றம்
வெற்றார வாரமின்றி இயங்கும் மன்றம்
மாமன்றம் இந்துவென்றும் வாழி!

சைவத்தின் மேன்மை காக்கும் எங்கள் மன்றம்
சமத்துவத்தைத் தனித்துவத்தைக் கொண்ட மன்றம்
உண்மைக்காய் உயர்வுக்காய் உழைக்கும் மன்றம்
உத்தமர்க்கு விழாவெடுக்கும் உயர்ந்த மன்றம்
அற்புதமாய் ஆய்வரங்கு நடத்தும் மன்றம்
அகிலத்தில் அரியபணி யியற்றும் மன்றம்
செப்பிடுதற்கரிய நெறி காக்கும் மன்றம்
மாமன்றம் இந்து வென்றும் வாழி!

(மாமன்றப் பொன்விழா மலர் - 2005)

சிறப்புப் பேட்டி

"எனக்கு இறைவன் தந்திருக்கும் வேத சிவாகம அறிவைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் போதிப்பதன் ஊடாக ஆத்ம திருப்தியடைகிறேன்"

மாமன்றத்தின் கௌரவம் பெறும் மூத்த சிவாசாரியார் சிவஶ்ரீ தானு மகாதேவக் குருக்கள்

நேர்காணல் : அ. கனகசூரியர்

யாழ் குடாநாட்டின் வலிகாமம் தெற்கு பகுதியிலுள்ள புண்ணிய பூமி இணுவில். சைவத்தமிழ் மணம் கமழும் இந்தப் பூமியில் அமைந்திருக்கும் ஏராளமான ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் வட்டுவினி கண்ணகை அம்மன் ஆலயத்துடன் இணைந்துள்ளது காயத்ரிபீட தர்மசாஸ்தா குருகுலம். இது அந்தணப் பெருமக்களுக்கான சமஸ்கிருத வேத சிவாகமக் கல்வியை இலவசமாகப் போதிக்கும் பணியில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கிவருகிறது.

இந்தக் குருகுலத்தை ஸ்தாபித்திருப்பதுடன், இப்பொழுதும் அதனைச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார் மூத்த சிவாசாரியார் சிவஶ்ரீ தானு மகாதேவக் குருக்கள் அவர்கள். இவர் பவளவிழாக் கண்ட பெருமைக்குரியவர். மகாதேவ வாத்தியார் என்றும் வாத்தியார் ஐயா என்றும் அந்தணப் பெருமக்களால் மட்டுமல்ல, யாழ் மாவட்டத்தின் இந்து மக்கள் அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டுவரும் இவரது அறப்பணியை போற்றும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி பாராட்டிக் கௌரவிக்கிறது.

இந்து ஒளி ஆன்மீக இதழ் சார்பாக சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்களைச் சந்தித்து உரையாடியபோது, இவரது ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி கேட்டோம்.

"எனது தந்தையார் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் பணிபுரிந்ததால், எனது குடும்பத்தினர் அங்கேயே தங்கியிருந்தார்கள். ஆரம்பக் கல்வியை வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் கற்றேன். அப்பொழுது மாவிட்டபுரம் பாலசுந்தரக்குருக்கள் அவர்களிடம் சமஸ்கிருதம் பயின்றேன். எனது ஒன்பதாவது வயதில் தாயார் காலமாகியதால் தந்தையார் என்னை அழைத்துக் கொண்டு இந்தியா சென்றுவிட்டார். அங்கு நாகர் கோயில் கிராமத்திலுள்ள அக்ரகாரம் என்று சொல்லக்கூடிய அந்தணர் குடும்பத்தினர் வாழ்ந்த பகுதியில் தங்கியிருந்த வேளையில், திண்ணைப் பாடசாலையாக நடத்தப்பட்டு வந்த சமஸ்கிருத வகுப்புகளில் இணைந்து சமஸ்கிருத இலக்கண, இலக்கியங்களை கற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டு வருடங்களின் பின் மீண்டும் குடும்பத்தினருடன் மாவிட்டபுரம் திரும்பினேன்.

அப்போது சுன்னாகத்தில் இயங்கி வந்த சதாசிவப் பிராசீன பாடசாலையில் சீத்தாராம சாஸ்திரிகள் அவர்களிடமும், அதன்பின் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களிடமும் பயின்று எஸ்.எஸ்.ஸி பரீட்சைக்குத் தோற்றினேன். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் சமஸ்கிருத ஆசிரியராகப் பணியாற்றி வந்த கீரிமலை இராமையர் அவர்களின் வழிகாட்டுதலுடனும், உதவியுடனும் லண்டன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் சித்தியடைந்தேன். கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள் அவர்களிடம் அந்தணப் பெருமக்களுக்குரிய வைதீகக் கிரியை முறைகளைக் கற்றுக்கொண்டேன்" என்கிறார் சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள்.

இவரது தொழிற் செயற்பாடுகள் தொடர்பாகக் கேட்டதற்கு "நான் படித்த சுன்னாகம் பிராசீன பாடசாலையில் முதன்மை ஆசிரியராகக் கடமையாற்றினேன். பின்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மடத்தில் இயங்கி வந்த சமஸ்கிருத பாடசாலையில் நான்கு வருடங்கள் கல்வி போதித்தேன். அதன் பின்னர் 1970 ஆம் ஆண்டில் இணுவில் காயத்ரிபீடம் தர்மசாஸ்தா குருகுலத்தை ஆரம்பித்தேன்" என்று பதிலளித்தார்.

இவர் நடத்தி வரும் குருகுலப் பயிற்சி தொடர்பான பல தகவல்களையும் தெரிவித்தார். குருகுலப் பயிற்சி முற்றிலும் இலவசமாகவே நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சியின்போது இலவச உணவும் வழங்கப்படுகிறது. சமஸ்கிருத வேத சிவாகமக் கல்வியுடன் குருக்கள் பட்டம் பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிநெறியும் போதிக்கப்படுகிறது. குறைந்தது ஐந்து வருட காலம் இந்தப் பயிற்சிநெறியை பயிலவேண்டும். அதன்பின்பே

ஆசார்ய அபிஷேகம் (குருக்கள் பட்டம் வழங்கல்) நடத்தப்படுகிறது. இதற்கு வயதுக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டபின் குருகுலத்தில் இணைந்து பயிற்சி பெற்றுக்கொள்ளலாம். திருமணம் செய்து கொண்ட பின்னரும் பலர் பயிற்சி பெற்றுள்ளார்கள். யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல கிழக்கு மாகாணம், மலையகம், கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்தும் பலர் வந்து குருகுலத்தில் பயிற்சி பெற்றுள்ளார்கள். முன்பு பலர் குருகுலத்தில் தங்கியிருந்து வதிவிடப்பயிற்சி பெற்றுக்கொண்டனர். இப்பொழுது இருவர் மட்டுமே வதிவிடப்பயிற்சி பெற்று வருகிறார்கள். ஏனையோர் தங்கள் வீடுகள் மற்றும் உறவினர்களது வீடுகளிலிருந்து நாள்தோறும் வந்து பயிற்சியை மேற்கொள்கிறார்கள்.

சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் ஐயாவிடம், பங்கு கொண்ட ஆலய நிகழ்வுகள் பற்றிய கேள்வியொன்றை முன்வைத்தபோது, இவ்வாறு பதிலளித்தார்.

"மகா கும்பாபிஷேகம் மற்றும் ஆலய மகோற்சவங்களின் போது சர்வபோதகராகவும், சர்வசாதகராகவும் கலந்து கொண்டு வருகிறேன். யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல கொழும்பு கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப் பகுதிகளிலும், லண்டன், சுவிஸ், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த நாடுகளிலுமுள்ள ஆலயங்களின் மகா கும்பாபிஷேகம் மற்றும் மகோற்சவங்களில் பங்குபற்றியிருக்கிறேன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலய கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். கொழும்பிலுள்ள கொச்சிக்கடை சிவன் கோயில், பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், செக்கடித்தெரு கதிரேசன் கோயில், திருக்கோணேஸ்வரம், சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயம் என்பன இவற்றுள் சிலவாகும். இந்தியாவின் திருப்பதி ஆலயத்தில் நடந்த யாகத்திலும், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் நடந்த ஹோமம் நிகழ்விலும் பங்குகொண்டுள்ளேன்".

இவர் கலந்து கொண்டுள்ள ஏனைய நிகழ்ச்சிகள் பற்றி கேட்டதற்கு, அந்தணப் பெருமக்கள் சம்பந்தப்பட்ட வைதீகக் கிரியைகளை குறிப்பாக சீமந்தம், திருமணம், உபநயனம் போன்றவைகளுடன், ஆசார்ய அபிஷேகம், சஷ்டியப்த பூர்த்தி என்பவைகளையும் நடத்தி வருவதாக தெரிவித்தார்.

சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்களுடன் கலந்துரையாடிய போது, குருக்கள் ஐயா தனிமனித செயற்பாடாக நடத்திவரும் தர்மசாஸ்தா குருகுலத்தின் சாதனைகள்பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

இதுவரையில் ஏராளமானோர் குருகுலத்தில் வேதாகமக் கல்வியை பயின்றுள்ளார்கள். இவர்களில் பெரும் பாலானவர்கள் உள்நாட்டிலும், சிலர் வெளிநாடுகளிலும் சிறந்த சிவாசாரியார்களாக ஆலயப் பணிகளில் பாராட்டத்தக்க வகையில் ஈடுபட்டுள்ளார்கள். ஒருகாலத்தில் யாழ் குடாநாட்டில் மகோற்சவ, கும்பாபிஷேகக் கிரியைகளை செய்து வைப்பதற்கு ஒருசில குறிப்பிட்ட சிவாசாரியார்களே இருந்தனர். இப்போது அந்த நிலை மாறிவிட்டது. தர்மசாஸ்தா குருகுலத்தில் கல்விபயின்ற மாணவர்கள் பலரை இன்று மிகத் திறமைவாய்ந்த சிவாசாரியார்களாக உருவாக்கி மகோற்சவ, கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைக்கும் அளவுக்கு உயர்த்திய பெருமைக்குரியவராக திகழ்கிறார் சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள்.

இவரது அறப்பணியைப் போற்றியும் பாராட்டியும் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் ஏராளமான விருதுகளும், பட்டங்களும் கிடைத்துள்ளன. இது பற்றிய விபரங்களையும் இவரிடமிருந்து தெரிந்து கொண்டோம்.

கொழும்பு சர்வதேச இந்துமத குருபீடம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஆன்மீகப் பெருவிழாவில் இவர் கௌரவிக்கப்பட்டார். வலிதெற்கு பிரதேச கலாசார பேரவை நடத்திய கலாசார விழாவின்போது "ஞான ஏந்தல்" பட்டமும், லண்டன் வேதாகம சபா நடத்திய இரு வெவ்வேறு விழாக்களின்போது வேதாகம கிரியா விசாரத, வேதாகம வித்யா விபூஷன் ஆகிய பட்டங்களும் கிடைத்துள்ளன. கொழும்பு வெள்ளவத்தை ஶ்ரீராமகான சபா இலங்கை பிராமணர் சங்கம் நடத்திய பவள விழாவின் போதும், லண்டன் ஈஸ்ட்காம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சிவஶ்ரீ நாகநாதசிவம் குருக்கள் நடத்திய பாராட்டு விழாவின் போதும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்கள் கடந்த நாற்பத்தைந்து ஆண்டு காலமாக நடத்திவரும் தர்மசாஸ்தா குருகுலத்தின் ஊடாக, ஆற்றும் தர்மப்பணியானது மிகவும் போற்றுதற்குரியது. தன் வழித்தோன்றிய அந்தணப் பெருமக்கள், தன்னைப் போல் வேத சிவாகம கல்வி தொடர்பான, அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற நன்னோக்கம் கருதி ஏட்டுச் சுவடிகளிலிருந்தும், பழம்பெரும் நூல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட பத்ததி முதலான பல விஷயங்களை தொகுத்து பத்துக்கும் மேற்பட்ட நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

அந்தண சமூகத்து மாணவர்களுக்கு வேத சிவாகமக் கல்வியைப் போதித்து, திறமையுள்ள சிவாசாரியப் பரம்பரையை உருவாக்குவதில் பெரும் வெற்றி கண்டுள்ள சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் அவர்கள் தனது வெற்றிக்கு தமது துணைவியார் பக்கபலமாக இருந்து வருவதைச் சொல்லிப் பெருமைப்படுகிறார். குருகுலக் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களையும் அன்போடு வரவேற்று உணவு, தேநீர் முதலான உபசாரங்களை மனநிறைவுடன் செய்து வருவதன் ஊடாக அந்த மாணவர்களின் பேரபிமானத்தைப் பெற்றுக் கொண்டவராக குருக்கள் ஐயாவின் துணைவியார் விளங்குகிறார்.

சிவஶ்ரீ மகாதேவக் குருக்கள் ஐயாவின் இத்தகைய தர்மப்பணி எதிர்காலத்திலும் மேலும் சிறப்பாகத் தொடருவதற்கு இறையருள் துணைநிற்க வேண்டும் என "இந்து ஒளி" வாழ்த்துகிறது.

மாமன்றத்தின் கௌரவம் பெறும் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம முதல்வர் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கிறது.



மகாதேவ ஆச்சிரமம் 1952 ஆம் ஆண்டில் கிளிநொச்சி ஜெயந்திநகரில் தவத்திரு வடிவேல் சுவாமிகள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர், யாழ்ப்பாணம் சிவகுருநாத பீடத்தின் (வேதாந்த மடம்) குரு முதல்வராகவிருந்து ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் அவர்களது சீடர்களுள் ஒருவராக விளங்கியவர். ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் சமாதி நிலையடைந்த பின்னர், வடிவேல் சுவாமிகளை கிளிநொச்சிக்குச் சென்று பணியாற்றும்படி யோகர் சுவாமிகள் கேட்டுக்கொண்டார். அதன்படி கிளிநொச்சி சென்ற வடிவேல் சுவாமிகள் தனது குருநாதரான ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் நினைவாக அவரது பெயரிலேயே ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த மகாதேவ ஆச்சிரமமாகும்.

இங்கு பலர் இவரது சீடர்களாக இணைந்து கொண்டு, சுவாமிகளது ஆன்மீகப் பணிக்குப் பெரிதும் உதவி வந்தனர். இவர்களுள் ஒருவர்தான் கணேசபிள்ளை அவர்கள். வடிவேல் சுவாமிகள் சமாதியடைவதற்கு முன்பதாக, தனக்குப் பின் ஆச்சிரம முதல்வராகவிருந்து ஆன்மீகப் பணியாற்றும் வகையில் கணேசபிள்ளை அவர்களுக்கு காவி வஸ்திரம் வழங்கி கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என்ற தீட்ஷா நாமம் சூட்டி பீடாரோகணம் செய்து வைத்தார். 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதியன்று வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்தபோது, மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைவசமய மரபுகளைப் பேணும் வகையிலும் பல்வேறு சமய, சமூகப் பணிகளைச் செய்துவந்தார். போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கும், அவர்களுக்குச் சமய, கலாசார விழுமியங்களைப் போதிப்பதற்கும் சைவச் சிறுவர் இல்லத்தை ஆரம்பித்தார். வன்னேரிக்குளத்தில் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தை ஆரம்பிப்பதற்கும் சுவாமிகளே காரணமாக இருந்துள்ளார்.

மகாதேவ ஆச்சிரமம் பல ஞானிகளின் திருவடிகள் பதிந்துள்ள இடமாகவும், அவர்களது அருளாசியைப் பெற்றுள்ள வகையிலும் அமைந்துள்ளது. மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வராக இருந்து ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆற்றி வரும் ஆன்மீக சமய சமூகநலப் பணிகளை எதிர்காலத்திலும் சிறப்பாகத் தொடர வேண்டும் என "இந்து ஒளி" வாழ்த்துகின்றது.

மாமன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நடைபெற்ற ஆன்மீக மாநாடு (05.08.2004) நிகழ்வின் போது மாமன்ற உறுப்பினர்களுடன் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள்..

ஆகஸ்ட் 14ஆம் திகதியன்று ஆடி அமாவாசை விரத தினமாகும். வழமைபோல இவ்வருடமும் ஆடி ஆமாவாசை தினத்தன்று கீரிமலையில் நீத்தார் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

ஆடி அமாவாசை விரத மகத்துவம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

விரதம் என்பது தவம், நோன்பு என்றும் கூறுவர். சைவ மக்கள் தெய்வங்களை நோக்கியும், பிதுர்கள் எனப்படும் தென்புலத்தாரை நோக்கியும், விரதங்கள் அனுட்டிக்கின்றனர். விரதம் என்பது பிரதிக்ஞையும் ஆகும். விரத காலங்களில் விரதமனுட்டிப்போர், விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், விலக்கப்பட்டவற்றைச் செய்யாது தவிர்த்தலும், அறம் எனக்கொண்டு, கடைப்பிடித்து ஒழுகுதல் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுவதாக சங்கல்பம் செய்து, விரதம் அனுட்டித்தல் விரத நியதியாகும்.

அமாவாசை, பூரணை ஆகிய புனித தினங்களில், அமரத்துவம் அடைந்து விட்ட தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக, அவர்களின் புத்திரர்களால், விரதம் அனுட்டிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் வருகின்ற அமாவாசை, பூரணைத் தினங்களில், இவ்விரதங்களைத் தவறாது அனுட்டித்து வருதல், பிள்ளைகளின் கடமையாகும். பிதுர் வழிபாட்டில் இவ் விரதங்கள் ஓர் அங்கமாகும். அவ்வாறே, ஆண்டு தோறும், தந்தை, தாயார் இறந்த தினங்களில், அவர்களின் பாவவினைகளை நீக்குதற்பொருட்டும் அவர்களின் ஆத்மா முத்தியின்பம் அடைதற் பொருட்டும் சிராத்தம் செய்தல் மூலம் பிதுர்க்கடன் நிறைவேற்றப்பட வேண்டும். சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம். திவசம் என்றும் திதி என்றும் இது கூறப்படும் வழக்கம் உள்ளது. புரட்டாதி மாதத்தில் வருகின்ற மஹாளய பட்சத்திலும், ஒருநாள் விரதமிருந்து மஹாளய சிராத்தம் செய்ய வேண்டியது புத்திரர்களின் கடமையாகும்.

தை, ஆடி மாதங்களில் வருகின்ற அமாவாசையும், சித்திரை மாதத்தில் வருகின்ற பூரணையும் சிறப்புடையன என்று சைவ ஆகமநூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை, தாயார் இறந்த திதிகளில் சிராத்தம் செய்யத் தவறியவர்கள், ஆடி அமாவாசையன்று இறந்த தந்தையை நோக்கியும், சித்திரா பூரணையன்று இறந்த தாயின் பொருட்டும் சிராத்தம், பிண்டதானம், தருப்பணம் என்பவற்றை நிகழ்த்தும் வழக்கம் உள்ளது.

இவ்விரதங்களை அனுட்டிப்பவர்கள், ஆசாரசீலர்களாக விரத நியமங்களைப் பேணி குறித்த தினங்களில் உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்க இயலாதவர் பகலில் ஒரு பொழுது புண்ணிய தீர்த்தங்களில் நீராடித், தோய்த்துலர்ந்த உடைகளை அணிந்து, தூயராய், பிதுர் தருப்பணம், பிண்டதானம், சிராத்தம் என்பவற்றை குருவின் வழி நடத்தலில் செய்தும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, பஞ்சபுராணம் ஓதல், என்பவற்றில் பங்குபற்றியும், இறைவனை வழிபட்டும், அந்தணர்களுக்குத் தானமும், உறவினர், விருந்தினர், ஏழைகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கு அன்னதானமும் வழங்கியும், அவர்களுடன் அமர்ந்து போசனம் செய்தும் விரதத்தை நிறைவு செய்வர். "புத்" என்ற கொடிய நரகத்தில் வீழ்ந்துவிடாது, பெற்றோரைக் காப்பாற்றுபவன், புத்திரன் ஆவான்.

ஆடி அமாவாசை விரத மகத்துவம் பற்றி நோக்குவோம். இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையும் உள்ள ஆறு மாதங்கள் உத்தராயணகாலம் எனப்படுகிறது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சஞ்சரிக்கும் காலப்பகுதி இதுவாகும். தேவர்களுக்குப் பகற்காலம் உத்தராயணம், ஆடிமுதல் மார்கழி வரையுள்ள ஆறுமாதங்கள் தட்சணாயணகாலம். சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய திசையில் சஞ்சாரம் செய்யும் காலம், தேவர்களுக்குத் தட்சணாயணம் இரவுக் காலம் என்பர்.

ஆடி மாதம், தடசணாயணத் தொடக்கமாதம் என்பதால் தெய்வ வழிபாடு, பிதுர் வழிபாடு செய்வதற்குச் சிறப்பான மாதம் எனக் கொள்ளப்பட்டு வருகிறது. அதனால், திருமணம், வீடு குடிபுகுதல் போன்ற உலகியல் சார்ந்த விழாக்கள், நிகழ்வுகள் என்பன ஆடி மாதத்தில் இடம் பெறுவதில்லை.

ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை, ஆடிக்கார்த்திகை, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு, ஆடிவேல்விழா, ஆடிவெள்ளி ஆகிய திருநாட்கள் சமய, ஆன்மீக ரீதியாக இந்துக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. கடவுள் வழிபாடு, பிதுர் வழிபாடு, விரதம் அனுட்டித்தல், தானதர்மங்கள் செய்தல் என்பவற்றில் ஈடுபடுவர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும்பொழுது ஏற்படுவது அமாவாசைத்திதி. சூரியனும் சந்திரனும் ஒரே இராசி வீட்டுக்குள் நிற்கும் காலம் என்று சோதிட நூல் கூறும். "அமா" என்றால் ஓரிடத்தில் பொருந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள் கொள்வர். "வாசி" என்றால் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தினையுடையது. எனவே, ஒரே இராசியில் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து அல்லது பொருந்தி உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படுகிறது. பின்னர் அமாவாசையாக மருவியுள்ளது. மாதத்தில் ஒருமுறை இந்நிலை உண்டாகி, அமாவாசை வருகின்றது.

ஒவ்வோர் அமாவாசைத் தினமும் பிதுர் வழிபாட்டிற்கும் பிதுர்க்கடன் நிறைவேற்றுதலுக்கும் மிக ஏற்ற புண்ணிய நாள். "தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்கிறது தமிழ் மறை. இல்லறத்தார் ஆற்றவேண்டிய ஐந்து முக்கிய கடமைகளுள் ஒன்று, தென்புலத்தார் ஓம்புதல் ஆகும். பிதுர்களைத்தான் தென்புலத்தார் எனக் கூறப்படுகிறது. சூரிய மண்டலத்திற்கு அப்பால் உள்ள தென்திசை மண்டலத்தில் பிதுர்கள் உறையும் பிதுர்லோகம் உள்ளது. பிதுர்களை "தென்புலத்தார்" என்று அழைப்பது தமிழ் மரபு.

தென்புலத்தார் வழிபாடு, பிண்டம் போடுதல், எள்ளும் தண்ணீரும் இறைத்தல் என்பன பண்டைய தமிழ்மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை என்பதற்கு இலக்கியச் சான்றுகள்

உள்ளன. இவையொன்றும் அந்நிய கலாசாரம் அல்ல என்பது கருத்திற்கொள்ளற்பாலது. அமாவாசை, பூரணை நாட்கள் தென்புலத்தார் வழிபாட்டிற்குரிய புனித தினங்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. தென்புலத்தார் கடன்களை நிறைவேற்றத் தவறினால் வாழ்க்கையில் துன்பங்கள், துயர்கள், இயற்கை அனர்த்தங்கள், நோய்கள், பிணிகள், விபத்துக்கள், துர்மரணங்கள், குடும்பத்தில் குழப்பங்கள், திருமணத்தடைகள், மணமுறிவுகள், தொழில்களில் வருவாயின்மை, பணக்கஷ்டம், எதிர்பாராத பொருள் மற்றும் தொழில் இழப்புக்கள் என்பன தவிர்க்கமுடியாதனவாகிவிடும். இதனை உணர்ந்து பிதுர்க்கடமைகளை முட்டின்றி நிறைவேற்றி வரவேண்டியது தமது நலத்திலும் குடும்பநலத்திலும், ஒட்டுமொத்தமாக வாழ்க்கை நலத்திலும், அமைதியிலும் சிரத்தைகொள்பவர்களின் முக்கிய கடமையாகும்.

ஆடி அமாவாசையன்று தந்தையை இழந்தவர்களும், சித்திரைப் பூரணை தினத்தில் தாயை இழந்தவர்களும், தவறாமல் விரதம் அனுட்டித்து பிண்டதானம், தருப்பணம், சிராத்தம் செய்து இயன்ற தான தருமங்கள் புரிந்து, ஆலய வழிபாடு செய்து, இறந்த தந்தை, தாய் ஆகியோரின் ஆத்மாக்கள், நரக வேதனைகளிலிருந்து விடுபடவும், நற்கதி பெறவும், சாந்தியடையவும் உதவ வேண்டியது ஒவ்வொருவரினதும் மாபெருங்கடமை என்பதை இந்துக்கள் நினைவிற் கொண்டு செயற்படுதல் வேண்டும். தவறினால் தவிக்க நேரிடும் என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறு பிதுர்க்கடன்களைச் செய்து வந்தால் பிதுர்களின் ஆசிகள் நமக்குக் கிட்டும், அதேவேளை பிதுர் சாபங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். பிதுர்கள் நமது காவல் தெய்வங்கள் ஆகும். பிதுர்களின் ஆசிகள் நமக்குக் கிடைக்கப்பெறின், எமது வாழ்வு ஒளி பெறும், சஞ்சலங்கள் நீங்கும், விபத்துக்கள், அவமிருத்துக்கள், கொடிய நோய்கள், கடன் தொல்லைகள் என்பவற்றிலிருந்து நாம் காப்பாற்றப்படுவோம். இது அநுபவ உண்மை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழவினைகள் பாறும், பாவங்கள் தொலையும். தீர்த்தங்கள் இறைவனின் திருவருள் செறிந்த புனித நீர்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல், பிதுர்வழிபாடு செய்தல், சிராத்தம், தருப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பன ஆண்டு தோறும் கீரிமலை நகுலேச்சரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறுபல சிவத்தலங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்குரிய விதி முறைகளை நம் முன்னோர்கள் வகுத்து நமக்கு வழங்கியுள்ளனர். அவற்றை உரிய அறிஞர்கள், குருமார்கள் ஆகியோரிடமிருந்து அறிந்து, நம் கடன்களை நிறைவேற்றினால், நற்பயன்கள் கிடைக்கப்பெறுவோம். நம் தாய், தந்தையின் உயிர்களும் ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றன. இது மகன், தனது தாய், தந்தையருக்காற்றும் மகத்தான பேருதவியாகும். அப்பொழுதுதான், "இவன் தந்தை என் நோற்றான் கொல் எனுஞ் சொல்" என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகின்றது.

"மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
பூந்தியன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ"

என்னும் பாடலுக்கமைய, மைந்தனைப் பெற்று அன்போடு வளர்த்து, சிறந்த கல்வியளித்து, அறிஞர் அவையில் முந்தியிரக்கச் செய்வதற்குத் தந்தையும், தாயும் எடுக்கும் இடையறா முயற்சிக்கு என்ன காரணம்? காரணம் இல்லாமல் காரியம் இல்லை. ஆம்! தந்தை, தாயார் இறந்த பின்னர் முறைப்படி செய்ய வேண்டிய அபரக்கிரியைகளை, நிறைவேற்றுவதற்கும் பிதுர் கட்ன்களைச் செய்வதற்கும் பின்னர் ஆண்டு தோறும் அவர்களின் பொருட்டு சிராத்தம் செய்வதற்கும், அமாவாசை, பூரணை விரதங்களை அனுட்டிப்பதற்கும், அவற்றின் மூலம் இறந்த உயிர்கள் சாந்தி பெறுவதற்கும், முத்தியின்பம் அடையப்பெறுவதற்கும், புத்திரர்களின் அறிவுபூர்வமான, சிரத்தைபூர்வமான உதவி தேவை என்பதற்காகவேயாகும். எனவே, பெற்றோரின் நோக்கத்தை உணர்ந்து, ஆடி அமாவாசையின் மகத்துவத்தை அறிந்து, அத்தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து, சைவ ஆசாரங்கள் பேணி, நம் முன்னோர்களின் நல்லாசிகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!

மாமன்றச் செய்தி

அமரர் வே.பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் வே.பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரையும் "தில்லை என்னும் திருத்தலம்" நூல் அறிமுக நிகழ்வும் இம்மாதம் (ஜூலை) 5ஆம் திகதியன்று மாலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தின் போது வீரகேசரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. குமார் நடேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"தில்லை என்னும் திருத்தலம்" நூலாசிரியரான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி சந்திரிக்கா சுப்ரமண்யன் "சிதம்பர இரகசியம்" என்னும் பொருளில் நினைவுப் பேருரையாற்றினார். கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா நூல் விமர்சனத்தை வழங்கினார்.

மாமன்றப் பொதுச் செயலாளரான கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வின் இறுதியில் திருமதி சாந்தி பாலசுப்ரமணியம் அவர்களது ஏற்பாட்டில் அனைவருக்கும் இராப்போசனம் வழங்கப்பட்டது.

ஆன்மீகம் நிறைந்த ஆடி மாதம்

கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

ஆடி மாதம் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட சடங்குகளுக்கென அமைந்திருக்கிறது என்பது கண்கூடு. இம்மாதத்தில் மங்கல காரியங்கள் இடம்பெறுவதில்லை. பிதிர் காரியங்களுக்குச் சிறப்பான மாதமும் இதுவேதான். உதாரணமாக ஆடி மாதம் முதலாவது நாளன்றே யாம் ஆடிப்பிறப்பைக் கொண்டாடுகின்றோம். இ.்.து எமது முன்னோர்கள் வழி வந்த விஷயமாகும்.

ஆடி மாதத்தில் இடம்பெறும் சிறப்புக்கள் பல. அவையாவன ஆடிப்பிறப்பு, ஆடிப்பெருக்கு, ஆடிவெள்ளி, ஆடிச்சுவாதி, ஆடிப்பௌர்ணமி, ஆடிக்கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், நாகபஞ்சமி, வரலட்சுமி விரதம், ஹயக்கிரீவ விரதம், ஆடி மாத திருத்தொண்டர் குருபூசை என்பனவாம்.

ஆடிப்பிறப்பென்றதும் எமக்குப் பின்வரும் பாடல் வரிகள்தான் மனதில் எழும்.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!.....''

இ.்.து நவாலியூர் சோமசுந்தரப் புலவரது பாடலின் ஆரம்ப வரிகளாகும்.

ஆடிப்பிறப்பன்று, பிதிர்கள் பூமியிலே அவரவர் வாழ்ந்த இல்லங்களுக்கு வருவதாகக் கொண்டு அவர்களுக்கு, கொழுக்கட்டை, கூழ் படைத்து, மகிழ்வித்து அவர்களது ஆசிகளைப் பெறுதல் சைவப்பெருமக்களது பாரம்பரியமும் பண்பாடும் ஆகும்.

''ஆடி விதை தேடி விதை'' என்னும் முதுமொழிக் கிணங்க இம்மாதத்திலே, வயல்களிலே விதைவிதைத்தல் இடம்பெறும். ஆடிப்பூரம் அம்பிகை இறைவனைத் திருமணம் செய்த நாள் எனப் புராணங்கள் கூறியுள்ளன. ஆலயங்களில் இப்புண்ணிய திருநாளில் தீர்த்தோற்சவம் இடம் பெறுவது மரபு.

ஆடிக்கிருத்திகை முருகப்பெருமானுக்குரிய திருநாள். அடுத்து ஆடி மாத வளர்பிறை துவாதசிநாள் வரை, துளசிச்செடியை வழிபட்டால் நீண்ட ஆயுளும், குடும்பத்தில் சௌபாக்கியமும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஆடி பதினெட்டாம் நாளன்று காவிரிக் கரையோரங்களில் பெருவிழா இடம்பெறும். அன்றைய தினம் சுமங்கலிகளும் கன்னிப் பெண்களும் ஆற்றங்கரையில் பொங்கல் பூசை நிகழ்த்தி ஆடிப்பாடி காவிரி அன்னைக்கு சிறப்பு வழிபாடு செய்வர். இது ஆடிப்பெருக்கின் சிறப்பாகும். ஆடி பதினெட்டாம் நாள் தமிழ் நாட்டில் ஸ்ரீரங்க தலத்தில் அருளாட்சி புரியும் ஸ்ரீரங்கப்பெருமானார் காவிரி அன்னைக்கு சீர்வரிசைகள் அளிப்பதாக வருடந்தோறும் விழா இடம் பெறுதல் வழக்கம். இவ்வைபவம் ஸ்ரீரங்கம் அம்பாள் திருமண்டபம் படித்துறையில் இடம்பெற்று வருகின்றது. இப்புண்ணிய நன்னாளிலே சிவனாலயங்களிலும் அம்மன் கோவில்களிலும் சிறப்பு பூசை ஆராதனைகள் விழாக்கள் இடம் பெறுவதும் வழமையாகும்.

இத்தினத்திலேதான் ஹயக்கிரீவர் அவதாரமும் இடம்பெற்றது. தட்சிணாயனம் ஆரம்பிக்கும் மாரி காலம் ஆரம்பத்திலேதான் பூமாதேவி அவதரித்தாள்.

ஆடிச்செவ்வாயும் முருகப்பெருமானுக்கும் அம்பிகைக்கும் விரதமனுட்டிக்கும் புண்ணிய தினமாகும். ஆடிச்செவ்வாய் விரதம் அனுட்டிப்பவர்கள் தொடர்ந்து ஏழு வருடங்கள் இவ்விரதத்தை அனுட்டித்தல் முறையாகும். இவ்விரதத்தை கன்னிப் பெண்கள் திருமணம் வேண்டி அனுட்டிப்பர். ''ஆடிச்செவ்வாய் தேடிப்பிடித்தால் நாடிய கணவன் வீடு வருவான்'' என்கின்றது ஒரு பழமொழி.

எல்லா மாதத்துக் கிருத்திகைகளும் சிறப்புடையனவே. இருப்பினும் ஆடிக்கிருத்திகைக்குத் தனிச்சிறப்புண்டு. தேன்தமிழ் நாட்டுத் தனிப்பெருங் கடவுளான முருகப்பெருமானுக்கு ஆடிக்கிருத்திகையும் உத்திராயணம் ஆரம்பிக்கும் தைமாதக்கிருத்திகையும் மிக சிறப்பு வாய்ந்த புண்ணிய தினங்களாகும்.

''இந்ததல் விரதந்தன்னை ஈண்டொரு மறையோன் நோற்று
முந்திய மனுவேஆகி முழுஉலகு அதனை ஆண்டான்
அந்தணன் ஒருவன் பின்னும் அவ்விரதத்தைப் போற்றி
சிந்தையில் நினைத்தவை ஆங்குஎய்தி திரிசங்கு ஆகியுற் றான்''

நிறைவாக ஆடிமாதத்தில் இடம் பெறும் நாயன்மார்களது குருபூசைத் தினங்களை நோக்குவோம்:

ஆடிக்கிருத்திகை :- மூர்த்தி நாயனார் குருபூசை, புகழ்ச்சோழநாயனார்.
ஆடித்திருவாதிரை :- கூற்றுவ நாயனார்.
ஆடிச்சுவாதி :- சுந்தர்மூர்த்தி நாயனார்.
சேரமான் பெருமாள் நாயனார்
ஆடிக்கேட்டை :- கலியநாயனார்,கோட்புலி நாயனார்.

எனவே, ஆடிமாதத்து ஆன்மீகத் திருநாட்களை முறைப்படி அனுட்டித்து ஆனந்த அருள் பெறுவோமாக!

பல்துறை வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள்

கு. குஷ்யந்

இம்மாதம் (ஜூலை) 19ஆம் திகதியன்று சுவாமிகளது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. மாமன்றம் யாழ் நகரில் நடத்தும் இந்து ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு இடம் பெறும் மண்டபத்திற்கு சுவாமி விபுலானந்தர் அரங்கு என பெயர் சூட்டப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

விபுலானந்த அடிகளார் இலங்கையில் பல பாகங்களிலும், இந்தியத் தேசியத் துணைக் கண்டத்தின் பல பிரதேசங்களிலும், நற்பணி புரிந்த பெரியார் ஆவார். அவர் தமிழ்மொழி சைவசமயம், இந்துக்கல்வி விருத்தி ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கியவர். கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தின் தெற்கேயுள்ள காரைதீவில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் சாமித்தம்பியும் கண்ணம்மையும் ஆவார்கள். இவரின் இளமைப் பெயர் மயில்வாகனம்.

இவர் இளமையில் வைத்தியலிங்க தேசிகர், குஞ்சித் தம்பி ஆகியோரிடம் கல்வி பயின்றார். விபுலானந்தர் சமயத்துறையில் ஈடுபட்டுச் சாதனைகள் பல நிலைநாட்ட இவர்களே அடித்தளம் அமைத்தனர் எனலாம். இவர் இளமையில் பெற்ற தமிழ்க் கல்விப் பயிற்சியை விருத்தி செய்து, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சையில் சித்தியெய்திய முதல் இலங்கையர் என்ற பெயரை நிலை நாட்டினார். பின்பு ஆசிரியராக, அதிபராக விளங்கி பல கல்விப் பணிகளைப் புரிந்தார். பிரபோதசைதன்னியர் என்னும் பிரமச்சரியம் பெற்று விளங்கிய இவர் 1924இல் துறவு நியமங்களில் பயிற்சி பெற்றபின் விபுலானந்தர் என்னும் பெயரினைப் பெற்றார்.

இவருடைய சமயப் பணிகள் அறிவூட்டல் பணிகளாகவே அமைந்தன. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தல், பக்திப் பாசுரங்களை பாராயணம் செய்தல், வார இறுதியில் சைவ சமய வகுப்பு நடத்தல், பண்ணிசைப் பயிற்சி நடத்தல் முதலான சமயக்கல்வி முயற்சிகளில் ஈடுபட்டார். தெய்வங்களின் மீது பல பக்திப் பாடல்களைப் பாடினார். அவை தொடர்பாக இயற்றப்பட்ட பிரபந்தங்கள் வருமாறு, கணேச தோத்திரப் பஞ்சகம், கதிரை வம்சம்பதி காணிக்கப் பிள்ளையார் இரட்டைமணிமாலை, சுப்பிரமணிய சுவாமி மணிமாலை, குமரவேல் நவமணிமாலை, மகாலெட்சுமி தோத்திரம். மேலும் சமயப் பிரசங்கம் புரிதல், ஈழசேகரி, விவேகானந்தன், கலை மகள் இராமக்கிருஷ்ண விஜயம் போன்ற சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகள் எழுதுதல் ஆகிய பணிகளையும் புரிந்தார். இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கிக் கருத்துரை வழங்கிப் பணி புரிந்துள்ளார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், கல்வி அபிவிருத்திக்கும் அடிகளார் புரிந்த பணிகள் போற்றத் தகுந்தவை. இளமையிலேயே பாரதம், நன்னூல், நிகண்டு, சூடாமணி, திருக்குறள் ஆகியவற்றை கற்றுப் பல செய்யுள்களை யாத்தார். அதனூடாகத் தமிழ் மொழியை வளப்படுத்தினார். தமது பன்னிரண்டாவது வயதில் குழந்தைப் புலவர் எனப்பெரும் பாராட்டுப் பெற்றார். கங்கையில் விடுத்த ஓலை, ஈசன் உவக்கும் இன்மலர்கள் என்பனவும் அடிகளாரின் உயரிய சிந்தனையின் விளைவாக உருவாகிய இலக்கியங்கள் ஆகும்.

மொழி பெயர்ப்பு பணிகள் மூலமும் தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்துள்ளார். கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தரின் சம்பாஷணை என்பன அடிகளார் மொழிபெயர்த்த நூல்களாகும். இவை தவிர ஆங்கிலப் புலவர்களின் படைப்புக்களும் தமிழ்மொழியில் பெயர்க்கப்பட்டது. நவநீத கிருஷ்ணபாரதி பாடிய தனிச் செய்யுள்களின் தொகுப்பாகிய உலகியல் விளக்கம் என்னும் நூலின் பதிப்பாசிரியராகவும் பணிபுரிந்தார். இராமகிருஷ்ண சங்கத்தின் ஆங்கில மொழி இதழ்களான வேதாந்த கேசரி, பிரபந்த பாரதம் என்பவற்றின் ஆசிரியராகவும் பணி புரிந்து தமிழ் மொழி பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவர் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுகின்றார். இவரால் எழுதப்பட்ட நூல்களுள் யாழ் நூல் மிகவும் பிரபல்யமானது. தமிழ் இசைக் கலை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. அத்துடன் இலங்கைக் கல்வித் திணைக் களத்தின் பாடநூற்சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பவற்றின் உறுப்பினராக இருந்து ஆக்கபூர்வமான பணிகள் புரிந்துள்ளார். இந்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகவும் கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மகாகவி பாரதியின் புகழைத் தமிழக மெங்கும் பரப்பினார்.

1925இற்குப் பின்னர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய விபுலானந்தர் இராமகிருஷ்ண மிஷனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளை அமைத்தார். அவற்றுள் தனது குருநாதர் சிவானந்தர் பெயர் தாங்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறு தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றிய அடிகளார் 1947இல் இம் மண்ணுலக வாழ்வைத் துறந்து புகழ் உடம்பு எய்தினார்.

(மாமன்றப் பொன்விழா மலர் – 2005)

சைவர்களுக்கான கலங்கரை விளக்கு
நாவலர் பெருமான்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்

இலங்கை வரலாற்றில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய அறிஞர்களில் நாவலர் முதன்மையானவர். தமிழையும் வடமொழியையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்த நாவலர் பெருமான் தம் பதிப்புப் பணியாலும் மொழிப்புலமையாலும் தமிழுக்கு வளம் சேர்த்து சைவ வளர்ச்சிக்கு தமிழைக் கருவியாகப் பயன்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தவர். இவர் சிவபரம்பொருளில் மாறாத பக்தி விசுவாசம் கொண்டிருந்தவர். அதனாலே சைவ நூல்களை முயன்று கற்றவர். அதில் புலமை பெற்றவர் இதன் காரணமாக சைவர்கள் அனைவரும் சைவசமய உண்மைகளை அறிந்து சைவ ஒழுக்கத்தைப் பேணி வாழ்வதாலே இவ்வுலகிலும் மறுமையிலும் சிவனின் அநுக்கிரகத்தினால் சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ முடியும் என்பதை தெளிவுடன் சைவமக்கள் அனைவருக்கும் எடுத்துக் கூறியவர்.

நாவலர் செயற்பட்ட களம் சைவ சமயம் என்னும் சமய பண்பாட்டுக்களம். மனிதனைப் புனிதனாக்கி தெய்வீக நிலைபெறச் செய்யும் சைவப்பண்பாட்டை சைவர்களிடையே நிலைபெறச் செய்யும் வகையிலேயே அவர் தம் தொண்டு நிகழ்ந்தது. எனவே பிற மதத் தாக்கத்தால் தம் உண்மைச் சமயத்தை விடுத்து ஆங்கிலக் கல்விக்கும், உத்தியோகத்துக்குமாக மோகித்த மக்களையும் சைவ சமய அறியாமையிலிருந்த சைவர்களையும் சைவ உண்மைகளை அறிந்து தெளிந்து அவ்வழி வாழ வழி செய்த கலங்கரை விளக்கே பெருமானார்.

அறவாழி அந்தணனாக சிவன் விளங்குகின்றான் என்ற சைவ உண்மைக்கு விளக்கமாகவும், அதை விளக்கும் கலங்கரை விளக்காகவும் நாவலர் வாழ்ந்தமையினாலன்றோ அவரை நாவலர் பெருமான் என சைவர்கள் போற்றுகின்றனர். சைவம் சிவசம்பந்தமானது. சிவம் அறம் சம்பந்தமானது. அறம் என்பது கடமை எனப்படும். ஔவையார் "அறம் செய விரும்பு" என்றார். தனது கடமையை விருப்புடன் ஒருவன் செய்ய வேண்டும் என்பதே சைவ அருளாளர்களின் நிலைப்பாடாகும். சைவர்களின் கடமை என்ன என்பதை சைவ நூல்களின் வழியிலும் தன் வாழ்வாலும் எடுத்துக் காட்டிய மாமனிதனே நாவலர்.

எல்லோரிடத்திலும் இறைவன் வாழ்கின்றான். எனவே சீவப்பணியே சிவன் பணி என சைவர்கள் வாழ வேண்டும் என்றும், மக்கள் பசிப்பிணியைப் போக்குவது சைவர்களின் பிரதான கடமை என்பதையும் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட வேளை சமய பேதம் பாராட்டாது அவர் செய்த கஞ்சித் தொட்டித் தருமம் பறை சாற்றுவதாகும். கிறிஸ்தவர்களின் மதமாற்றச் செயற்பாட்டை வெகுவாக எதிர்த்துப் போராடிய சைவ சமயப் போராளி ஆகிய நாவலர் ஜீவகாருணியத்தைப் பேணும் மனிதனே சைவன் என்பதை கஞ்சித் தொட்டி தரும் மூலம் உலகறிய வைத்தார். எனவே நாவலர் என்ற மாமனிதர் உலகில் உயர்ந்த நெறி சைவம் என்பதையும், அது அன்பே சிவம் எனக் கூறுவதையும், எனவே உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதனாலேயே இறையருளுக்குப் பாத்திரமாக முடியும் என்பதையும் சைவர்களுக்கு மாத்திரம் அல்லாமல் ஏனைய மதத்தவர்களுக்கும் உணர்த்தியவர்.

"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தந்தோய் போல் போற்றாக்கடை"

என்பது உலகப் பொதுமறை. நாவலர் பெருமான் அன்பொழுக்கம் உடையவரே சைவர் என்பதையே கஞ்சித் தொட்டித் தர்மத்தினால் உலகுக்கு உணர்த்தினார்.

ஈழநாட்டிலும் தமிழகத்திலும் சைவத்தை நிலைநாட்ட நாவலர் எடுத்த முயற்சிகள் பற்பல. அவற்றிலே கிறிஸ்தவர்களாக மதம்மாறிய சைவர்களைத் திரும்பவும் சைவசமயத்தைக் கடைப்பிடிக்க வைத்தமையும், கிறிஸ்தவத்திற்கு செல்ல விரும்பியோரை செல்லவிடாது காப்பாற்றியமையும் குறிப்பிடத்தக்கவை. நாவலரின் நாவன்மையும் அவரிடத்திலிருந்த சைவ ஆசாரமுமே மேற் போந்த செயற்பாடுகளுக்குக் காரணமாயின. அத்துடன் அவரின் கண்டன நூல்களும் சைவர்களுக்கு கலங்கரை விளக்காக செயற்பட்டன. நாவலரின் சைவதூஷண பரிகாரம் என்னும் நூல் சைவசமய உண்மையைத் தெளிவுபட விளக்கிச் சைவத்தின் பால் சைவர்களை மிக ஈர்க்கக்கூடிய வகையில் அமைந்ததொன்றாகும். நாவலரின் சைவசமயப் பேச்சுக்கள், பிரசங்கம் என்பன கேட்டார்ப்பிணிக்கும் தகையன. நாவலரின் பிரசங்கம் சைவத்திற்கு உயிர்ப்பையும் மெருகையும் ஊட்டியது. சைவ வாழ்க்கையை உள்ளபடி அறிந்து வாழ்வதற்கு அவரின் சைவப்பிரசங்கம் பெருவழி செய்தது.

உலகவாழ்க்கை இறைவனை அடைவதற்கே என்ற உண்மையை உணர்ந்த நாவலர், "நமக்கு இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும்

பொருட்டே" என்று கூறுவது நோக்கற்பாலது. நாம் உடலையும் உள்ளத்தையும் தர்மநெறியில் சிவநெறியில் ஈடுபடுத்தும் போதே நாம் இறையருளுக்குப் பாத்திரமாக முடியுமேயன்றி வேறெவ்வழியிலும் பெற முடியாது என்பதைத் தம் எழுத்துக்களிலும் பிரசங்கங்களிலும் எடுத்துக்கூறியிருந்தார்.

கோயில் அதிகாரிகளதும் சமய குருமாரினதும் தவறுகளைக் கண்டுபிடித்துப் பிரசுரம் எழுதியவர் நாவலர். ஏனெனில் சைவசமயி என்பவன் தர்மநெறியினின்று பிசகக்கூடாதென்பதை ஆகமங்கள், புராணங்கள், பத்ததிகள், தோத்திரங்கள் போன்ற சமய நூல்கள் மூலம் அறிந்து சிவதர்மத்தை முறையாக அனுட்டித்த பெருமகனானார் அவர். யோகர் சுவாமிகள் "சாதனை உள்ள சத்துக்கள் காண்பரே" என்று கூறுவது நாவலர் வாழ்வில் சாத்தியமானது. நாவலர் சிவத்தின் மேல் தீராத பக்தி கொண்டு அச்சிவத்தை அடைவதற்கான நெறியில் ஒழுகியவர். எனவேதான் அந்நெறியை மக்களுக்கும் தன்வாழ்வால் எடுத்துக்காட்டி சைவர்களுக்கான கலங்கரை விளக்காகத் திகழ்கின்றார்.

திறம் கொண்ட அடியார் மேல் தீவினை நோய்வாராமே
அறம் கொண்டு சிவத்தன்மம் உணர்த்த பிரான் ...."

எனச் சிவப்பரம்பொருளே சிவதர்மத்தை உலகம் உய்ய உரைத்தருளினார் என்று சம்பந்தப் பெருமான் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. சிவதர்மம் என்பது சைவ மெய் நெறிச் செயற்பாடாகும். "சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறலரிது" என்றார் அருள் நிலைத்த சிவனடியார். இவ்வகையில் அறம் இருக்கும் இடத்தில் தான் நீதி இருக்கும். நீதி இருக்கும் இடத்தில் தான் சிவத்தின் அருள் இருக்கும். அப்போதுதான் வாழ்க்கையில் சாந்தி சமாதானத்துடன் வாழ முடியும். இவ்வகையில் மேன்மைகொள் சைவநீதி விளங்கிப் பொலிய கலங்கரை விளக்காய் திகழ்பவர் தான் நாவலர் பெருமான். எனவே தான் அவரை ஐந்தாம் குரவர் எனச் சைவ உலகு ஏற்றிப் போற்றுகின்றது.

எனவே, நாவலர் வழியை நாம் பின்பற்றி வாழ்வில் உய்திபெறுவோமாக!

மாமன்றத்தில் நூல் வெளியீடு நிகழ்வு

ஆசிரியர் கு. பாலசுப்பிரமணியக் குருக்களின் 25ஆம் ஆண்டு சிராத்த தின நினைவும் நூல் வெளியீடும் எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதியன்று மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மாமன்றத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வுக்கு, மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமை தாங்குவார்.

இந்துப் பண்பாட்டு மரபில் பிதிரர் வழிபாடு, மகோற்சவ கிரியா தத்துவ விளக்கம், தத்துவ சிந்தனை மரபில் சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மா ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்படவிருக்கின்றன.

முன்னர் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி அலுவலராகப் பணியாற்றி தற்போது அவுஸ்திரேலியாவிலிருக்கும் சைவப் புலவர் சிவஸ்ரீ பால. இந்திரக்குருக்கள் (எம்.ஏ) மேற்படி நிகழ்வுக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

கிழக்கில் இந்து ஆராய்ச்சி மாநாடு

மாமன்றத்தின் அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாமன்றம் நடத்தும் இந்து ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் டிசெம்பர் மாத முற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறவிருக்கிறது.

மேற்படி ஆராய்ச்சி மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் மாமன்றத்திற்கு எழுத்துமூலம் அறியத்தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்து சமய விழாக்களும் விரத நாட்களும் (ஆகஸ்ட், செப்டம்பர் – 2015

ஆகஸ்ட்

03 –	திங்கள்	:	சங்கடஹர சதுர்த்தி
08 –	சனி	:	கார்த்திகை விரதம்
10 –	திங்கள்	:	ஏகாதசி விரதம்
12 –	புதன்	:	பிரதோஷ விரதம்
14 –	வெள்ளி	:	ஆடி அமாவாசை விரதம்
16 –	ஞாயிறு	:	ஆடிப்பூரம்
18 –	செவ்வாய்	:	நாக சதுர்த்தி விரதம்
19 –	புதன்	:	கருட பஞ்சமி
20 –	வியாழன்	:	சஷ்டி விரதம்
25 –	செவ்வாய்	:	ஆவணி மூலம்
26 –	புதன்	:	ஏகாதசி விரதம்
27 –	வியாழன்	:	பிரதோஷ விரதம்
28 –	வெள்ளி	:	வரலஷ்மி விரதம், ஆவணி ஓணம்
29 –	சனி	:	பூரணை விரதம்

செப்டம்பர்

02 –	புதன்	:	சங்கடஹர சதுர்த்தி
04 –	வெள்ளி	:	கார்த்திகை விரதம்
05 –	சனி	:	ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
09 –	புதன்	:	ஏகாதசி விரதம்
10 –	வியாழன்	:	பிரதோஷ விரதம்
12 –	சனி	:	அமாவாசை விரதம்
17 –	வியாழன்	:	ஆவணி சதுர்த்தி விரதம்
18 –	வெள்ளி	:	ரிஷி பஞ்சமி
19 –	சனி	:	சஷ்டி விரதம்
24 –	வியாழன்	:	பரிவர்த்தன ஏகாதசி விரதம்
25 –	வெள்ளி	:	பிரதோஷ விரதம்
27 –	ஞாயிறு	:	பூரணை விரதம் உமாமகேஸ்வர விரதம்

சிவ நாமத்தின் பெருமை

கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா,
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

வேதத்தின் சாரம்சமாக இருப்பது ஸ்ரீருத்திரம். ஸ்ரீ ருத்திரத்தில் சங்கர ஸ்வரரூபத்துக்கு அடுத்தபடியாக சிவஸ்ரூபம் சொல்லப்பட்டிருக்கிறது.

சாதாரணமான ஜனங்கள் தெரிந்தும் தெரியாமலும் ஜன்மாந்திரங்களில் செய்த பாவத்தைப் போக்க சுலபமாக உபாயம் நம் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? என அறிய முற்படுகின்றார்கள். ஒரேவழிதான் உண்டென்று தெரிகிறது. நாம் சாஸ்திரங்களை நம்புகின்றோம். கோயிலுக்குப் போகிறோம். மற்ற மதத்தவர் களிற் சிலர் "உங்கள் மதத்தில் பாவத்தை பரிகரிக்க வழி இல்லை. எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளித்தால் பாவம் எல்லாம் போய்விடும். ஆகையால் எங்கள் மதத்திற்கு வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள்.

அதைக் காட்டிலும் சுலபமான மார்க்கம் நமது மதத்தில் இருக்கின்றதென்று தெரிந்துகொண்டிருந்தால், கூப்பிடுகிறவர்களைப் பார்த்து, "முதலில் எங்களை கூப்பிடும் பாவத்தைப் பரிகாரம் பண்ணுங்கள்" என்று சொல்லுவோம். பாவ, பரிகாரத்துக்கு சுலபமான வழி பாவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சுகாசாரியர் ஏழு நாளில் பரீட்சித்துப் பாகவதத்தை உபதேசித்தார். அந்தப் பாகவதத்தில் தாஷாயணியின் கதை வருகிறது. அதில் மோட்சம் அடைய ஓர் உபாயம் சொல்லப்பட்டிருக்கிறது.

தாஷாயணி என்பது அம்பிகையின் பெயர். பார்வதியாக வருவதற்கு முன்பு தஷனுக்குப் புத்திரியாக அம்பிகை அவதரித்த பொழுது தாஷாயணி எனும் பெயருடையவளாக இருந்தாள். தஷன் சிவனை நிந்தித்தான். அதனால் அவனுக்குப் பெண்ணாக இருப்பது கூடாதென்று நினைத்து தேகத்தை விட்டுவிட்டுப் பார்வதியாக அவதரித்தாள். தஷன் சிவத் துவேஷம் உடையவனாக இருந்தான். 'சிவ" என்பதற்கு பரமமங்களம் என்று அர்த்தம்.

பரிமளம் என்று அப்பையதீஷிதர் ஒரு கிரந்தம் (நூல்) எழுதியிருக்கிறார். வாசஸ்பதிமிச்சர் பாமதி என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதனுடைய வியாக்கியானம் கல்பதரு என்பது. அதனுடைய வியாக்கியானந்தான் பரிமளமென்பது. அந்தப் பரிமளத்தை ஒருவர் கண்டனம் செய்தார், அவர் கண்டனம் செய்தாரென்று யாரோ வந்து அப்பையதீஷிதரிடம் சொன்னார். அப்பெரியவர் மூக்கைப் பிடித்துக்கொண்டார். பரிமள கண்டனம் செய்தால் அபரிமளந்தானே உண்டாகும்! அதுபோல தஷன் சிவஸ்வரூபத்தைத் துவேசித்தான். சர்வமங்கள மூர்த்தி சிவன். சிவனிடம் துவேசம் வந்தால் அவர்களிடம் அசிவந்தான் இருக்கும். அதாவது அமங்களம் அகல்யாணம் தான் இருக்கும்.

தாஷாயணி தஷனைப் பார்த்து "என்ன பாவம்! நீ சிவத்துவேஷம் பண்ணுகிறாய். உனக்கு அமங்களம்தான் வந்துசேரும்" என்று சொல்லுகிறாள். இந்தக் கருத்துப்பட சுலோகத்தின் பின்பாதியில் நல்லது சொல்லி யிருக்கிறது. முன்பாதியில் தஷன் சமாசாரம்.

இந்தச் சுலோகம் அம்பிகையின் வாக்கியம். யாராவது முன் காலத்தில் உடன் கட்டை ஏறினால் அவர்களுடைய துணியை வைத்து ஆராதனம் செய்வார்கள். அவர்கள் ஆத்மஞானியின் நிலையை அடைந்தவர்கள். எல்லாவற்றையும் தியாகம் பண்ணும் சக்தி இருப்பதால் அவர்கள் பூஜிக்கப்படுகிறார்கள்.

அம்பிகை அந்த நிலையிலிருந்து சொன்னது இது. அந்த சமயத்தில் சொன்ன சத்தியத்திற்கு விலையேயில்லை. அக்கினி குண்டத்தில் பாதி விரத்தியத்தை காப்பாற்றிக்கொள்ளச் சரீரத்தியாகம் செய்யும் பொழுது சொன்ன வார்த்தையைவிட சத்தியமான வேறு வார்த்தை கிடையாது.

பாவத்தை ஒரே கணத்தில் துவம்சம் பண்ணும் ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்துவை பல இடங்களுக்குப் போய்த் தேடவேண்டாம். இரண்டு எழுத்துக்களாலான பெயர் அது. சகல வேதங்களுக்கும் மத்தியில் இருப்பது அது. அதுவே வேதங்களின் ஜீவரத்தினம். கோயிலில் மகாலிங்கம் போலவும், தேகத்தில் உயிர் போலவும் அது வேதங்களின் மத்தியில் இருக்கிறது.

அது என்ன? "சிவ எனும் மங்களம் பொருந்திய நாமம். அதை என்ன செய்யவேண்டும்? - சிவ என்று வாக்கினாற் சொல்லவேண்டும். யார் சொல்லவேண்டும்? - மனிதனாகப் பிறந்தவன் சொல்லவேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்லலாம். அதைச் சொல்லுவதற்காகத்தான் நாக்கு இருக்கிறது. மனிதன் அதைச் சொல்லாவிட்டால் "நாக்கினால் செய்யக் கூடியதை இவன் செய்யவில்லை. இவனுக்கு நாக்கு கொடுத்தது பிரயோஜனமில்லை" என்று பரமேசுவரன் திரும்பி வாங்கிவிடுவான். ஆகையால் எல்லோரும் அதைச் சொல்லியாக வேண்டும். சண்டாளனும் சொல்லவேண்டும். அந்தளவு தூரம் சிவநாமோச்சாரணம் முக்கியமானதும் பெருமைமிக்கதுமாகும்.

அதை ஒருதரம் சொன்னாற்போதும். கவனமாகச் சொல்லவேண்டும். வேறொரு காரியத்துக்கு நடுவிலும் சொல்லலாம். சொன்னால் கணத்திலேயே அது பாவத்தைப் போக்கிவிடும்.

இந்த விஷயம் பாகவதத்தில் சொல்லியிருப்பது விசேஷம். சிவபுராணத்தில் சொல்லப்பட்டிருந்தால் தோத்திரம் என்று

சொல்லிவிடலாம். பாகவத்திலேயே விஷ்ணு தோத்திரம் இருந்தால் அது அவ்வளவு விசேஷமானதல்ல. அதிலும் இது உத்தமத்திலும் உத்தமமான காலத்தில் சொன்னது. சுகாசாரியர் பரீஹித்துக்குச் சொல்லும் சத்தியவாக்கியம்.

பரமேசுவரனுடைய கீர்த்தியை நாம் வாக்கினால் சொல்லுவதனாலும் கேட்பதனாலும் பவித்திரர்களாகிறோம். அவருடைய ஆஜ்ஞையை யாரும் மீறமுடியாது. அவரால் எல்லாம் சுற்றுகின்றன. அகம்பாவமாக இருக்கும் பொழுது அவர் சிஹிக்கிறார். குழந்தைகள் ஏதாவது தப்புச் செய்தால் நாம் அடிக்கிறோம். அதுபோல பரமேசுவரன் தேவதைகளைச் சிஹித்தார். காளகூடவிஷம் பாற்கடலில் உண்டானபொழுது அதைச் சாப்பிட்டு அவர்களை ரட்ஷித்தார். சகல தேவதைகளும் பரமேசுவரனுடைய குழந்தைகள்.

பரமேசுவரனை நாம் நேரிற் பார்த்து நமஸ்காரம் செய்யவேண்டாம். அவருடைய நாமமே போதும். நமக்கு நன்றாகத் தெரிந்தது அது. நம்முடைய மதத்தில் பாவ பரிகாரத்துக்கு சுலபமான மார்க்கம் இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அது இந்த நாமஸ்கரணந்தான். பிரதோஷ காலத்தில் இந்த நாமாவைச் சொன்னாற் போதும். பெரியவர்கள்-சிஷ்யர்கள் சாயங்காலத்தில் இதைச் சொல்லுவது வழக்கம்.

அப்பேர்பட்ட சர்வேசுவரன் சகல வேத சாஸ்திரங்களின் தாத்பரியமாகிய ஓங்கார ஸ்வரூபமாக இருக்கிறார். ஓங்காரந்தான் எல்லாத் தத்துவங்களுக்கும் முடிவானது.

பரமேசுவரன் ஓங்காரம். சர்வரூபப் பிரம்மமும் ஓங்காரந்தான். ஸர்வதேசங்களும் ஓங்காரத்தைச் சொல்லுகின்றன. அதனுடைய அர்த்தத்தை விசாரிக்கும் ஓர் உபநிஷத்தே தனியாக இருக்கிறது. அதற்கு மாண்டுக்யோபநிஷத் என்று பெயர். சிவஸ்ரூபந்தான் பரப்பிரம்மம். சாயங்கால வேளைகளில் சிவத்தியானம் செய்யவேண்டும். பிரதோஷக் காலத்தில் ஈசுவர தரிசனம் செய்யவேண்டும். ஈசுவரன் கோயிலில் பிரதோஷக் காலத்தில் எல்லாத் தேவர்களும் வந்து ஈசுவர தரிசனம் செய்கிறார்கள்.

பரமேசுவரனுடைய நாமாவாகிய "சிவ" வேதத்தின் மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. சாங்கிய சாத்திரத்தில் ஈசுவரன் மூன்று கண்ணுள்ளவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமரமும் அப்படியே சொல்லுகிறது. லோகத்தில் ஈசுவரன் என்ற சப்தம் சிவனுக்கே வழங்கப்படுகிறது.

அவன் மஹாபுருஷன். இவ்வாறு பரமேசுவரனுடைய நாமத்தின் பெருமை சுருதியில் கர்ம காண்டமாகிய ஸ்ரீ ருத்திரத்திலும், ஞானகாண்டமாகிய மாண்டுக்யோ உபநிஷத்திலும் மற்ற சூத்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்ம சூத்திரத்தில் சிவ என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஈசானான் என்னும் சப்தத்துக்கு எது அர்த்தமோ அது தான் பரமேசுவரரூபம். இவ்வளவுக்கும் பரம தாத்பரியமாக ஒன்று இருக்கிறது. அதுதான் இந்த இரண்டு எழுத்து. "சிவ" என்பதையே கொஞ்சம் நீட்டி "சிவா" என்று சொன்னால் அது அம்பிகையின் பெயராகும் என்று வேதம் சொல்லுகிறது.

பரமசிவனுக்கு இரண்டு சரீரங்கள் இருக்கின்றன. ஒன்று பரம மங்கள ஸ்வரூபம், மற்றொன்று எலும்பொன்றை அணிந்துகொண்டு ஜடாதாரியாக இருக்கிற ஸ்வரூபம். சர்வமங்கள என்பது அம்பாளின் பெயர்.

அந்த அம்பாள் தான் உயிர். இந்த இரண்டு ஸ்வரூபங்களும் லோகத்தில் எல்லோருக்கும் பிதாவாகவும் மாதாவாகவும் இருக்கின்றன. ஆகையால் நாம் யாவரும் சிவத்தியானம் செய்யவேண்டும். நல்லகதியை அடைய சுலபமான வழி அதுதான்.

எந்த வஸ்து காயத்திரி, அக்னி, ரட்ஷகன், என்னும் மூன்றிலும் பிரகாசிக்கிறது? சிவன்தான். காயத்திரியின் பரம தாத்பர்யமாருப்பவர் அவரே. சூரியனிடத்தில் பிரகாசிப்பவர் அவர்தாம். ரட்ஷிப்பவரும் அவர்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீருத்திரத்தில் பரமேசுவரன் அக்கினி ஸ்வரூபமாகிய இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்த ஜன்மம் வந்தாலும் சாஸ்திரம் இதுவாக இருக்க வேண்டும். ஸ்வாமி ஸ்ரீசந்திரமௌலீசுவராக இருக்க வேண்டும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவ என்ற இரண்டு அகரங்களை எப்பொழுது சந்தர்ப்பம் நேர்ந்தாலும் உச்சாரணம் பண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். எந்த ஜன்மம் வந்தாலும் அதை மறக்காமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் ஜன்மமேயில்லாத பரமசாந்தநிலை உண்டாகும்.

தற்போதைய காலம் கலியுகமாகும். கலியுக தர்மத்தில் பஜனையும், நாம சங்கீர்த்தனையும், நமோச்சாரணமும் அவசியம் செய்யப்பட வேண்டுமென சிவ மஹாபுராணமும், விஷ்ணு புராணமும் உறுதியாகக் கூறுகின்றன. குறிப்பாக "சிவபூமி" எனச் சிறப்பிக்கப்பட்ட இலங்கையில் சிவவழிபாடு மேன்மைப்பட்டு காணப்படுகின்றது. சிவனையே எமது சமயக்கடவுளாகவும் உலகின் முழுமுதற் கடவுளாகவும் கொள்ளும் நம்பிக்கை மேலோங்குகின்றது. சிவனை நம்பி சிவ, சிவா என்று எப்போதும் நமோச்சாரணம் சொல்லும் சைவர்கள் நிலைத்திருக்கிறார்கள். சிவ நாமோச்சாரணமே போதும் என்ற நிலைப்பாடு வழிபாட்டு நெறியில் வளர்ந்து வருகின்றது. வழிபாட்டுமுறையில் எல்லோரும் சேர்ந்து சிவ பஜனை, சிவநாமோச்சாரணம், சிவாயநமஹ, நமசிவாய என்று மன அடக்கத்துடன் உச்சரிக்கும்போது வலிமைபெற்ற வழிபாடாகி பரிணமிக்கின்றது. அத்துடன் சிவவழிபாட்டில் சிவத் தொண்டு செய்தல், ஒழுங்குபடுத்துதல், அடியார்களைப் பேணல், அடியார்களின் நலன் கொள்ளல், அன்னதானமிடல், கல்வி கேள்விகளுக்கு வித்திடல், சமுதாய நலம் பேணல் போன்ற சிவ கைங்காரியமான சிவதொண்டுகளும் தற்காலத்தில் மிகவும் அவசியம் வேண்டப்படுகின்றன. இவற்றிக்கு முன்னோடியாகச் செயற்பட்டுவருகின்ற உயர்ந்த சமய அமைப்பாக விளங்குவது அகில இலங்கை இந்து மாமன்றமாகும். இந்து மாமன்றத்தின் ஒரு பகுதியாக காணப்படும் சிவதொண்டர் அணியினரும் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக இருப்பது மட்டுமன்றி அவற்றை வாழ்வியல் பயன்பாட்டில் நடைமுறைப்படுத்தி எமது இந்துமதத்தின் சிறப்பையும், பெருமையையும் நிலைநாட்டி வருகின்றனர் என்பதையும் தெளிவாகக் காணமுடிகின்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்தும்

இந்து ஆராய்ச்சி மாநாடு

31.07.2015 - 02.08.2015

இலங்கை இந்து அமைப்புகளின் ஒன்றியமாக உச்ச நிறுவனமாக அறுபது ஆண்டுகள் செயலாற்றி வரும் அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ் நல்லூரில் ஜூலை 31 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வரை மூன்று நாள் பெருவிழாவாக இந்து ஆராய்ச்சி மாநாட்டினை நடத்துகின்றது. "ஈழத்து இந்துமதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு" என்ற தொனிப்பொருளில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் (குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா) இந்த மாநாட்டில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டு மூன்று தினங்களும் சிறப்புரைகள் நிகழ்த்தவிருக்கிறார்.

வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள், சுவாமி விபுலானந்தர் அரங்கில் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார். ஆரம்ப நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். நிறைவுநிகழ்வில் மாண்புமிகு அமைச்சர் டி. எம் சுவாமிநாதன் பிரதம விருந்தினராகவும், இந்தியத்துணை ஸ்தானிகர் திரு. ஏ.பி.நடராஜன், யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ் அரச அதிபர் திரு. நா. வேதநாயகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள். நிறைவு நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அரங்கில் இடம்பெறுகிறது.

ஆரம்ப நிகழ்வில் நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இராமகிருஸ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ், இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தானு. மகாதேவக் குருக்கள், நல்லூர் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், சைவக்குருமார் ஒன்றிய முதல்வர் சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகள் வழங்குவர். ஆரம்ப மற்றும் நிறைவு நாள் நிகழ்வுகளுக்கு மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமை தாங்குகின்றார்.

பத்து சமகால அமர்வுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை யாழ் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த கல்விமான்கள் சமர்ப்பிக்க இருக்கிறார்கள்.

பேராசிரியர் திருமதி. கலைவாணி இராமநாதன், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், பேராசிரியர்.

கடந்த தசாப்த காலத்தில் தருமபுர ஆதீன குரு முதல்வருக்கு மாமன்றம் அளித்த வரவேற்பு உபசாரத்தின் போது உரையாற்றுகிறார்.

சி. க. சிற்றம்பலம், பேராசிரியர் வ. மகேஸ்வரன்,, பேராசிரியர் நா. சண்முகலிங்கன், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் நா. ஞானகுமரன், பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயர், உட்பட பல கல்விமான்கள் சமகால அமர்வுகளுக்குத் தலைமை தாங்க பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன், பேராசிரியர் ப. புஸ்பரத்தினம், பேராசிரியர் மா.வேதநாதன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் உட்பட பல பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

மாநாட்டின் நிறைவு நிகழ்வில் இணுவில் சிவஸ்ரீ தானு. மகாதேவக் குருக்கள் (முதல்வர், தர்மசாஸ்தா குருகுலம்), ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் (முதல்வர் - மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி) ஆகியோர் மாமன்றத்தால் கௌரவிக்கப்படுகிறார்கள். அத்துடன் அச்சுவேலி சிவஞானபானு சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் ஆக்கிய "மகோற்சவ விளக்கம்" மறுபதிப்பும், திரு. வை. சோமசேகரன் எழுதிய ஈழத்து ஆலயங்கள் (பாகம் 1) யாழ் மாவட்டத் திருத்தலங்கள் நூலும் இதன்போது வெளியிட்டு வைக்கப்படும். கம்பவாரிதி இ. ஜெயராஜா அவர்களும் சிறப்பு அமர்வில் சிறப்புரை நிகழ்த்துவார்.

சமகால அமர்வுகள் நடக்கும் அரங்குகள் ஈழத்து இந்து சமய வரலாற்றில் மகத்தான சேவையாற்றிய இந்துப் பெரியார்களைக் கௌரவிக்கும் விதத்தில் அவர்களின் பெயர்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
60ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும்

இந்து ஆராய்ச்சி மாநாடு - 2015

காலம்

31.7.2015 மாலை

01.8.2015 காலை & மாலை

02.8.2015 காலை & மாலை

இடம்

நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம்

தொனிப்பொருள்

"ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு"

ஆரம்ப நிகழ்வுகள்

காலம்: மன்மத வருடம் ஆடித் திங்கள் 15ஆம் நாள் (31.07.2015)
மாலை 3.00 மணி முதல்

இடம்: நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம்

அரங்கு: முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அரங்கு

முன்னிலை

ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
(குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை ஆதீனம்)

சிவஸ்ரீ தானு. மகாதேவக் குருக்கள்
(முதல்வர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள்
(முதல்வர், சைவக்குருமார் ஒன்றியம்)

பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள்
(வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், நல்லூர்)

பிரதம விருந்தினர்

மாண்புமிகு இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர்

சத்தியவித்தகர் க.வி.விக்னேஸ்வரன்

(முதலமைச்சர், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

பேராசிரியர் சி. பத்மநாதன்

(வேந்தர், யாழ் பல்கலைக்கழகம், தகைசார் வரலாற்றுத்துறைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்)

மங்கல விளக்கேற்றல்

மனிதநேயமாமணி இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை தம்பதியினர்

(அறங்காவலர் சபைத் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

திரு. மா. தவயோகராஜா தம்பதியினர்

(பிரதித் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

நந்திக் கொடி ஏற்றல்

விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா

(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

தலைமை

திரு. கந்தையா நீலகண்டன்

(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

நிகழ்ச்சி நிரல்

பூசை வழிபாடு

ஊர்வலம்

அகில இலங்கை இந்து மாமன்ற யாழ் பணிமனையிலிருந்து

நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தினை வந்தடையும்

ஆரம்ப நிகழ்வுகள்

மங்கல விளக்கேற்றல்

நந்திக் கொடியேற்றல்

இறைவழிபாடு

நீத்தார் நினைவுப் பிரார்த்தனை

வரவேற்புரையும் மாநாட்டின் நோக்க அறிமுக உரையும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

(ஆலோசகர், மாநாட்டு ஒழுங்கு)

ஆசியுரைகள்

ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
(குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை ஆதீனம்)

பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள்
(வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், நல்லூர்)

சிவஸ்ரீ தானு. மகாதேவக் குருக்கள்
(முதல்வர், தர்மசாஸ்தா குருகுலம்)

சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள்
(முதல்வர், சைவக்குருமார் ஒன்றியம்)

வாழ்த்துரை

பேராசிரியர் சி. பத்மநாதன்
(வேந்தர், யாழ் பல்கலைக்கழகம், தகைசார் வரலாற்றுத்துறைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்)

தலைமையுரை

திரு. கந்தையா நீலகண்டன்
(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

இந்து ஒளி வெளியீடு (மாநாட்டுச் சிறப்பு இதழ்)

வெளியீட்டுரை: திரு. ஐ. தயானந்தராஜா
(அதிபர், யாழ் இந்துக் கல்லூரி)

பிரதம விருந்தினர் உரை

மாண்புமிகு இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் சத்தியவித்தகர் க.வி.விக்னேஸ்வரன்
(முதலமைச்சர், வடமாகாணம்)

சிறப்புச் சொற்பொழிவுகள்

'சுவாமி விபுலானந்தர் வழியில் கிழக்கில் ஆன்மீக எழுச்சி'
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தகைசார் தமிழ்ப் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்)

'நாவலர் பெருமானின் வழியில் வடக்கில் ஆன்மீக எழுச்சி'
சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
கௌரவ இயக்குநர், மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையம், நல்லூர்)

நன்றியுரை

திரு. முத்தையா கதிர்காமநாதன்
(பொதுச் செயலாளர் அகில இலங்கை இந்து மாமன்றம்)

இறை வணக்கம்

இரண்டாம் நாள்

01-08-2015 காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை (சமகால அமர்வுகள்)

சமகால அமர்வு 1:

ஈழத்து இந்து சமய வரலாற்றில் புராணங்கள், திருமுறைகள்

அரங்கு: சேர். பொன் இராமநாதன் அரங்கு (மண்டபம் - 1)

சமகால அமர்வு 2:

ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டங்கள்.

அரங்கு: திரு. வே. பாலசுப்பிரமணியம் அரங்கு (மண்டபம் - 2)

சமகால அமர்வு 3:

இலங்கை இந்துமத வரலாறும், தொல்லியலும்

அரங்கு: சேர். பொன் அருணாச்சலம் அரங்கு (மண்டபம் - 3)

சமகால அமர்வு 4:

ஈழத்துத் திருக்கோயில்களும், மரபுகளும்

(பிராந்திய மரபுகள் உட்பட) - I

அரங்கு: சேர். கந்தையா வைத்தியநாதன் அரங்கு (மண்டபம் - 1)

சமகால அமர்வு 5:

ஈழத்து இந்து சமய நிறுவனங்களின் பணிகள்,

அவை ஏற்படுத்திய - ஏற்படுத்தும் தாக்கங்கள்

அரங்கு: கலாநிதி க. வேலாயுதபிள்ளை அரங்கு (மண்டபம் - 2)

சமகால அமர்வு 6:

ஈழத்து சமய மரபில் கல்வி

அரங்கு: இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அரங்கு (மண்டபம் - 3)

மாலை 5.00மணி - சிறப்பு அமர்வு

அரங்கு: சதாவதானி கதிரவேற்பிள்ளை அரங்கு

சிறப்புச் சொற்பொழிவுகள் (மண்டபம் - 1)

மூன்றாம் நாள்

02-08-2015 காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.45 மணி வரை

சமகால அமர்வு 7:

ஈழத்துத் திருக்கோயில்களும் மரபுகளும்

(பிராந்திய மரபுகள் உட்பட) - II

அரங்கு: தவத்திரு செல்லப்பா சுவாமிகள் அரங்கு (மண்டபம் - 1)

சமகால அமர்வு 8:

ஈழத்துச் சித்தர் பாரம்பரியம்

அரங்கு: தவத்திரு யோகசுவாமி அரங்கு (மண்டபம் - 2)

02-08-2015 காலை 8.30 மணி முதல் நண்பகல் 10.30 மணி வரை

சமகால அமர்வு 9:

இளைஞர் அரங்கு

அரங்கு: சுவாமிஜி ஜீவானானந்த மகாராஜ் அரங்கு (மண்டபம் - 3)

02-08-2015 காலை 10.45 மணி முதல் நண்பகல் 12.45 மணி வரை

சமகால அமர்வு 10:

மங்கையர் அரங்கு

அரங்கு: தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி

தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு (மண்டபம் - 3)

இரண்டாம் நாள் – காலை

01-08-2015 காலை 8.30 மணி முதல் 12.45 மணி வரை
(3 சமகால அமர்வுகள்)

சமகால அமர்வு 1
(மண்டபம் - 1)

சமகால அமர்வு 2
(மண்டபம் - 2)

சமகால அமர்வு 3
(மண்டபம் - 3)

சமகால அமர்வு 1

ஈழத்து இந்து சமய வரலாற்றில் புராணங்கள், திருமுறைகள்

தலைமை
பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன்
முன்னாள் தலைவர், இந்து நாகரிகத்துறை
(ஓய்வுநிலை பேராசிரியர்) யாழ். பல்கலைக்கழகம்

அரங்கு
சேர் பொன். இராமநாதன் அரங்கு

காலை 8.30 மணி முதல் 12.45 மணி வரை
சமகால அமர்வு - 01

1. புராணபடன மரபுகள்: அன்றும் இன்றும்
   பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
   முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, (ஓய்வுநிலை பேராசிரியர்) யாழ் பல்கலைக்கழகம்.

2. ஈழத்துத் தலபுராணங்கள் புலப்படுத்தும் மனிதநேயச் சிந்தனைகள்
   கலாநிதி (திருமதி) சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
   சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

3. ஈழத்துத் தலபுராண வரலாற்றில் தட்சண கைலாச புராணம்
   திரு. பெருமாள் சரவணகுமார்
   விரிவுரையாளர், தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

4. ஈழத்தில் புராண படனமும் திருமுறை மரபும்
   பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்
   தமிழ் பேராசிரியர், மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

5. ஈழத்து இந்து சமய வரலாற்றில் புராணங்களும், திருமுறைகளும்.
   திரு. க. இரகுபரன்
   சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

6. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்தின் பக்திக் கவிதை (சிவசம்புப் புலவரின் பக்திக் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)
   திரு. செல்லத்துரை சுதர்சன்
   விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

சமகால அமர்வு 2

ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டங்கள்.

தலைமை

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
(ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

அரங்கு

திரு. வே. பாலசுப்பிரமணியம் அரங்கு

காலை 8.30 மணி முதல் 12.45 மணி வரை
சமகால அமர்வு – 02

1. பெண்களின் பங்கு
   கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
   முன்னாள் ஆய்வுநிலை பேராசிரியர், கக்சுயின் பல்கலைக்கழகம், தோக்கியோ, ஜப்பான்

2. ஆலயங்களின் பங்கு
   சைவஞானுபானு, செஞ்சொற்செல்வர்
   கலாநிதி ஆறு. திருமுருகன்
   உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம், கௌரவ இயக்குநர், யாழ் இந்து ஆராய்ச்சி நிலையம், தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான நிர்வாகக்குழு

3. இளம் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள்
   கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
   சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

4. விசேட தேவையுடைய பிள்ளைகள் - எதிர்கால ஏற்பாடுகள் நோக்கிய ஓர் ஆய்வு
   திரு. அமிர்தலிங்கம் பவளநந்தி
   விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

5. சமய நிகழ்ச்சிகளின் ஊடகத்தின் பங்களிப்பு
   திரு. சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்
   முனைவர் பட்ட ஆய்வாளர், நிகழ்த்து கலைத்துறை, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்.

6. ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சிக்கான எதிர்கால திட்டமிடல்
   திருமதி சாந்தி வாமதேவா
   ஓய்வுநிலை ஆசிரியர், கல்வித் திணைக்களம்

7. இந்து மத வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டங்கள் - சிறு ஆய்வு
   திரு. குமாரசாமி சண்முகநாதன்
   ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

சமகால அமர்வு 3

இலங்கை இந்துமத வரலாறும் தொல்லியலும்

தலைமை

பேராசிரியர். சி. க. சிற்றம்பலம்
(தகைசார் வரலாற்றுப் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்)

அரங்கு

சேர் பொன். அருணாச்சலம் அரங்கு

காலை 08.30 மணி முதல் 12.45 மணி வரை
சமகால அமர்வு – 03

1. இலங்கையில் இந்து சமயவரலாறும் தொல்பொருள் ஆராய்ச்சியின் பங்கும்
   பேராசிரியர் ப. புஷ்பரத்தினம்
   வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

2. இலங்கையில் இராமாயணத்தை நினைவுப்படுத்தி நிற்கும் இந்து ஆலயங்கள்
   திருமதி அஜித்தா சுகந்தன்
   தொல்லியற்துறை யாழ் பல்கலைக்கழகம்.

3. கலாசார சுற்றுலாவில் யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள்
   செல்வி சிவரூபி வீரசிங்கம்
   தொல்லியல் விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.

4. மண்ணில் புதையுறும் திருமங்கலாய் சிவன் கோயில்
   வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார்
   பொதுவைத்தியசாலை, திருகோணமலை.

5. கந்தளாய் சதுர்வேதி மங்கல தொல்லியற் சான்றுகள்
   திரு. சற்குணலிங்கம் ஹோபிநாத்
   ஆசிரியர், தி/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம், கந்தளாய்.

6. யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்களும் நிர்வாகக் கட்டமைப்பும் - ஒரு வரலாற்றுப் பார்வை
   திருமதி சாந்தினி அருளானந்தம்
   சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

7. தமிழரின் பண்பாட்டுத் தன்மையை அடையாளப் படுத்தும் ஆகம மரபு சாரா ஆலயங்களின் இன்றைய நிலை
   திரு. ப. கபிலன்
   தொல்லியல் வருகை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.

இரண்டாம் நாள் – மாலை

01-08-2015 மாலை 2.00 மணி
முதல் 5.00 மணி வரை
(3 சமகால அமர்வுகள்)

சமகால அமர்வு 4
(மண்டபம் - 1)

சமகால அமர்வு 5
(மண்டபம் - 2)

சமகால அமர்வு 6
(மண்டபம் - 3)

மாலை 5.00 மணி - சிறப்பு அமர்வு

தலைமை
வைத்திய கலாநிதி முருகேசு கதிர்காமநாதன்
தலைவர், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம்

சிறப்பு அதிதி
திரு. சீ. யோகேஸ்வரன் தலைவர், மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை

அரங்கு
சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை அரங்கு
(மண்டபம் - 1)

சிறப்புச் சொற்பொழிவுகள்
'இறைபணி நிற்க'
ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
(குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா)

'சைவநீதி விளங்குக'
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
(நிறுவுனர், அகில இலங்கை கம்பன் கழகம்)

சமகால அமர்வு 4

ஈழத்துத் திருக்கோயில்களும் மரபுகளும் (பிராந்திய மரபுகள் உட்பட) - I

தலைமை:
பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

அரங்கு
சேர். கந்தையா வைத்தியநாதன் அரங்கு

நண்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை
சமகால அமர்வு - 04

1. ஈழத்துத் திருக்கோயில்களின் கல்வெட்டுகள்
கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

2. திருக்கோயில்களில் கிரியைகளும் அவற்றின் முக்கியத்துவமும்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமஸ்கிருதம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

3. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் கால ஆகமம் சாராத வழிபாட்டு மரபுகள் - வையாபாடல், கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு
செல்வி ஹறோசனா ஜெயசீலன்
ஆசிரியர்

4. மலையகத் தமிழரின் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
எம். எம். ஜெயசீலன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

5. நாட்டார் மரபில் மாரியம்மன் வழிபாடு (மலையகப் பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு)
கலாநிதி (திருமதி) சோதிமலர் ரவீந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

சமகால அமர்வு 5

ஈழத்து இந்து சமய நிறுவனங்களின் பணிகள் அவை ஏற்படுத்திய - ஏற்படுத்தும் தாக்கங்கள்

தலைமை
பேராசிரியர் நா. சண்முகலிங்கன்
(முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்)

அரங்கு
கலாநிதி க. வேலாயுதபிள்ளை அரங்கு

நண்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை
சமகால அமர்வு - 05

1. திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள்
பேராசிரியர் மா.வேதநாதன்
தலைவர், இந்து நாகரிகத் துறை, யாழ் பல்கலைக்கழகம்.

2. சைவ பரிபாலன சபையின் பணிகளும் வழிகாட்டல்களும்.
திரு. எஸ். முகுந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகக் கற்கைப்புலம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

3. கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் கடமைகள் (மாமன்ற அனுபவங்கள்)
திரு. மா. கணபதிப்பிள்ளை
இளைப்பாறிய அதிபர், தலைவர் - கல்விக்குழு, அகில இலங்கை இந்து மாமன்றம்.

4. ஈழத்தின் இந்துமத நிறுவனங்கள்
கலாபூஷணம். க. கிருஷ்ணபிள்ளை
மட்டக்களப்பு.

5. இந்து நிறுவன ரீதியில் இந்து மாமன்றம்
திருமதி நிமாலினி முருகேசுப்பிள்ளை
ஆசிரியர்

6. கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடும் அது சார்ந்த சடங்கு முறைகளும் - ஓர் ஆய்வு
திரு. பொன்னுத்துரை பூலோகநாதன் *(M.A.) M.Phil.*
ஆய்வு மாணவர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

7. ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சியில் மடங்கள்
கலாபூஷணம் தம்பு துரைராசா
திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்துகலாசார மன்றம், திருக்கேதீஸ்வரம்.

சமகால அமர்வு 6

ஈழத்து சமயமரபில் கல்வி

தலைமை:
பேராசிரியர் யொ. பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம், தகைசார் பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகம்)

அரங்கு
இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அரங்கு

மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை
சமகால அமர்வு - 06

1. ஈழத்துப் பாடசாலைக் கல்விமுறை சமயப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்கள்
திரு. பா. தனபாலன்
உப பீடாதிபதி, நிதி நிர்வாகம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

2. ஈழத்து இந்துசமய மரபில் பெண் கல்வி
கலாநிதி. விக்னேஸ்வரி பவநேசன்
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

3. திண்ணைப் பள்ளிப் பாரம்பரியம் முதல் இன்றைய அறநெறிப் பாடசாலை வரை
திரு. எம். பிரபாகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

4. ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரிய கலாசாலைகள்
திரு. தி. செல்வமனோகரன்
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

5. 21ம் நூற்றாண்டில் சைவசித்தாந்தக் கல்வி
திரு. பொ. சந்திரசேகரம்
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

6. இந்து சமயக் கல்வியில் அறநெறிப்பாடசாலைகளின் வகிபாகம்
திரு. அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

7. ஈழத்தில் குருகுலக்கல்வி
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு

மூன்றாம் நாள் – காலை

3ம் நாள் - 02-08-2015 காலை 8.30 மணி முதல்
நண்பகல் 12.45 மணி வரை

சமகால அமர்வுகள்

7 (மண்டபம் - 1) 8 (மண்டபம் - 2)
காலை 8.30 - 12.45 நண்பகல்

சமகால அமர்வு - 9

(மண்டபம் - 3)
காலை 8.30 - 10.30

சமகால அமர்வு - 10

(மண்டபம் - 3)
காலை 10.45 - 12.45 நண்பகல்

சமகால அமர்வு 7
ஈழத்துத் திருக்கோயில்களும் மரபுகளும் (பிராந்திய மரபுகள் உட்பட) - II

தலைமை
பேராசிரியர் நா. ஞானகுமரன்
(மீடாதிபதி கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

அரங்கு
செல்லப்பா சுவாமிகள் அரங்கு

காலை 8.30 மணி முதல் 12.45 மணி வரை
சமகால அமர்வு - 07

1. ஈழத்துத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற திருமுறைகளும் அவற்றின் சிறப்பும்
   கலாநிதி (செல்வி) நிர்மலாதேவி நல்லையா
   ஓய்வுநிலை உபபீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

2. திருக்கோயில் வழிபாட்டு மரபுகளும் மாற்றங்களும்
   திரு. ச. லலீசன்
   பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

3. 'பலியிடல்'
   திரு. கு. கோபிராஜ்
   புனர்வாழ்வு உதவியாளர், யாழ் மாவட்டச் செயலகம்

4. மட்டக்களப்பு தேசம் - அதன் வரலாற்றுப் பின்னணியும் தனித்துவமான இந்துப் பண்பாடும்
   திரு. விவேகானந்தராஜா துலாஞ்சனன்
   விஞ்ஞானபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

5. வட இலங்கையின் நாட்டார் பெண் தெய்வங்கள்
   திரு. உதயகுமார் சஜீவ்
   இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்.

6. யாழ்ப்பாணக் கோயில் கட்டிட சீற்பக்கலை மரபும் சாஸ்திர நூல்களின் செல்வாக்கும்
   காலநிதி ஏ.என்.கிருஸ்ணவேணி
   தலைவர், நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

சமகால அமர்வு 8
ஈழத்துச் சித்தர் பாரம்பரியம்

தலைமை:
பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ண ஐயர்
(தலைசார் பேராசிரியர், இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

அரங்கு
தவத்திரு யோகசுவாமி அரங்கு

காலை 08.30 மணி முதல் 12.45 மணி வரை
சமகால அமர்வு - 08

1. தவத்திரு யோகசுவாமி ஏற்படுத்திய மறுமலர்ச்சி
   திருமதி நாச்சியார் செல்வநாயகம்
   ஒய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

2. செல்வச்சந்நிதி சித்தர் பாரம்பரியம்
   திரு. சி. ரமணராஜா
   விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

3. மறவன்புலவுச் சித்தர் பாரம்பரியம்
   திரு. கு. பாலஷண்முகன்
   விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

4. இணுவில் சித்தர் பாரம்பரியம்
   திரு. ம.பா.மகாலிங்கசிவம்
   சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

5. சித்தர் சித்த மருத்துவம்
   திரு. சே. சிவசண்முகராஜா
   தலைவர், சித்தமருத்துவத் துறை, யாழ் பல்கலைக்கழகம்

சமகால அமர்வு 9
இளைஞர் அரங்கு

தலைமை:
திரு. சி. தில்லைநடராஜா
(ஓய்வுநிலை மேலதிக செயலாளர், கல்விஅமைச்சு)

அரங்கு
சுவாமிஜி ஜீவானானந்த மகாராஜ் அரங்கு

காலை 08.30 மணி முதல் 10.30 மணி வரை
சமகால அமர்வு - 09

1. பாடசாலை அளவில் இந்து இளைஞர் கழகங்களின் செயற் திட்டங்கள்
   ப.தர்சனன்
   மாணவன், யாழ் இந்துக் கல்லூரி

2. சமகால ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் இளைஞர்களின் வகிபாகம்
   கணேசலிங்கம் ஜீவானந்தன்
   மாணவன், யாழ் பல்கலைக்கழகம்

3. இன்றைய ஈழத்து ஆன்மீக எழுச்சியில் இளையோரின் பங்களிப்பு.
   திரு.மா. ரதிக்குமார்
   இந்துசமயத்துறை விசேடபயிற்சி மாணவன்
   கோப்பாய் ஆசிரிய கலாசாலை

4. புலம்பெயர்ந்த இந்து இளைஞர்களின் உணர்வுகள்
   சைவப்புலவர் சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்
   இலண்டன் கற்பக வீநாயகர் கோவில்

5. ஈழத்தில் இந்துமதம் எதிர்நோக்கும் சவால்கள்
   செல்வி நாராயணி தவராசா
   முதுநிலை ஆசிரியர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

சமகால அமர்வு 10
மங்கையர் அரங்கு

தலைமை
திருமதி சாந்தி நாவுக்கரசன்
(செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சு,
முன்னைனாள் பணிப்பாளர், இந்து சமய கலாசார
விவகார அலுவல்கள் திணைக்களம்)

அரங்கு
தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா
அப்பாக்குட்டி அரங்கு

காலை 10.45 மணி முதல் பகல் 12.45 மணி வரை
சமகால அமர்வு - 10

1. ஈழத்து இந்துப்பண்பாடும் ஆடற்கலையும்
   திருமதி அருட்செல்வி கிருபைராசா
   தலைவர், நடனத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

2. சைவத்தில் பெண்கள் - நேற்று, இன்று, நாளை
   திருமதி ஈஸ்வரி சுந்தரலிங்கம்
   இளைப்பாறிய ஆசிரியர்

3. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
   செல்வதி அம்மா பூலோகம்
   தமிழ்த்துறை மாணவி, யாழ் பல்கலைக்கழகம்.

4. ஈழத்து இந்துப் பெண்கள் இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பு.
   செல்வி மோகனதாஸ் உதயமலர்.
   கோப்பாய் ஆசிரிய கல்விக் கலாசாலை

நிறைவு நிகழ்வு

மூன்றாம் நாள் ஆடிமாதம் 17ஆம் நாள் (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00

அரங்கு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கு

தலைமை

திரு. கந்தையா நீலகண்டன்

(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

வரவேற்புரை

திரு. வீரகத்தி கருணலிங்கம்

(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

ஆசியுரைகள்

சுவாமி சர்வரூபானந்தஜி மகாராஜ்

(தலைவர், இராமகிருஷ்ண மிஷன்)

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்

(இந்து மத குருபீடாதிபதி)

பிரதம விருந்தினர்

மாண்புமிகு தே. ம. சுவாமிநாதன்

(மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, இந்து கலாசார அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்கள்

மாண்புமிகு திரு. ஆ. நடராஜன்

(இந்திய உதவி உயர்ஸ்தானிகர் - யாழ்ப்பாணம்)

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்

(உபவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)

திரு. நாகலிங்கம் வேதநாயகன்

(யாழ் அரச அதிபர்)

நூல்கள் வெளியீடு

அச்சுவேலி சிவஞானபானு, சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் ஆக்கிய

'மகோற்சவ விளக்கம்' மறுபதிப்பு

வெளியீட்டுரை: பேராசிரியர் இராஜரட்ணம் குமாரவடிவேல்

(யாழ் பல்கலைக்கழக முன்னாள் பதில் துணை வேந்தரும் தகைசார் பேராசிரியரும்)

திரு. வை. சோமசேகரன் அவர்கள் தொகுத்த

ஈழத்து ஆலயங்கள் (பாகம் - 1) - யாழ் மாவட்டத் திருத்தலங்கள்

வெளியீட்டுரை: திரு. சதாசிவம் அமிர்தலிங்கம்

(பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியற் கல்லூரி, கோப்பாய்)

சிறப்புரை

ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

(குரு முதல்வர், தருமபுர ஆதீனம், இந்தியா)

கௌரவம்

சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள்

(முதல்வர் - தர்மசாஸ்தா குருகுலம் இணுவில்)

ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

(முதல்வர், மகாதேவ ஆச்சிரமம் கிளிநொச்சி)

நிறைவுரை

சைவஞானபானு, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

கலை நிகழ்வுகள்

நன்றியுரை

மக்கள் துயர்போக்கிய சிவயோக சுவாமிகள்



யோகர் சுவாமிகளை ஈழத்து மக்கள் பெரும் பான்மையும் யாழ்ப்பாண மக்களும் நன்கு அறிவார்கள். அநேகர் நேரே அவரோடு தொடர்பு பூண்டு அடியார்கள் போல் வாழ்ந்தும் வந்துள்ளார்கள். மற்றைய சில துறவிகள் போலன்றி, உலகில் தம்மை காட்டிக் கொள்ளாது ஆசைகளைத் துறந்து தாமரை இலைமேலுள்ள நீர்த்துளிபோல் வாழ்ந்து வந்த பெரும்பேறு யோகர் சுவாமிகட்கு விசேடமாகவுடைத்து. அவருடன் மிக நெருங்கிப் பழகியோரும் அவரை முற்றாகக் கண்டறிந்திலர். எவர்க்கும் எவ்விதத்திலும் பிடி கொடாது வாழ்ந்தனரென்றே கூறவேண்டும். அவர் இன்ன தன்மையர், இன்ன குணமுடையார், இன்னது செய்வர், இன்னது சொல்வார் என்பதைத் திட்பமாக எவராலுங் கூறமுடியாது. எவ்வித கவலையுமின்றிப் பரம்பொருளையே இலக்காகக் கொண்டு வாழ்ந்து வந்த சுவாமிகட்கு வாழ்க்கையில் எவ்வித குறையும் கிடையாது.

சுவாமிகள் தாம்பெற்ற இன்பநிலையோடமையாது உலகமும் உய்வடைந்து கடைத்தேற வேண்டுமென்ற உயர்ந்த பெருநோக்குடன் சமய சன்மார்க்க வளர்ச்சிக்கு ஆதாரமான புதிய இயக்கங்களை அன்பர்களைக் கொண்டு அமைப்பித்தும் அவைகட்கு வேண்டிய உதவிகள் கிடைக்கச் செய்தும் வந்தவர். மக்களுக்கிடையில் நல்வாழ்வு நிலைபெற்றுச் சமயபக்தி ஏற்படும் பொருட்டுப் பாதயாத்திரைகள், ஆலயங்களிற் புராண படனங்கள், சமயப் பிரசங்கங்கள் ஒழுங்காக நிகழ்வதிலும் ஊக்கங்காட்டி வந்தனரென்பாம். மது நீக்கம் விவசாய விருத்திக்குரிய இயக்கங்களையும் விருப்புடன் ஆதரித்து வந்தவர்.

வாழ்க்கையிலே துயரடைந்தோரும் சுவாமிகளை நம்பி நாடுவதுண்டு, அவர்கட்கெல்லாம் நற்புத்திகள் கூறி, உண்மை உணர்த்தி, மனச்சாந்தியை உண்டு பண்ணும் வன்மையும் சுவாமிகட்குண்டு. "முழுதும் உண்மை: ஒரு பொல்லாப்புமில்லை: எப்போதோ முடிந்த காரியம்: யாம் அறியோம்" எனக்கூறி உண்மையை விளக்குவார். சுவாமிகள் முன்னிலையில் நிற்பது தெய்வ சந்நிதானத்தை அடைந்தாற் போலவிருக்கும்.

கு. அம்பலவாணப்பிள்ளை

(நன்றி:- சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்)

எல்லாஞ் சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவியெல்லாம் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே!

யோகர் சுவாமிகளின் ஆச்சிரமம்

துறவறத்தை மேற்கொண்ட யோகநாதர், கொழும்புத் துறைச் சுவாமியார் வீதி - கொழும்புத்துறை வீதியைச் சந்திக்கும் சந்தியில் உள்ள இலுப்பைமரத்தடியில் உட்கார்ந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டார். இவ்விருட்சத்தின் அயலில் நன்னியர் என்னும் ஒருவர் ஒரு கடை வைத்திருந்தார். செல்லப்பா சுவாமிகள் அக்கடைக்குப் போவதுண்டு. சிலகாலஞ் சென்றபின் நன்னியர் அக்கடையை விட்டுப் போகவே அது வெற்றிடமாயிற்று. அக்குடிசையில் யோகநாதர் சென்று தங்கித் தவத்தினில் வைகினார். அன்று தொட்டு அக்குடிசை அன்பர்கள் வந்து சுவாமிகளை(யோகநாதரை)த் தொழும் பரிசுற்றது. ஆச்சிரமத்தின் அமைதியெலாம் ஒளிரப்பெற்றது. ஈச்சுரன் கோயிலை ஒத்தது. அன்பர்கள் சென்று வழிபாடியற்றி வந்தார்கள். சுவாமிகளும் அவர்களுக்கு ஆசி நல்கி, ஆவன உணர்ந்து கருணை பாலித்து வந்தார்கள். கடிவதற்குரியாரைக் கடிந்தும் அருள் வழங்கியும் வந்தார்கள். "ஒரு பொல்லாப்பும் இல்லை. புவனம் இறைவனது ஆடரங்கு. கொல்லாமை கள்ளாமை கொண்டு வாழுங்கள். நல்லார்கள் மத்தியில் நாடியிருங்கள். இ.·.து எல்லாரும் வாழ்வதற்கு இனிய வழியாகும்" என்பன போன்ற இன்னுரைகளை வழங்கினார்கள். இதனை அறிந்தோர் சொல்ல, அவர் வாய்க் கேட்டறிந்து செல்வர் வறியோர், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆடவர் மகளிர், முதியோர் இளைஞர் ஆகிய பலர் அங்கு சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். வந்தவர்களுக்கெல்லாம் அவரவர் குறையறிந்து, சுவாமிகளும் அருள்புரிந்து வருவாராயினர்.

பண்டித வித்துவான் க.நடராஜன்.

(நன்றி:- சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்.)

எல்லாம் அவன் செயல்

ஆண்டவனையன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையுந் திருவடிக் கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக் கிடங்கொடாதே.நான் செய்தேன் அவன் செய்தானென்று நலியாதே! விழித்திரு.

- யோகர் சுவாமிகள்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஈழத்து சித்தர்களும்

கலாநிதி (திருமதி) விமலா கிருஷ்ணபிள்ளை B.Sc.M.Ed.M.Phil, Ph.D.
முன்னாள் விரிவுரையாளர். கொழும்பு பல்கலைக்கழகம்.

மகாகவி பாரதியார் சுதந்திர எழுச்சியை மட்டுமன்றி ஆன்மீக எழுச்சியையும் பாடியுள்ளார். பாரதியாரின் சுயசரிதை வாயிலாக அவர் சித்தர்களினால் ஆட்கொள்ளப்பட்டார் என்பது அறியக்கூடியதாக உள்ளது. அவர் சித்தர் நெறியினைப் போற்றிக் கவிதைகள் பல புனைந்தது மட்டுமல்லாமல், தானும் ஒரு சித்தன் எனவும் பாடியுள்ளார்.

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா!
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்
மனதினிலே நின்றதனை எழுதுகிறேன்...."

(சுயசரிதை பாரதி - அனுபந்தம் அறுபத்தாறு)

பாரதியார் புதுவையில் சித்தர்கள் மூவரைக் கண்டு அவர்களைத் தன் ஞானக் குரவர்கள் எனப் போற்றிக் கவிதைகள் பாடியுள்ளார். இவர்களுள் இலங்கையுடன் மிக நெருங்கிய சம்பந்தமுடைய சித்தர்கள் இருவர்கள் கோவிந்த சாமியாரும், யாழ்ப்பாணத்துச் சாமியாரும் ஆகியவர்கள் என்பது புலனாகிறது. எனவே ஈழத்து சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படும் கோவிந்தசாமி எனப் பூர்வாஷ்ரம பெயரைக் கொண்ட சித்தானைக்குட்டிச் சுவாமிகளுக்கும் பாரதியாருக்கும் தொடர்புகள் உள்ளனவா என்பதை ஆராய முயற்சித்துள்ளோம்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் பெரும்பாலும் சனக் கூட்டத்தில் இருந்து விலகி ஒதுங்கி வாழ்பவர்கள். எனினும் தம் அடியார்களைச் தேடிச்சென்று ஆட்கொள்வர். சித்தர்கள் தங்கள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட செய்திகளைப் பிறருக்குக் கூறுவதில்லை. இவர்களின் வாழ்க்கையில் பலர் அறியாது விடுபட்டுப்போன செய்திகள் பல உண்டு எனக்கொள்ளலாம். சித்தானைக்குட்டி சுவாமிகள் தொடர்பாக அவர்களின் பூர்வாஷ்ரம சரிதத்திலும் அதன் பின்பும் பலர் அறியாமல் விட்டுப் போன செய்திகள் சிலவற்றை முழுமையாக தொடர்புபடுத்தி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலங்கையும், இந்தியாவும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில், வணிகர்களும் யாத்திரை செய்பவர்களும் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி கடல் கடந்து இரு நாடுகளுக்கிடையில் போக்குவரத்துச் செய்தார்கள். இக்காலகட்டத்தில் பாரதநாட்டில் இருந்து சித்தர்கள் பலர் ஈழத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் தங்களது இறுதிக் காலம் வரை இங்கு வாழ்ந்து இந்நாட்டிலேயே சமாதியும் அடைந்தார்கள். அவர்கள் இங்கு 'ஈழத்து சித்தர்கள்' எனப் போற்றப்பட்டார்கள். ஆன்மீக நாட்டமுள்ள ஈழ நாட்டவர் சிலர் பாரத நாட்டிற்குச் சென்று சித்தர்களாக வாழ்ந்து அங்கு சமாதி அடைந்துள்ளார்கள். இலங்கையிலிருந்து சென்று சுவாமிகளாக வாழ்ந்தவர்களைப் போற்றி பொதுவாக யாழ்ப்பாணத்து சுவாமிகள், கதிர்காமத்து சுவாமிகள் என அவர்களின் ஊர் பெயர்களாலேயே அங்குள்ள மக்களால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

1882 ஆம் ஆண்டில் பிறந்த பாரதியார் தன் வாலிபப் பருவத்திலேயே முழு மூச்சுடன் இந்திய விடுதலைப் போராட்டத்தினிலே இணைந்து கொண்டார். இதனால் பிரித்தானிய அரசு, அவர் மீது கைது ஆணை (Arrest warrant) பிறப்பித்தது. இதன் காரணமாக சிறைவாசத்தில் இருந்து தப்பிப்பதற்காக 1908-1918ஆண்டு வரை, பிரான்ஸ் (France) ஆட்சிக்கு உட்பட்ட புதுவையில் (புதுச்சேரி) அடைக்கலம் புகுந்தார். அங்கு பணக் கஷ்டமும், காவல் துறையினரது தொல்லையும் இவரது மன உழைச்சலை உச்சநிலைக்கு இட்டுச் சென்றது. இதனால் இக்கால கட்டத்தில் பாரதியாரின் ஆன்மீக நாட்டம் மேலும் வலுவடைந்தது, புதுவையில் இருந்த சித்தர்களின் பேராற்றலை அனுபவ பூர்வமாக உணர்ந்த அவர் நிம்மதியைத் தேடி சித்தர்களை நாடினார். பாரதியார் இவர்களைப் பற்றி கூறியதாவது, "பல பாங்கான குருக்களைப் போற்றியதால் நான் அச்சமும் பாசமும் நீங்கினேன். அமர நிலை பெற்றேன். பிறருக்கு அருள் செய்யும் ஞானிகளே எனக்குத் தலைவராவர்."மேலும் *"ஏங்காமல் அஞ்சாமல் இடர் செய்யாமல், ஏற்றமருள் ஞானிகள் பலர் எமக்கு தெய்வம்."*எனவும் போற்றியும் வேறும்பல கவிதைகளையும் பாடியுள்ளார். அவற்றுள் கோவிந்தசாமியைப் போற்றிய பாடலும் அடங்கும்.

ஆத்மஜோதி முத்தையா. 'ஈழத்துச் சித்தர்கள்' எனும் நூலில் சித்தானைக்குட்டிசுவாமிகள் எனப்படும் பூர்வாஷ்ரம பிள்ளைப் பெயரைக் கொண்ட கோவிந்தசாமி பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.:-

'பெருநாளி என்பது இராமநாதபுரத்துச் சிற்றரசர் ஒருவருடைய இராசதானி. இந்நாட்டு சிற்றரசருக்கு ஒரே ஒரு மகன். அவருடைய பெயர் கோவிந்தசாமி என்பதாகும். கோவிந்தசாமி அரச குடும்பத்திலே பிறந்து வளர்ந்தாலும் அவருக்கு அரச போகங்களில் நாட்டம் ஏற்படவில்லை. உள்ளம் துறவை நாடியது. இராமநாதபுரத்தில் ஒருபோது தொற்று ஏற்பட்டது. அதன் கோரப்பிடியினால் பலர் இறந்தனர். அவ்வேளை இராமநாதபுரத்துக்கு நவநாதசித்தரும், பெரியானைக்குட்டி சுவாமிகளும் வருகை தந்தனர். அவர்கள் தொற்றுநோய் உள்ள வீடுகளுக்குச் சென்று சமைத்த உணவுகளை வேண்டி உண்டு தொற்றுநோயை நீக்கினர். இவ்வற்புதத்தைக் கேள்வியுற்ற

கோவிந்தசாமி அவர்களை நாடினார். ஈற்றில் நவநாத சித்தராலும் பெரியானைக்குட்டி சுவாமிகளாலும் ஆட்கொள்ளப்பட்டு அன்றே அரசபோக வாழ்க்கையைத் துறந்து, ஆண்டியாக மாறினார். இவ்வாறு ஒன்றிணைந்த மூவரும் இந்தியாவில் பல புண்ணியதலங்களுக்கு யாத்திரை செய்து விட்டு ஈற்றில் இலங்கைக்கு வருகை தந்தனர். ஆத்மஜோதி திரு. முத்தையா 1949ஆம் ஆண்டில் சித்தானைக்குட்டி சுவாமிகளைத் தரிசிக்கும் பேறும் பெற்றுள்ளார்.

மேலும் அறிஞர்கள் பலர் கோவிந்தசாமி விடயம் சார்பாகக் கருதக்கூடிய பல செய்திகளைக் கூறியுள்ளார்கள். அவற்றுள் சில பின்வருமாறு:-

பாரதியாரின் மனைவி செல்லம்மாள் 1951 இல் தன் கணவர் இறந்து முப்பது ஆண்டுகளுக்குப் பின் 'என் கணவர்', எனும் வெளியீட்டில் '..... குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்து சாமி, கோவிந்தசாமி என்பவர்கள் பாரதியின் பக்குவ நிலையை அறிந்து அவருக்கு ஞான உபதேசம் செய்தார்கள். அப்போதுதான் பாரதியார் புதுவையில் 'பாஞ்சாலி சபதம்','ஞானரதம்','குயில் பாட்டு', 'கண்ணன் பாட்டு' முதலியவற்றை புனைந்தார்....' என எழுதியுள்ளார்.

சம்பத். ஆர். சி. 'பாரதியாரின் குருமார்களும் நண்பர்களும்' எனும் நூலில், பாரதி கூறியதாக, குறிப்பிட்டுள்ளவை: '..... பாரதி அவரை 'கோவிந்த ஞானி' என்றே குறிப்பிடுகின்றார். கோவிந்தசாமி பெரிய யோகி, அனுபூதி உடையவர். அவரைக் குரு எனக் கொண்டு பாரதியார் அவரிடம் அடைக்கலம் புகுந்தார். உண்மை திகழ் கோவிந்த ஞானி பார்மேல் தாம் கற்ற கல்வியை எல்லாம் பலிக்கச் செய்தார். கோவிந்த ஞானி நற்பண்பு மிக்க தவசீலர். அன்பினால் முக்தி பெறலாம் என்பது அவர் கொள்கை. எல்லா உயிர்களிடத்திலும் அன்பு மிக்கவர். பாரதியாருக்கு ஏனோ மரணபயம் அடிக்கடி தோன்றலாயிற்று. இந்த மரணபயத்தை போக்கிய ஞானி ஒருவர் உண்டு. அவர் பெயர் கோவிந்தசாமி. அதனாலேயே மரணபயம் என்பது நீங்கி மனவலிமை பெற்றார்.....'

ஆசிரியர் ஆர்.என். ஜெயநாராயணக்கண்ணன் 1978ஆம் ஆண்டில் 'ஞானபூமி' எனும் தனது நூலில், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கோவிந்த சுவாமிகளின் அற்புத ஆற்றல்பற்றி பலவற்றை எடுத்துக் கூறினவற்றில் சில பின்வருமாறு :-

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஸ்ரீ கோவிந்த சுவாமிகளை பல தடவை பார்த்து மகிழ்ந்துள்ளார். ஸ்ரீ கோவிந்தசுவாமிகள் சுப்ரமணிய பாரதியாரின் இல்லத்திற்குச் சென்றுள்ளார். சுவாமிகளின் வருகையினால் அவரின் இல்லம் புனிதமடையும், ஞானிகள் பாதம் 'பட்டால் அவ்விடம் தூய்மையாகும் என்று பாரதியார் கூறுகின்றார்.

கோவிந்தசுவாமிகள் 1908 - 1918 இடைப்பட்ட ஒரு காலப்பகுதியில் புதுவையில் நடமாடி வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. பின் அவர் எங்கு சென்றார்? என்ன ஆனார்? என்று யாருக்கும் தெரியவில்லை. புதுவை வாழ் மக்களிடம் இவரைப் பற்றி எவ்வளவோ கேட்டு விசாரித்தும் பலனில்லை. வந்ததை முடித்துக்கொண்டு சென்று விட்டார். எப்பொழுது, எங்கு, சென்றார் எனச் சரியாக அறிய இயலவில்லை.

ஒருநாள் ஸ்ரீ கோவிந்த சுவாமிகள் பாரதியாரின் வீட்டிற்கு வந்தார். பாரதியாரோ அவரை அருளன்போடு அழைத்து உபசரித்தார். பின் சுவாமிகள் பாரதியாரை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார். பல ஆண்டுகளுக்கு முன் பாரதியாரின் தந்தை இறந்துவிட்டார். அவரின் உருவத்தை பாரதியாருக்குக் காட்டினார். பாரதியார் தன் தந்தையைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் பாரதியாரின் தாயின் உருவத்தையும் காட்டினார். இவற்றை எல்லாம் நேரில் கண்ட பாரதியார் கோவிந்த சுவாமிகளே தமக்குத் தக்க குரு என்று சரணடைந்தார். பாரதியாரின் மரண பயம் நீங்கியது. ஆத்ம பலம் பெருகியது.

இன்னொரு நாள் கோவிந்த சுவாமிகள், பாரதியார் வீட்டுக்கு வந்தார். அன்பு வள்ளலாகிய அவரைக் கண்டு பாரதி மனம் மகிழ்ந்தார். இவர் நம்மை நாடி வந்தது நாம் பெற்ற பேறு. ஞானப்பேற்றை இவரிடம் அறிவோம் என்று எண்ணினார். உடனே அவர் கோவிந்த சுவாமிகளை நோக்கி, "ஐயனே! சாவைப் போக்கும் வழியை அருளி, மெய்ப் பொருளை எனக்கு உணர்த்துவீராக" என்று வேண்டினார். அதற்கு கோவிந்தசுவாமிகள்,"சிவபெருமான் திருவடிகளை முடிமேற்கொள்வோம், பந்தமும் பயமும் அற்றுப் போகும். 'அதுவே, நீ!' என்று வேதம் கூறுகிறது. அது என்பது, கண்முன்னர் இருக்கும் பொருளைக் குறிக்கிறது. எல்லாப் பொருள்களும் 'அது' என்றால், நீயும் அதுவே. அதனால் எத்துன்பம் வரினும் இறைவனின் தாள்களை மனதிலே இருத்தி வாழ்வாய்.நான் கூறியதே சாரமுள்ள பொருள். இனிக் கவலை கொள்ள வேண்டாம். ஈரமும் வீரமும் பொருந்திய மனத்தினராலேயே, இறைவனைக் காணுதல் இயலும். அருளை மனத்தில் இருத்தி, தீரச் செயல்கள் புரிவாயாக. சமய பேதமற்று, நம்முடன் வாழும் கிறிஸ்தவர், முகமதியர் ஆகியோரிடமும் அன்பு காட்டுதல் வேண்டும். ஐந்து கண்டங்களைக் கொண்ட இந்த உலகில் கோடி மதங்கள் உள்ளன. பௌத்தம், சமணம், பார்ஸி, சீக்கியம், கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், யூதம், தாவோ, கன்., பியூசியஸ் எனப் பல மதங்கள் உள்ளன. எல்லா மதங்களும் ஒரே கருத்தைக் கூறுகின்றன.....'

சித்தானைக்குட்டி சுவாமிகளின் இயற்பெயர் (பூர்வாஷ்ரம பிள்ளைப் பெயர்) கோவிந்தசாமி. அவர் இந்தியாவில் இராமநாதபுரத்தில் பிறந்து வளர்ந்து வந்தவர். கோவிந்தசாமி" பெரியானைக்குட்டிச் சுவாமிகளை குருநாதராகக் கொண்டதால் ஈழத்தில் மக்களால் □சித்தானைக் குட்டி சுவாமிகள்□ என் அழைக்கப்பட்டார். மகாகவி போற்றி யுள்ள கோவிந்தசாமி சித்தானைக்குட்டிச் சுவாமிகளையே குறிக்கின்றது என்பன எமக்குத் தெளிவாக புலனாகின்றன. எனவே ஆத்மஜோதி முத்தையா அவர்கள் எழுதிய சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் வாழ்க்கைச் சரித்திரத்தில் கோவிந்தசாமி இலங்கைக்கு வரமுன்பு பாரதியை புதுவையில் சந்தித்த 1908-1910க்கு இடைப்பட்ட காலப் பகுதி விடுபட்டுப்போன பகுதி எனக் கருதக் கூடியதாக உள்ளது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்களின் நூலில் 'சுயசரிதை' என்னும் பகுதியில் கோவிந்த சுவாமிகளைப் போற்றிப் பாடிய பாடல் :-

'வண்மைதிகழ் கோவிந்த ஞானி, பார்மேல்
யாங்கற்ற கல்வியெல்லாம் பலிக்கச் செய்தான்,
எம்பெருமான் பெருமையையிங் கிசைக்கக் கேளீர்!
தீங்கற்ற குணமுடையான் புதுவையூரார்
செய்தபெருந் தவத்தாலே உதித்த தேவன்
பாங்குற்ற மாங்கொட்டைச் சாமிபோலே
பயிலுமதி வர்ணாசிர மத்தே நிற்பான்.
அதனையிந்நாட் கோவிந்தசாமி செய்தான்
துன்பமுறும் உயிர்க்கெலாம் தாயைப் போலே
சுரக்குமரு ளுடையபிரான் துணிந்த யோகி
அன்பினுக்குக் கடலையுந்தான் விழுங்க வல்லான்
அன்பினையே தெய்வமென்பான் அன்பே யாவான்
மன்பதைகள் யாவுமிங்கே தெய்வம் என்ற
மதியுடையான், கவலையெனும் மயக்கம் தீர்ந்தான்
பொன்னடியால் எம்மனையைப் புனித மாக்கப்
போந்தானிம் முனியொருநாள் இறந்த எந்தை
தன்னுருவங் காட்டினான் பின்னர் என்னைத்
தரணிமிசைப் பெற்றவளின் வடிவமுற்றான்
அன்னவன்மா யோகியென்றும் பரம ஞானத்
தனுபூதி யுடையனென்றும் அறிந்து கொண்டேன்
மன்னவனைக் குருவெனநான் சரணடைந்தேன்
மரணபயம் நீங்கினேன் வலிமை பெற்றேன்'

சித்தானைக்குட்டிச் சுவாமிகள் தொடர்பாக மேலும் கிடைத்துள்ள வேறுசில செய்திகள் பின்வருமாறு :-

சிவயோக சுவாமிகள் 1910-1911க்கு இடைப்பட்ட காலத்தில் கதிர்காமம் பாதயாத்திரையாக சென்றபோது சித்தானைக்குட்டிச் சுவாமிகளை சந்தித்துள்ளார். 'யோக சுவாமி' என்னும் திரு. அம்பிகைபாகனால் எழுதப்பட்ட நூலில், ஆசிரியர் வல்லிபுரம், பின்வருமாறு சிவயோகசுவாமிகள் தனக்குச் சொன்னதாக வெளிவந்துள்ளது.

"மட்டக்களப்பிற்கு சமீபமாக செல்லும் வழியில் காய்ச்சல் தொடங்கியது, வழிநடக்க இயலாமல் கல்லொன்றை தலையின் கீழ் வைத்து ஒரு மரத்தின் கீழ் படுத்தேன். விடியற்காலை எழுந்தபோது காய்ச்சல் ஓய்ந்து போச்சு. கல்லின் மேல் இருபத்தைந்து சதம் இருந்தது. அதை எடுத்து தோசை வாங்கி சாப்பிட்டு விட்டு நடந்து செல்லுகையில் சித்தானைக்குட்டிச் சுவாமி என்னைக் கண்டார். ஓடிவந்து என்னைக் கட்டித்தழுவிக் கொண்டு உன்னைக் கண்டபடியால் மழை பெய்ய வேண்டும் என்றார். இப்போது மழை பெய்யக் கூடாது இன்னும் ஒரு மணித்தியாலத்தில் பெய்ய வேண்டும் என்றேன். ஒரு மணித்தியாலத்தின் பின் மழை பெய்தது."

'யாத்திரையை சிவயோக சுவாமிகள் முடித்துக் கொண்டு கொழும்பு வழியாகத் திரும்பும்போது சித்தானைக்குட்டியின் குருநாதர் பெரியானைக்குட்டியை கண்டார். அவருக்கு பெரியானைக்குட்டி, ஐந்து சத நாணயத்தைக் கொடுத்து 'தும்பிக்கை இது நம்பிக்கை', என ஆசீர்வதித்தார்.

சித்தானைக்குட்டிச் சுவாமிகள் விபுலானந்தர் அடிகள் மீதும் தனிப்பட்ட அன்பு வைத்திருந்தார். அடிகளாருக்கு ஏற்பட்ட நோயைத் தாமே ஏற்று அனுபவித்தார் என அறியப்படுகிறது.

இலங்கையில் பல்லாண்டுகள் வாழ்ந்து 'ஈழத்து சித்தர்கள்' எனப் போற்றப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சார்ந்த காரைதீவில் 10.08.1951 ஆம் ஆண்டு சமாதியடைந்துள்ளார். சித்தானைக்குட்டிச் சுவாமியின் அடியார்கள் காரைதீவில், 'சித்தர் சேவாசங்கம்' நிறுவி அவர்களின் சமாதியை பராமரித்து வருகிறார்கள்.

சித்தர்கள் அளப்பரிய ஆற்றல் உள்ளவர்கள்.அட்டமா சித்திகள் யாவும் சித்தர்கள் பால் சரண் புகுந்தன எனினும் அவர்கள் வித்தைகள் செய்து மக்களின் மனத்தை மயக்குவதை நோக்கமாகக் கொண்டவர்கள் அல்ல.மாபெரும் ஞானியாகிய சிவயோக சுவாமிகள் தன் நற்சிந்தனையில் '...தத்துவமெல்லாம் சடமெனக் கண்ட வித்தகச் சித்தர்..' எனச் சித்தர்களின் தன்மை பற்றி பாடியுள்ளார்.

ஈழத்து சித்தர்களுடைய தோற்றத்தினால் மக்களுடைய அகவாழ்விலே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டதைக் காணக் கூடியதாக உள்ளது. ஒளிர்விடும் ஞானத்தால் பரசித்தி பெற்ற சித்தர்களின் சமாதிக் கோயில்கள், மடாலயங்கள், பாடல்கள் ஆகியன ஆன்மீக சுடராய் இன்றும் மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

"ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ? ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ? ஆயிரம் நூல் எழுதினாலும் முடிவறாதாம்?" என மகாகவி பாரதி சித்தர்களைப் போற்றியுள்ளார். சிவன் பாதம் நினைந்துருகும் சித்தர்களின் பாதங்களை நாமும் போற்றுவோமாக!.

உசாத்துணை நூல்கள்

1. அம்பிகைபாகன்.ச, (1972) யோகசுவாமிகள், லட்சுமி பிரின்டர்ஸ், கொழும்பு 13
2. ஆண்டியப்பன்.தே,(1982) பாரதியாரும் சித்தர் மரபும். சென்னை
3. ஜெயநாராயணகண்ணன்.ஆர்.என், (1978) ஞானபூமி, சந்தான அச்சுத்தொழிலகம், புதுச்சேரி 1
4. கோதண்டராமன்.பா, (1980) புதுவையில் பாரதி, பழயப்பா பிரதர்ஸ், சென்னை
5. நற்சிந்தனை. (2009) சிவதொண்டன் சபை. யாழ்ப்பாணம்.
6. சம்பத்.ஆர்.சி, (2002) பாரதியின் குருமார்களும் நண்பர்களும் சோதனா பிறஸ் 600098
7. சைவநெறி தரம் 11 (2007) இலங்கை அரசாங்க பாடநூல் பதிப்பு
8. சுப்பிரமண்ய பாரதி (1968) பாரதியார் கவிதைகள், கோவை
9. சுப்பிரமண்ய பாரதி (1964) மகாகவி பாரதியார் கட்டுரைகள், அருணா பதிப்பகம் மதுரை
10. மங்கள முருகேசன்.ந.க.பேராசிரியர் (2012) பாரதியாரும் நல்லிதயங்களும், தென்றல் பதிப்பகம் சென்னை 600014
11. முத்தையா. நா. ஆத்மஜோதி, (1972) சிவரஞ்சனம் ஓவ்செற் பிரிண்டர்ஸ் கோண்டாவில்

வாழ்வியல் சிந்தனை

க. பாலசுந்தரம்

மனிதன் அமைதி, அமைதி என்று கூவிக் கொண்டு அமைதி வாழும் இடங்களையெல்லாம் அழித்து விட்டான். அவன் ஆற்றலையும் மீறி அமைதி இன்னும் ஒரே ஒரு இடத்தில் தான் வாழ்கிறது. அந்த இடம் தான் மயானம்.

மரணத்தின் மடியில் தாய் துவண்டு கொண்டிருக்கும் போது, மகவு ஒன்று அவள் மடியில் தவழ்ந்து கொண்டிருப்பதற்குப் பெயர்தான் பிறப்பு.....

இரவு மடிந்து காலை விடிந்தது போல் மரணப் படிகளில் பிறப்பு ஆரம்பமாகிறது.

ஆண்டவனின் படைப்பாக இவ்வுலகில் ஆரம்பித்த மனித வாழ்வு, சாவென்னும் மயானத்தில் முடிவடைகிறது.

தொடக்கி வைக்கும் உலகத்தைவிட முடித்து வைக்கும் மயானம் தனித்தன்மை வாய்ந்தது.

தொடக்கம் மனிதனை ஆர்ப்பாட்டத்தில் தள்ளுகிறது. முடிவு, மனிதனை அமைதியில் வைக்கிறது....

தொடக்கம் குழப்பங்களைத் தருகிறது. முடிவு அவைகளைத் தீர்த்து வைக்கிறது.

தொடங்கிய வாழ்வுக்கு அமைதி தேடி அலைந்த மனிதனுக்கு, முடிவு அமைதியைத் தருகிறது.

ஆரம்பத்தைவிட இறுதி இனிமையானது. முதல் கேள்விக்குறி....? முடிவு முற்றுப்புள்ளி.

தன் வாழ்வை ஆரம்பித்த ஆண்டவனின் உலகை மனிதன் கெடுத்து விட்டான்.

தன் வாழ்வை முடிக்கப் போகும் அமைதியை அவனால் கெடுக்க முடியவில்லை.

நண்பர்களே.....?

ஆண்டவனின் இப்பரந்த உலகை, இங்கிருந்து கொண்டே பார்க்கிறீர்கள் அல்லவா ?

தொடக்கத்திற்குத் தாயின் மடியைத் தந்த ஆண்டவன், முடிவிற்கு ஊருக்கு ஒதுக்குப் புறமாய் ஒரு மயானமும் தந்துள்ளான். அமைதியே உறைவிடமான அவ்விடத்தைப் பார்க்க வேண்டாமா? பார்த்து விட்டுத் திரும்பிவிடுவோம். அஞ்ச வேண்டியதில்லை.

இவ்வூரை விட்டுப் பிரியும் ஒற்றையடிப்பாதையால் என் பின்னே வாருங்கள். அவ்வமைதியின் உறைவிடத்தைக் காட்டுகின்றேன்.

நண்பர்களே! சற்று நில்லுங்கள்.

இதோ, ஊரின் ஒதுக்குப் புறமாய் ஒரு மூலையில் கம்பீரமான சமாதிகள் பலவும், சாம்பல் மேடுகளும் நிறைந்து காட்சி தருகிறதல்லவா. அதுதான் இச்சிற்றூருக்குரிய "மக்கள் மயானம்".

இம்மயானத்தில்.....

மணம் பரப்பும் மலர்க் குளங்களில்லை, தூபத்தின் நறுமணம் கிடையாது.

வேதாகமங்களின் ஒலிகள் இங்கே கேட்பதில்லை. திருமறைகளின் பாராயணம் இங்கில்லை. இம்மயானத்திற்கு, கதவில்லை-பூட்டில்லை. இது எவரின் உரிமையுமில்லை-பரம்பரைச் சொத்துமல்ல.

இங்கிருந்து எந்தத் தெய்வத்திற்கும் ஊர்வலம் தொடங்குவதில்லை. ஆனால் பல இடங்களில் தொடங்கும் ஊர்வலங்கள் இங்கு வந்து முடிவடையும்.

ஆலயமணியற்ற இம்மயானத்தில், எங்கும் பேரமைதி குடி கொண்டிருக்கும். அடியார் குழாமோ, காலை, மாலை தரிசனத்திற்கு வரும் பக்தர் கூட்டமோ கிடையாது. இம்மயானத்திற்கு ஒரு காவல்காரன் இருக்கிறான். அவன் பெயர் ஆனந்தன்.

ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்கும் அவன் தன் ஓய்விற்கும், ஊதியத்திற்குமாய் அங்கு போவான்.

அவன் இங்கு வந்து எந்தத் துதிப்பாடலும் பாடமாட்டான்.

அமைதியின் உறைவிடமான இங்கு அமைதியாகவே உட்கார்ந்திருப்பான். அமைதியோடு அமைதியாக இருந்து சிந்திப்பது "நவில் தொறும் நூல் நயம்போல" அவனுக்கு இனிமையாக இருக்கும்.

கண்களால் பேசிக்கொள்ளும் காதலர்களைப்போல் அவன் மௌனமாக சமாதிகளுடன் உரையாடுவான். ஒவ்வொரு சமாதியும் வகை வகையான வாழ்க்கைப் பாடங்களைச் சொல்லிக்கொடுத்து அவனுக்கு உண்மையை உணர்த்தும்.

மகான்களும் மகாத்மாக்களும், இறந்தகால இலக்கியங்களும், பேரறிஞர்களும் சொல்ல மறந்தவைகளை இங்குதான் பாடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறான்.

விடைகாண முடியாத வினாக்களுக்கெல்லாம் அவனுக்கு இங்குதான் விடை கிடைக்கிறது. முடிவே இல்லாத ஐயங்களுக் கெல்லாம் அவனுக்கு இங்குதான் தெளிவு கிடைக்கிறது.

புதிதாக குடிவரப்போகும் வீட்டை அடிக்கடி சென்று பார்க்கும் மனிதனைப் போல என்றோ ஒருநாள் தான் வந்து சேர

வேண்டிய இடத்தை அடிக்கடி வந்து காண்பது அவனுக்கு ஒரு மன நிறைவைத் தந்தது. உயிரற்ற தன் உடலைத் தழுவப் போகும் மண்ணை உயிரோடு இருந்து கொண்டே தொட்டுப் பார்ப்பதில் இனம் தெரியாத சுகத்தை கண்டான். இளைஞன் தன் காதலியைப் பற்றி எண்ணிப்பார்த்தல் போல் அவன் தன் சாவைப் பற்றி எண்ணிப் பார்ப்பான்.

விழாக்கோலம் பூண்ட திருமண வீட்டைவிட அமைதியான இவ்விடமே அழகானதாக அவனுக்குத் தெரிந்தது.

பகட்டும் படாடோபமும், பொய்யும் போலித்தனமும், ஆட்சிபுரியும் இவ்வுலகில் அவன் மிகமிக விரும்பிய இடம் இது ஒன்றுதான். அதனாலே தான் காவலனுமானான்.

முதுமையில் அரும்ப வேண்டிய நிலை அவனுள்ளத்தில் இளமையிலேயே மலர்ந்துவிட்டது. ஒளியின் முடிவும் இருளின் தொடக்கமும் சந்திக்கும் இந்த நேரத்தில் அதோ.....

அவன் ஒரு சமாதியில் சாய்ந்து கொண்டிருப்பது எங்களுக்கு தெரிகிறதல்லவா? எழுந்து விட்ட இரவும் விழுந்துவிட்ட பகலும் அவனிடம் மாற்றத்தைச் செய்ய முடியவில்லை. மங்கிய ஒளியில் அவன் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான். நண்பர்களே மெதுவாக என்பின் வாருங்கள். அவன் என்ன எழுதுகிறான் என்று பார்ப்போம்.

சமாதியின் பின்புறமாக நின்று சற்று அவன் எழுதுவதை அவதானியுங்கள். தெளிவாகத் தெரிகிறதல்லவா? சரி படியுங்கள்...

இறைவா, நீ மனிதனுடன் சாவைப் படைத்தாய், நீ படைத்த சாவிற்கு நீ படைத்த மனிதன் ஒரு மயானத்தை அமைத்தான். தான் அமைத்த இடத்தை மாற்றாமல் வைத்துக் கொள்ளத் தெரிந்த மனிதனுக்கு தன்னால் அப்படியே இருக்க முடியவில்லை, அவன் அடியோடு மாறிவிட்டான்.

முதலும் முடிவும் வரைந்த வட்டத்தினுள் ஆசைக் கயிற்றினால் சுற்றி விடப்பட்ட பம்பர மனிதனைப்பற்றி எண்ணும்போது எனக்கு, சிரிப்பு வருகிறது.....

விடியப்போகும் பொழுதுக்காக கவலைப்பட்டு விடிந்துவிட்ட பொழுதை வீணாக்குபவனாக மனிதன் இருக்கிறான்.

நாளை என்ற இருள் இன்று என்னும் ஒளியைத் தின்பது தெரியாது வாழ்கிறான். செத்துவிட்டவன் சாகவிருப்பவனுக்கு ஆசானாக அமைய முடிகிறது. ஆனால் வாழ்பவன்.....

நான் இதனால்தான் சாகவிருப்பவனைவிடச் செத்துவிட்டவனைப் பாராட்டுகிறேன். மனிதன் அமைதி அமைதி என்று கூவிக்கொண்டு அமைதி வாழும் இடங்களையெல்லாம் அழித்துவிட்டான். அவன் ஆற்றலையும் மீறி அமைதி இன்னும் ஒரே ஒரு இடத்தில்தான் வாழ்கிறது. அந்த இடம் தான் இந்த மயானம்.....

மனிதன் இங்கும் வந்து அமைதியை அழித்திருப்பான். ஆனால் அவன் இங்கு வரும்பொழுதே தான் யார்? என்பதை உணர்ந்து கொள்வதால், வாயைமூடிக்கொண்டு திரும்பி விடுகிறான்.

இறைவா தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலையுடன் உன் பதிக்கு வந்து மீளும் மனிதர்களின் உள்ளத்தில் நியாயமாகப் பிறக்க வேண்டிய தெளிவு பிறப்பதில்லை. ஆனால் சவத்தோடு மயானத்துக்கு வந்து போகும் மனிதன் மனத்தில் பிறக்க வேண்டிய தெளிவு இப்போது பிறக்கின்றது.

மனிதன் மயானத்திற்கு நாள் தோறும் வந்து போகக் கற்றுக்கொண்டால் மனிதன் மனிதனாகி விடுவான். பின் வாழ்க்கை வாழ்க்கையாகவும், உலகம் உலகமாகவும் இருக்கும்.

அமைதி வேண்டுமென்று அது இல்லாத இடமெல்லாம் தேடி, அலைந்து, இருந்த அமைதியையும் அழித்துக்கொண்ட பரிதாபத்திற்குரிய மனிதர்களே! ஏன் இம்மயானத்திற்கு வந்து போகப் பயப்படுகிறீர்கள்.?

இங்கு வந்தால் மனம் பண்பட்டு நல்லவர்களாகி விடுவோம் என்று அஞ்சுகிறீர்களா ?

இம் மயானம் -

தனிமையின் உருவமாகவும்.....

நிம்மதியின் பிறப்பிடமாகவும்.....

அமைதியின் உறைவிடமாகவும்.....

விளங்குவது உங்களுக்குத் தெரியவில்லையா? அரும்பு போன்ற குழந்தைகளும், பனிமலர் போன்ற கன்னியரும் வாலிபரும், வாடியுதிர்ந்த மலர் போன்ற முதியவர்களும், இம்மயானத்திற்தான் அமைதி காண்கிறார்கள்.

ஊருக்கு உழைத்தவனும், ஊரை ஏமாற்றியவனும் இம்மயானத்திற்தான் அமைதி காண்கிறார்கள்.

கற்புக்காய் உயிர்விட்டவரும், கற்பை விலை பொருளாக்கியவளும் இங்குதான் அமைதி கொண்டார்கள்.

வீரனுக்கு கிடைத்த ஒரே அமைதி கோழைக்கும் கிடைக்கிறது.

முதலாளி பெற்ற அமைதியைத் தொழிலாளியும் பெற்றுவிட்டான்.

கடன் கொடுத்தவனுக்குத் தரப்பட்ட அமைதி கடன் பெற்றவனுக்குத் தரப்பட்டுள்ளது.

துறவி கலந்த அமைதியில் இல்லறத்தானும் கலந்துள்ளான்.

அழுது கொண்டு வாழ்ந்தவனுக்கும், சிரித்துக் கொண்டு வாழ்ந்தவனுக்கும் ஒரே தன்மையான அமைதி கிடைத்துள்ளது

கை சிவக்க கொடுத்தவனும், கைவலிக்கப் பிச்சை வாங்கியவனும் சமமான அமைதியைத் தேடிக் கொண்டனர்.

ஆஸ்திகனும் நாஸ்திகனும் ஒரே அமைதியைக் கண்டனர்.

இங்கு எல்லாத்தரப்பினரும் ஒரே தன்மையான அமைதியில் வேறுபாடில்லாமல் தூங்குகின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்ற எண்ணவில்லை. அதனால் ஏற்றத் தாழ்வுகள் இல்லை.

ஒருவரை ஒருவர் வெறுக்க வில்லை. அதனால் வேறுபாடுகளில்லை.

ஒருவரிடமும் விருப்பு வெறுப்புகளில்லை. அதனால் இன்பமும் துன்பமும் இல்லை.

அவர்களின் கண்கள் பார்க்கவில்லை. அதனால் ஆசை பிறக்கவில்லை.

வாய் பேசவில்லை. இதனால் வழக்கு வம்பு தோன்றவில்லை.

மனம் சிந்தனையற்றுக் கிடக்கிறது, அதனால் குழப்பங்களில்லை.

கையும் காலும் அசையவில்லை. அதனால் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் அடக்கிவிட்டன.

இப்படி ஒவ்வொன்றின் மூலகங்களும் ஓய்வு எடுத்துக் கொண்டதால் எங்கும் அமைதி நிறைந்து விட்டது.

பூந்தோட்டத்தைப் புழுதி மேடாக்கிப் போர்க்களம் கண்டவர்கள் இம்மயானத்துக்கு வந்ததும் அமைதியின் காவலர்கள் ஆகிவிட்டனர். தாங்கள் கட்டிக்காத்த ஒவ்வொரு உறுப்புகளையும் சிதறப்போட்டு அவர்கள் அமைதி பெற்றுவிட்டனர். எந்த உடலை வளர்ப்பதற்காகப் பேசக்கூடாதவற்றைப் பேசி, செய்யக்கூடாதவற்றைச் செய்து, நடக்கக் கூடாதபடியெல்லாம் நடந்தார்களோ, அந்த உடல் அவர்களால் காப்பாற்ற முடியாது உக்கி உருக்குலைந்து கிடக்கிறது. எந்த மண்ணின் துணையால் பசியைப் போக்கிக் கொண்டார்களோ, அந்த மண்ணுக்கே இரையாகிவிட்டார்கள். மண் தான் வளர்த்த உடலைத் தானே அழித்து விடுகிறது. முதலே முடிவிற்கும் காரணமாகிறது. இறைவா, இம்மயானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, என் மனம் பசுமையான நினைவுகளில் குளித்தெழக் காண்கிறேன். இம்மயானத்தில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டால் எப்பொழுதுமே குளிர்ந்த எண்ணங்கள் வீசிக் கொண்டிருக்குமல்லவா? அப்படி இங்கு நிரந்தரமாக யான் குடிவருமுன்.....

தன் சீர் இளமைத்திறன் இழந்து, நிலைகலங்கி, செயல் மறந்து நிற்குமென் தமிழ்த்தாய்க்கும் குழந்தைகளுக்கும் என் பிறந்த பொன்னாட்டின் அரியணையில் சரி நிகர் சமானமும், தலை நிமிர்ந்து வாழும் தன்மானமும் பெற்றுக் கொடுக்கும் உச்சிப்படிக்கட்டுக்கு ஒரு அடிக்கல்லையாவது எடுத்து நான் சாந்து பூசவேண்டும்.

என் சவம் எனது பொது வாழ்வை மதிக்கும் நாலு பேரின் தோளில் எடுத்துச் செல்வதே எனக்குச் சம்மதமானது.

பொது மக்களின் கண்ணீரே முதலில் என் சமாதி மீது சிந்தவேண்டும்.

இந்த விருப்பங்களை நிறை வேற்றும் முயற்சியிலே தான் நான் சாவேன். அழுது கொண்டே பிறந்தேன் சிரித்துக்கொண்டே சாவேன்.....

இத்தோடு எழுதுவதை நிறுத்திவிட்டு எங்கோ பார்க்கிறான்.....

பேரானந்தக் கடலில் மூழ்கியிருக்கும் ஆனந்தனின் அமைதியைக் கல்லக்க வேண்டாம். புறப்படுங்கள் போகலாம்.

நண்பர்களே!

இம்மயானம் அவனுக்குத் துணிவையும் தெளிவையும் தந்திருக்கிறது..... ஆனால் உங்களுக்கு.....?

இந்துமா மன்றமெனும் இமயம் வாழ்க!

சி. சரவணபவன் (சிற்பி)

1. இந்துமா மன்றமெனும் பெயரைக் கொண்டு
எம்மிலங்கைத் தலைநகரை இருப்பாய்க் கொண்டு
இந்து நதிக் கிப்பாலே யிருப்ப தாற்றான்
இந்துமதம் எனும்பெயரும் வந்த தென்றே
வந்தவர்கள் சொல்லியதை வரவேற் காமல்
வையமெலாம் வாழும்வரை மலையாய் நிற்கும்
இந்துமதம் சக்தி, சிவன் பிள்ளை, விஷ்ணு,
எழிற்குமரன், சூரியன்சேர் மதமே என்கும்.

2. இந்துவெனி லிரக்கமுளான் ஈகை யாளன்
இம்சையெனுங் கொடுமையினுக் கெதிராய் நிற்பான்
சொந்தநலம் பார்க்காதான் சுகபோ கத்தைத்
துய்க்காதான், துன்பதுய ரங்கட் காளாய்
நொந்தவருக் குதவுவதை நோக்காய்க் கொள்வான்
நொடிப்போதும் பிறர்தீமை நெஞ்சிற் கொள்ளான்
எந்தவிடர் வந்திடினும் இறையை நம்பி
இயங்கிமுழு தாயகற்றி இதமே செய்வான்.

3. எல்லாமே அவன்செயல்தான் என்றே கொள்வான்
இதயமெனுங் கோவிலிலே இறையைக் காண்பான்
நல்லாரின் சங்கமத்தை நாடிச் செல்வான்
நன்றிமற வாதிருப்பான் நலமே செய்வான்
தொல்லைதுய ரோட்டுதற்குத் துணிந்தே நிற்பான்
தூயவுளங் கொண்டவரைத் துணையாய்க் கொள்வான்
இல்லையென வந்தவரின் னிதயந் துள்ள
ஏற்றமுறுஞ் சேவையினை இனிதாய்ச் செய்வான்.

4. தருமத்தை வாழ்வினடிப் படையாய்க் கொள்வான்
தனக்கெனவே வாழாமற் பிறர்க்காய் வாழ்வான்
கருமத்தின் விளைவுகளிற் கருத்தை வையான்
கடமைகண் ணியங்கட்டுப் பாட்டைக் காப்பான்
பெருமைசே ரிலட்சியத்தைப் பேணிக் கொள்வான்
பெற்றோர்கற் றோர்களிலே பிரியம் வைப்பான்
திருக்கோவி லிற்றொண்டைத் தினமுஞ் செய்வான்
தெய்வநீ தியினியல்பைச் சிந்தித் துய்வான்.

5. என்றபெரும் உண்மைகளை யெல்லோ ருள்ளத்
துறுதிபெறச் செயும்வகையிற் சேவை செய்தும்
நன்று விளை வித்துவரும் நாவல் லோரின்
ஞானவுரை யையினைநாம் நயக்கச் செய்தும்
என்றுமுள தெங்களிறை வனையே போற்றும்
எழுத்தினைநூ லுருவினிலே ஏறச் செய்தும்
இன்றுமெமக் குரியபல பணியைச் செய்யும்
இந்துமா மன்றமெனும் இமயம் வாழ்க.

(மாமன்றப் பொன்விழா மலர் – 2005)

நாவலர் ஞானபரம்பரையைத் தொடர வைத்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுத் தலைமை தாங்கி வளர்த்து அதன் தந்தையாகிவிட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். நாவலர் பெருமானுக்குப் பின்னர் அவரின் அடிச்சுவட்டிலே மறுமலர்ச்சிப் பணிகளைத் தொடர நாவலர் பரம்பரை தோன்றியது. நாவலர் அணியின் விசுவாசம் மிக்க தளபதிகளுள் ஒருவராகவும் நாவலர் நோக்கினையும் போக்கினையும் உள்ளபடி அறிந்து உலகிற்குணர்த்திய தலைமகனாகவும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை விளங்கினார்.

பண்டிதமணி எவ்வாறு நாவலர் பரம்பரையுடன் இணைந்து கொண்டார்? என்ற வினாவும் கூடவே எழுகின்றது. அவரது ஆளுமை வளர்ச்சியில் அவர் நாவலர் பரம்பரையினர் என்ற அம்சம் கணிசமான பங்கினைச் செலுத்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

1917ஆம் ஆண்டில் நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி மாணவனாகச் சேர்ந்தார். நாவலரின் நேர் மாணாக்கனான சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் காவிய பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். நாவலரின் தமையனாரின் புதல்வர் த.கைலாசபிள்ளை அப்பாடசாலையின் மனேச்சராக விளங்கினார். அவரும் நாவலரிடம் கற்றவர். அவர்கள் இருவரிடமும் பண்டிதமணி நாவலர் மாணவ பரம்பரையில் இடம் பெறுவதற்குக் கால்கோளாயிற்று.

வண்ணார்பண்ணையில் 1848 இல் நாவலரால் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை மேற்கத்தைய தேச முறை சார்ந்த கல்வி அமைப்பினையும் பாடபோதனையையும் கொண்டிருந்தது. ஆனால் சைவத் தமிழ் சூழல் நிலவியது. அதே வளவில் மற்றோர் இடத்தில் சைவத் தமிழ் மரபுக் கல்வியைப் புகட்டுவதற்கு நாவலரால் காவிய பாடசாலை நிறுவப்பட்டது. மரபுவழிவந்த குருசீட முறைமை திண்ணைப் பள்ளிக்கூட அமைப்பு என்பன அங்கு பேணப்பட்டன.

சைவத் தமிழ் மறுமலர்ச்சியின் முக்கிய பெறுபேறாக உருவான நாவலர் பரம்பரை காவிய பாடசாலையிலிருந்து முகிழ்த்தது. இலங்கைத் தமிழ் மக்களின் சைவத்தமிழ்த் தேசியம் தனித்துவமானது என்ற ஓர் உணர்வினைத் தமிழ் மக்களிடையே தோற்றுவிக்கவும் நிறுவவும், அதனைத் தமிழ் நாட்டாரும் பிறரும் அறிந்து கொள்ளவும் நாவலர் பரம்பரையினர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இந்த வகையில் பண்டிதமணியின் பங்களிப்பு மிகப்பெரிது ஆகும்.

நாவலர் பெருமான் தனக்கொரு ஞானபரம்பரை உருவாக வேண்டுமென்றோ தனிச்சரித்திரம் எழுதப்படவேண்டுமென்றோ எண்ணிச் செயற்பட்டவரன்று. அவ்வாறு நினைத்திருந்தால் ஏதாவது வாழ்க்கைக் குறிப்பை விட்டுச் சென்றிருப்பார். நாவலரின் நேரடி மாணாக்கர்களும் அவர்கள் வழிவந்தோருமே குருபக்தியினால் உந்தப்பட்டு நாவலரின் எண்ணங்களுக்கு உருக்கொடுத்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவமும் தமிழும், சைவத் தமிழ் மக்களின் பண்பாடும் மரபுகளும் அந்நியரின் ஆக்கிரமிப்புக்களுக்குள்ளாகி இருந்தபோது இவற்றை மீட்டு பாதுகாத்து இவற்றின் மறுமலர்ச்சிக்காக அல்லும் பகலும் உணர்வோடு உழைத்துப் பெரும் பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். நாவலருக்குப் பின் இவற்றின் காவலராக நாவலர் ஞானபரம்பரையைத் துலங்க வைக்க எழுந்த ஞானபானுவாக இருபதாம் நூற்றாண்டில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை விளங்கினார்.

கல்வி என்பது விளக்கேற்றல் என்று நாவலர் கூறியுள்ளார். ஒரே விளக்கில் இருந்து பல விளக்குகளை ஏற்றிவைக்க முடியும். நாவலர் ஒரு ஞானவிளக்கு. இந்த ஞான விளக்கிலிருந்து பல ஞானவிளக்குகள் ஏற்றப்பட்டன. நாவலர் ஞானபரம்பரையினர் இந்த ஞானச் சுடர்களாக விளங்கினர். இந்த ஞானச்சுடர்களுள் மிகப் பிரகாசமான சுடராகப் பரிணமித்தவர் பண்டிதமணி.

- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்.

(நன்றி:- நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை)

கோயில்களில் சுவாமி திருவுலா வரும்போது மூலவரை வழிபடக்கூடாது. தன்னை கோயிலுக்கு வந்து வழிபட முடியாத பக்தர்களுக்கு தானே தேடிப்போய் அருள்வதற்காகவும் தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியைப் பார்வையிடும் விதமாகவுமே இறைவன் திருவுலா வருகிறான்.

மூலவரான சிலா திருமேனியில் இருந்து இறைவனின் அம்சத்தினை உலாவரும் விக்கிரகத் திருமேனிக்கு மாற்றிவிடுவதான ஓர் ஐதீகம் உண்டு. அதனால் உற்சவமூர்த்தி உலா வரும்போது மூலவரிடம் இறையதிர்வுகள் சற்றுக் குறைவாக இருக்கும். எனவேதான் அந்த சமயத்தில் மூலவரை தரிசிக்க இயலாதபடி திரையிட்டு விடுவார்கள்.

(குமுதம் பக்தி)

தமிழும் சைவமும் வளர்த்த தமிழ் மன்னன் பரராசசேகரன்

க.சி. குலரத்தினம்

யாழ்ப்பாண இராச்சியத்தை அரசு புரிந்த தமிழ் மன்னர்கள் வரிசையில் 1467 முதல் 1478 வரை ஆட்சியிலிருந்த கனகசூரியன் என்பவனுக்குப் பின் அவனுடைய மூத்த மைந்தன், பரராசசேகரன் முறைப்படி அரசனாகி நல்லூரை அழகுபடுத்தி, நகரின் நாற்புறங்களிலும் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், தெற்கில் கைலாசநாதர் சிவாலயத்தையும், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயிலையும், வடக்கில் சட்டநாதர் சிவாலயத்தையும் கட்டுவித்தான்.

இவன் திருக்கோவலூரில் முறையாகத் தமிழ் படித்தவனாதலால், தமிழ்நாட்டிலிருந்து பெருந்தொகையான புலவர்களை வரவழைத்து நல்லூரைச் சூழக் குடியிருத்தி தமிழ் வளர்த்தபோது இவன் தம்பி செகராசசேகரனும் மருகன் அரசகேசரியும் பெரும் புலவர்களாகி, நாயன்மார்கட்டு என்னும் இடத்தில் தாமரைக்குளத்தருகே மாடமாளிகை அமைத்துத் தமிழ்ச்சங்கம் நிறுவி, சரஸ்வதி மகால் என்னும் நூலகம் அமைத்து ஆயிரக்கணக்கான ஏடுகளைத் தொகுத்து வைத்துப் படித்துப் பயன் செய்து பைந்தமிழ்ப் பரிபாலனம் செய்வாராயினர்.

பரராசசேகரன் பெயரால் இணுவில் பிள்ளையார் கோயில் நின்று நிலவுகிறது. எனவே இவன் நல்லூருக்கும் அப்பால் திருக்கோயில்கள் அமைத்துச் சைவபரிபாலனஞ் செய்தான் என்பது வெளிப்படை. பதினைந்தாம் நூற்றாண்டுப் பரராசசேகரன் பைந்தமிழ் வளர்த்த பக்திமான். அவன் புலவர்களுக்கு அள்ளிக் கொடுத்த தருகையான். அவன் காலத்து எழுந்த நூல்கள் பல நாயன்மார்கட்டு நூல் நிலையத்தில் இருந்தன என்றும் பிற்காலத்தில் பறங்கியர் காலத்தில் அழிந்தன என்றும் அறியக்கிடக்கிறது.

தமிழ்ப்பற்றும் முருக பக்தியும் மிக்க புலவர்கள்

பரராசசேகரம் என்னும் வைத்திய நூல் தந்த புலவர்கள் வடமொழி வல்லவராயினும் அவர்கள் செந்தமிழ் மீது பெரும் பற்றுக் கொண்டவர்கள். முருகபக்தியும் உள்ளவர்கள். முருக உபாசகர்கள். "ஆயுள்வேதப் பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப் பெட்புடைய தமிழ்பாவாற் பேசும் வண்ணம்" என்பார்.

"சூரனைத் துணைவரைச் சுற்றும் சேனையைக்
கூரிய வேலினிற் குறைத்து வானவர்
வாரண மங்கையை வதுவை செய்துடுங்
சீரிய வேள்பதஞ் சிந்தை செய்குவாம்"

இவ்வாறு முருகனுக்கு வணக்கஞ் செய்த புலவர் தென்கதிரை வேலவரரைப் போற்றும் செய்யுள்கள் பலவாகும். "கதிரை நன்னகர் வாழ் கதிர்வேல் முருகன் பதமலர் நாளும் பணிந்து போற்றும்" என்றும், "சோதிசேர் வடிவேலன் கதிரையின் மேய அண்ணல்" என்றும், "தொண்டர் பலப்பிணியகற்றிக் கதிரை மேவும் தாயன்" என்றும், "சிவனார் நெற்றி விழியில் வருஞ் சேயோற்குரிய கதிரைமலை" என்றும், "தாவிநடை பயிலுமயில் மீதேயேறித் தந்தையைச் சுற்றாமல் எங்குந்தானே சுற்றும் காவலன், தென்கதிரை வரை மருவும் வாசக் கடம்பன்" என்றும், செய்யுள்கள் தோறும் முருகன் திருவருள் உவமானமாகக் கூறப்பெற்றுள்ளது. பரராசசேகரம் வைத்திய நூலாக அமைந்தபோதிலும் செந்தமிழ் சைவநெறியும் சிறக்க வந்த வண்டமிழ்க் காவியம் எனக் கூறல் பொருத்தமுடையதாகும்.

வண்டமிழ் வளர்ச்சிக்கு வளமூட்டிய வைத்திய நூல்

பரராசசேகரன் தமிழ்நாட்டிலிருந்து வரவழைத்து நல்லூரில் குடியிருத்தி, உபசரித்த புலவர்களுள் பன்னிருவர் வைத்திய நிபுணர்கள். இவர்கள் வடமொழியில் அகத்தியர், தன்வந்திரி முதலானோர் செய்த நூல்களில் நல்ல தாடனம் உள்ளவர்களாயிருப்பக் கண்ட பரராசசேகரன், இவர்களைக் கொண்டு வண்டமிழ் வளஞ்சிறக்க ஒரு வைத்திய நூல் செய்வித்தான். அது இவன் பெயர் என்றும் நின்று நிலவுமாறு தமிழில் பன்னிரண்டாயிரம் செய்யுள்களைக் கொண்டமைந்துள்ளது.

பரராசசேகரம் என்னும் வைத்திய நூல் பல்லாண்டுகாலமாக ஏட்டுருவில் இருப்ப, இவற்றை அச்சுவாகனமேற்றி எல்லோரும் அறியத் தந்தவர் ஏழாலையூரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை பொன்னையா என்னும் பெரியாராவர். இவர் தலைசிறந்த சைவ சித்தாந்தியும் வைத்தியபூபதியுமாவர். இவர் எண்ணாயிரம் செய்யுள்கள் வரை அச்சில் வருமாறு அரிய முயற்சி செய்தவராவர்.

(நன்றி:- தமிழ் தந்த தாதாக்கள்)

ஆகஸ்ட் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி விரத தினம்

செல்வச் சிறப்பைத்தரும் வரலக்ஷ்மி விரதம்

பவிஷ்யோத்தர புராணத்திலே சிறப்பித்துக் கூறப்படும் இந்த வரலக்ஷ்மி விரதம் ஆவணிமாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையிலே அனுஷ்டிக்கப்பட வேண்டியது.

ஒருசமயம் உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, ஐயனே பூவிலகில் சகல செல்வ போகங்களையும் சௌக்கியங்களையும் புத்திர சம்பத்தையும் வழங்கக்கூடிய விரதம் எது? என்று வினாவியபோது அவர் உமாதேவியாருக்கு இந்த விரத மகிமையைக் கூறினார்.

முன்பு குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் இருந்தாள். அவள் நல்ல தெய்வ பக்தியும் தூய்மையும் ஆசார அனுஷ்டானமும் உடையவளாக இருந்தாள். ஒருநாள் அவள் கனவிலே வரலக்ஷ்மிதேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள். அவளும் உடனே சகல பெண்களையும் அழைத்து இப்புதுமையைக் கூறினாள்.

குறித்த விரத நாளிலே சகல பெண்களுமாக நகர் முழுவதும் அலங்கரித்து முறைப்படி இவ்விரதம் அனுஷ்டித்து வரலாயினர். என்றுமில்லாதவாறு அங்கு சகல செல்வமும் பொலிந்து விளங்கிற்று.

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்களாலே அலங்கரித்த மண்டப நடுவிலே மேடையொன்றில் நெல், அரிசி முதலியவற்றை முறைப்படி பரப்பித் தாமரைக் கோலத்தை அதன் மேல் இட்டுக் கும்பத்தை அதன்மீது வைக்க வேண்டும். ஏனைய பூஜைகளுக்கு நீர் நிரப்பிய கும்பம் வைப்பது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மி விரத பூஜைக்குப் பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்க வேண்டும்.

நல்ல கழிநூலிலே மஞ்சள் தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுக்கள் முடிந்து இந்தக் காப்பினைக் கும்பத்தில் வைத்துப் பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

வழக்கம்போல சங்கல்ப பூர்வமாக புண்யாகவாசனமுதலியபூர்வாங்கபூஜைகளுடன் விசேஷ உபசாரபூஜை, அங்கபூஜை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் நூலிலுள்ள ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து அதனை வலது கையில் கட்டிக் கொள்ள வேண்டும். பொதுவாக விரதங்களுக்குக் காப்புக் கட்டும்போது ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டுவது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மி பூஜைக்கு மட்டும்; இது பெண்களுக்குரிய விரதம் என்பதால் வலது கையிலேயே காப்புக் கட்டிக்கொள்ள வேண்டும். ஸ்லோகத்திலேயே இவ்வாறுசொல்லப்பட்டிருக்கின்றது.காப்பினைக் கையிலே கட்டும்போது சொல்லும் ஸ்லோகம் இது.

ஸர்வ மங்கல மாங்கல்யே ஸத்வப்ரீதா ப்ரணாலினீ!
தோரகம் ப்ரகி க்ருஹணாமி ஸபிப்ரீதா பவ ஸர்வதா!
பத்னாமி தக்ஷிணே ஹஸ்தே நவசூத்ரம் சுபப்ரதம்
புத்ர பௌத்ரபி வருத்திம்ச ஸௌபாக்யம் தேஹிமேரேமே!!

ஒன்பது முடிச்சுக்களுக்கும் உரிய நாமங்கள் வருமாறு. கமலா, ராம, லோகமாதா, விஸ்வஜனனீ, மஹாலக்ஷ்மி, க்ஷிராப்திதநயா, விஸ்வஸாக்ஷிணீ, சந்த்ரஸஹோதரீ, ஹரிவல்லபா இவை ஒவ்வொன்றுக்கும் முன்னால் ஓங்காரமும் பின்னால் நம! என்றும் சேர்த்துப் பூஜை செய்க.

விசேஷ நைவேத்தியமாக நெய்யுடன் கூடிய ஹவிஸ் (நெய்ச்சாதம்) சொல்லப்பட்டிருக்கின்றது. வரலக்ஷ்மி பூஜைக்குரிய விசேஷ அர்ச்சனைப் பொருள் அறுகு.

உபவாசம் போன்று கடுமையான விதிமுறைகள் இந்த விரதத்துக்கில்லை. மத்தியானம் ஒரு நேரம் போசனம் செய்யலாம். இரவு பலகாரபட்சணங்கள் ஏதாவது உட்கொள்ளலாம். ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

(நன்றி: மயூராபதி அம்மன் கும்பாபிஷேக மலர் – 2000)

ஆடிமாதச் சிறப்பு

ஆடிமாதம் என்பது தட்ஷிணாயன காலத்தின் தொடக்க காலம். இது வரை வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சூரியன் தனது தெற்கு நோக்கிய பயணத்தை தொடங்கும் மாதம். நம்முடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். அவர்களது இரவுக்காலமே இந்த தட்ஷிணாயன காலம் ஆகும். உத்தராயணக்காலம் சிவபெருமானை வழிபட உகந்தது என்றால் தட்ஷிணாயனம் அவரது வாம பாகத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு உரிய காலம் ஆகும். அம்மனுக்கு உகந்த ஆடி மாதம் நவராத்திரி ஆகிய பண்டிகைகள் வரும் காலம். இவ்வாறு இது வரை பகல் காலம் அதிகமாக வெப்பமாக இருந்த நிலை மாறி இரவு அதிகமாகவும் வெப்பம் குறையும் காலம் ஆரம்பிப்பதால்தான் ஆடிமாதங்களில் எளிய உணவான கூழ் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது என்று ஜகன் மாதாவிற்கு கூழ் வார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்தினர் நமது முன்னோர்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி நடாத்தும் கட்டுரைப் போட்டி – (2015)

அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபது ஆண்டுகள் நிறைவையொட்டி, பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியை **'தினக்குரல்'** நாளிதழின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடாத்துகின்றது. இப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

முதலாம் பிரிவு - தரம் 6 முதல் 8 வரை
இரண்டாம் பிரிவு - தரம் 9 முதல் 11 வரை
மூன்றாம் பிரிவு - தரம் 12 முதல் 13 வரை

மாணவர் ஒருவர் ஒரு பிரிவில் மட்டுமே பங்குபற்ற முடியும். கட்டுரைகள் தமிழ் மொழியிலேயே எழுதப்பட வேண்டும். சகல போட்டியாளரும் கட்டுரைகளை தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி, தமது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப் படுத்தி, கட்டுரை எழுதிய மாணவனின் சொந்த ஆக்கம் என வகுப்பு பொறுப்பாசிரியர் மற்றும் பாடசாலை அதிபரால் அத்தாட்சிப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப் படிவம் இங்கு பிரசுரமாகியுள்ளது)

போட்டிக்காக அனுப்பப்படும் கட்டுரைகள் ஏற்கனவே பத்திரிகையில் சஞ்சிகையில் அல்லது நூல்களில் வெளிவந்திருப்பதாகத் தெரிய வரும்போது, அவை எதுவித அறிவித்தலுமின்றி போட்டியிலிருந்து நிராகரிக்கப்படும். முதற் தெரிவில் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகளை எழுதியவர்களை நேரில் அழைத்து ஓர் எழுத்துப் பரீட்சை மூலம் அவர்களின் ஆக்கத் திறனை மேலும் பரீட்சிப்பதற்கும் இந்து மாமன்றம் தீர்மானித்துள்ளது

ஒவ்வொரு பிரிவுகளுக்கும் கட்டுரைத் தலைப்புகள் பின்வருமாறு அமைகின்றன.

முதலாம் பிரிவு - நல்லொழுக்கம் (200-250 சொற்கள்)

இரண்டாம் பிரிவு - மாணவர் நல்வாழ்வு (300-350 சொற்கள்)

மூன்றாம் பிரிவு - கல்லூரி வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டியவை (400-500 சொற்கள்)

பரிசு விபரம்

ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் பரிசில்களாக வழங்கப்படும். அத்துடன் மாமன்றத்தின் அறுபதாண்டு சிறப்பு மலரிலும் பரிசுபெறும் கட்டுரைகளும் ஏனைய தரமான கட்டுரைகளும் பிரசுரமாகும். தரமான கட்டுரைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்

போட்டிக்கான கட்டுரைகள் 30-11-2015 ஆம் திகதிக்கு முன்பாக

பொதுச்செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம் 91/5 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு-2 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கட்டுரைப்போட்டி சம்பந்தமான கடிதத்தொடர்புகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது

மாதிரி விண்ணப்பப் படிவம்

பெயர் :
வகுப்பு :
கல்லூரியின் பெயர் :
பிரிவு :

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கட்டுரையை நானே எழுதினேன் எனவும். இக்கட்டுரை வேறு எங்கும் வெளியிடப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
மாணவரின் கையொப்பம்

எமது கல்லூரியில் .....தரத்தில் கல்வி பயிலும் ..... என்னும் மாணவரால் கட்டுரை எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

வகுப்பு பொறுப்பாசிரியர் அதிபர்
திகதி :.....
(இறப்பர் முத்திரை)

மாமன்றத்தின் சமூகப் பணி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் வேண்டுகோளை ஏற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி லசோதா பாக்கியராசாவின் சிறுநீரகப் பாதிப்பு சம்பந்தப்பட்ட சிகிச்சைக்காக முதற்கட்ட உதவியாக அகில இலங்கை இந்து மாமன்றம் 25000 ரூபாவை வழங்கியிருக்கிறது.

மாமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட நிதியுதவிப் பணம் அண்மையில் ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற அலுவலகத்தில் வைத்து செல்வி லசோதா பாக்கியராசாவுக்கு வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 16ஆம் ஆடிப்பூரத் திருநாள்

சிறப்புமிக்க ஆடிப்பூரம்

ஆடிப்பூரம் என்னும் விழா ஆடி மாதத்திலே பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படுவது. இது தேவிக்குரிய திருநாளாகும். இந்த நாளில் தான் உமாதேவியும் தோன்றியதாக கூறப்படுவதுண்டு. உலக மக்களைக் காக்க சக்தியாக அம்பாள் உருவெடுத்தாள். சித்தர்களும், யோகிகளும் இந்த நாளில் தவத்தை துவக்குவதாக புராணங்கள் கூறுகின்றன.

அனைத்து உலகத்தையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் அகிலாண்ட கோடி அன்னைக்கு மஞ்சள் காப்பு, சந்தனக் காப்பு, குங்குமக் காப்பு நடத்துவார்கள். அந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகிக்கு வளைகாப்பு நடக்கும் நாள்தான் ஆடிப்பூரம். அன்னை உளம் மகிழ்ந்து மாந்தர்கள் அனைவருக்கும் தன் அருளை வழங்கும் நாள். பல்வேறு விதங்களில் அன்னையைக் கொண்டாடும் நாள் ஆடிப்பூரம்.

பல்வேறு ஆலயங்களில் ஆடிப்பூரம் அம்மனுக்குரிய பிரம்மோற்சவமாக பத்து நாள் திருவிழாவாக வாகன சேவையுடன் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாறு பத்து நாள் பிரம்மோற்சவம் நடைபெறும் சில தலங்கள் திருவாரூரில் கமலாம்பாளுக்கு, திருநாகையில் நீலாயதாட்ஷி அம்மனுக்கு, திருக்கருகாவூரில் கர்ப்பரட்சாம்பிகைக்கு, திருமயிலை கற்பகவல்லிக்கு. ஆடிப்பூரத்தன்று மதியம் சந்தனக் காப்பு அலங்காரம், இரவு விரைமலர் குழல் வல்லி மறைமலர் பதவல்லி கற்பகவல்லிக்கு வளைகாப்பு உற்சவம். மேல் மருவத்தூரில் ஆதிபராசக்திக்கு ஆடிப்பூரம் மிகப்பெரிய பண்டிகையாக அம்மனுக்கு கஞ்சி வார்க்கும் பண்டிகையாக சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆடிப்பூரத்தன்று அம்பிகைக்கு சிறப்பு வழிபாடு நடக்காத கோவிலே இல்லை.

வைணவத் திருக்கோவில்களிலும் ஆடிப்பூரம் பத்து நாள் திருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. ஏனென்றால் ஆண்டாள் அவதரித்த நட்சத்திரம் பூரம். ஆடிமாதத்தில் துளசி தோட்டத்தில் ஆண்டாள் இந்த நட்சத்திரத்தில் அவதரித்தாள். ஆண்டாளின் இயற்பெயர் கோதை. இவளை வடமாநிலங்களில் கோதாதேவி என்று அழைப்பர். ஆண்டாள் அவதரித்த திருத்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரை அம்மக்கள் கோதாதேவி அவதார ஸ்தலம் என்று சிறப்பித்துக் கூறுவர். இந்த நாளில் இக்கோயிலுக்கு சென்று வருவது மிகவும் நல்லது. அரங்கனுக்குச் சூட்டவேண்டிய ஆரத்தினை தானே சூடிக் கொண்டு ஆடியில் அழகு பார்த்தாள் ஆண்டாள். தான் சூடிக் களைந்த மாலையைப் பெருமாளுக்கு அளித்து வந்ததால் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்ற திருநாமம் பெற்றாள். அப்போது அந்த கண்ணாடியில் அரங்கனாகவே தெரிந்தாள் அவள். தானே அவனாக பாவித்து மகிழ்ந்த ஆண்டாளின் அவதார தினம்தான் ஆடிப்பூரம். அந்த அற்புதத் திருநாளை ஒட்டி நடக்கும் திருவிழாவில் ஆண்டாளைத் தரிசிப்போர் ஆனந்த வாழ்வு பெறுவர் என்பது ஐதீகம்.

சில இடங்களில் ஆடிப்பூரம் முளைப்பாலிகை திருவிழாவாகவும் கொண்டாடப்படுகின்றன. ஒரு வாரத்திற்கு முன்னரே அவரவர் இல்லங்களில் நவதானியங்களை விதைத்து முளைப்பாலிகையைத் தயார் செய்கின்றனர். ஆடிப்பூரத்தன்று அவை அம்மன் சன்னதியில் சேர்க்கப்படுகின்றன. முளை வளர்ந்துள்ள விதத்தில் இருந்து வருடம் எவ்வளவு செழிப்பாக இருக்கும் என்பதை உணர்த்துகின்றது என்பது ஐதீகம்.



31.05.2015இல் திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் நடந்த பஞ்சரத பவனியின் போது பஞ்ச மூர்த்திகள் வீதி வலம் வரும் அருட்காட்சியுடன் அடியார் ஒருவரின் தூக்குக் காவடியையும் காணலாம்.



தீர்த்தோற்சவத்தின் போது பஞ்ச மூர்த்திகள் பாலாவி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளும் அருட்காட்சி.

உலகை நோக்கிய திருக்குறள்

வள்ளுவப் பெருந்தகை உலகை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்ட பொது மறையாக திருக்குறள் திகழ வேண்டும் என்ற நோக்கத்தில் முதற் குறளிலேயே உலகு என்ற சொல்லை கையாண்டிருப்பது சிறப்புக்குரியதாகும். நாடு, மொழி, இன, மத பேதங்களுக்கு அப்பாற் சென்று நூலினை யாத்திருக்கிறார். வள்ளுவருடைய மரபையும் பண்பையும் பின்பற்றி திருக்குறளுக்குப் பின் வந்த தமிழ் இலக்கிய, இலக்கண சமய நூல்கள் எல்லாம் உலகம், உலகு என்ற சொல்லை முதற் செய்யுள் பாடல்களில் வைத்து நூலினை சிறப்புச் செய்ததை பல நூல்களில் காணக்கூடியதாகயிருக்கின்றது.

பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமான் முதற்பாட்டில் உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன் என்று ஆரம்பிக்கிறார். கவிச்சக்கரவர்த்தி கம்பர், இராமாயணத்தை இயற்ற ஏறத்தாழ 12000 பாடல்களை அமைத்திருக்கிறார். தமது முதல் பாடலில் உலகம் யாவையும் தாமுளவாக்கலும், என்றமைத்து உலகம் என்ற சொல்லை முன் வைத்ததையும் காணக்கூடியதாகவிருக்கிறது. திருமுருகாற்றுப்படையில் முதற் செய்யுளின் முதல் அடியில் உலகம் உவப்ப வலநேர் புதிரி தரு என்றும், சிலப்பதிகாரத்தில் முதற்பாட்டில் முதல் அங்கண் உலகளித்தலால் திங்களைப் போற்றுதும் என்று உலகத்தை முன்வைக்கிறார் இளங்கோவடிகள்.

திருக்குறளுக்கு முன்பே நூல்களில் உலகம், உலகு என்ற சொற்களை முதற் செய்யுளில் வைக்கும் மரபும் பண்பும் இருந்தாலும் திருக்குறள் நூலுக்கு உலகில் ஏற்பட்ட பெருஞ்சிறப்பு பெரு மதிப்பு காரணமாக திருக்குறளுக்குப் பின் வந்த சகல இலக்கிய, சமய, இலக்கண நூல்கள் எல்லாம் உலகம், உலகு என்ற பதங்களை தமது நூல்களில் பிரயோகித்து, உலகை நோக்கமாக கொண்டு எழுதவும், ஆரம்பிக்கவும் முற்பட்டன. உலகம், உலகு என்ற சொற்கள் நூல்களை மங்களகரமாக ஆரம்பிக்க உதவும் சொற்பதங்கள் என்று அறிஞர்கள் கூறுவர். இச்சொற்களுக்கு பெருமதிப்பும் சிறப்பும் உலகில் ஏற்படக் காரணமாக இருந்தவர் வள்ளுவர் என்று கூறின் மிகையாகாது.

- இ. சிறில்கந்தராசா.

(நன்றி:- திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ணஜாலங்கள்)

ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சிக்காக்கோவில் Saivaite Tamil Foundation நடாத்திய ஆன்மீக முகாமில் மாமன்றத்தின் இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரி (Compendium of Hindus) கையேடு வெளியீட்டு விழா நிகழ்வின் போது

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் தங்கியிருப்பவர்களுடன் சிவபூமி அறக்கட்டளை தலைவரும், மாமன்ற உப தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன்





ஆறுமுகத்தான்குளம் சிறு கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், முல்லைத்தீவைச் சேர்ந்த Dr. பிரசாந்தனின் உதவியுடன் கல்வி உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிய நிகழ்வின் போது.

நல்லை ஆதீன முதல்வரை பிரித்தானிய தூதுவர் சந்தித்த நிகழ்வின் போது

நல்லை ஆதீன முதல்வரை அமெரிக்க தூதுவராலய அதிகாரி சந்தித்த நிகழ்வின் போது

கொழும்பு விவேகானந்த சபையின் கட்டிட வேலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது சபைத் தலைவர் திரு ஏ. ஆர். சுரேந்திரன், செயலாளர் திரு. க. விவேகானந்தன், பொருளாளர் திரு. மு. சொக்கலிங்கம் ஆகியோர். (16.07.2015)

திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம்



திருக்கேதீஸ்வரத்திலுள்ள திருவாசக மடம் 1952ஆம் ஆண்டில் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளால் நிறுவப்பட்டது. இவர் இதனைப் பல ஆண்டுகள் நடத்தி வந்துள்ளார். சுவாமிகள் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடுள்ளவராக அதனை முதன்மைப்படுத்தி சொல்லிலும், செயலிலும் திருவாசகநெறியினை வாழ்ந்து காட்டியதோடு மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி பலரை திருவாசகத்தில் ஈடுபடச்செய்தவர். குறிப்பாக, மார்கழி மாதத்திலே திருவெம்பாவைக் காலத்தில் திருவாசகவிழாவை ஏற்பாடு செய்து நடத்தி வந்தவர். சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் செய்து வந்த திருப்பணிகளுக்கு மிகவும் உதவி செய்தார். அவர்களின் ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலையையும், நெசவுசாலையையும் கட்டி முடித்தார். திருக்கேதீஸ்வரம் வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தாம் அங்கு ஒரு குடிசையிலே வாழ்ந்து கொண்டு பல சேவைகள் செய்து வந்தார். அவருக்குப் பின் சி.சரவணமுத்து சுவாமிகள் திருவாசக மடத்தைத் தொடர்ந்து கவனித்து வந்தார். சபாரத்தினம் சுவாமிகள் இறைவன் திருவடி சேர்ந்த பின், அவரின் இலட்சியங்களை முன்னெடுப்பதற்காக, அவரது பெயரில் தொண்டர் சபை உருவாக்கப்பட்டது குறிப்பிடற்பாலது. திரு.எஸ்.தியாகராஜா (எஸ்.ரி.ஆர்) தலைவராகவும், திரு.த.துரைராஜா செயலாளராகவும் இந்த தொண்டர் சபையில் பணிபுரிந்து வருகின்றனர்.

தொண்டர் சபையின் ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வர புண்ணிய பூமியில் சைவத்தமிழ் இந்து மக்களின் பண்பாட்டு நலன் கருதி புதிய இந்து கலாசார மண்டபமொன்று அமைக்கப்பட்டு, 2013 தை மாதத்தில் திரு.சி.தியாகராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொண்டர் சபையின் அனுமதிப்படி செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்கள் இலங்கையிலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் வசிக்கும் சைவத்தமிழ் அன்பர்களிடமிருந்து 7,200,000/- ரூபா வரையில் பணம் சேர்த்து மண்டபத்தை அமைப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

(தகவல்:- ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை)

இந்தச் சுடரில்...

- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- விநாயகர் வணக்கம் 4
- இந்து மாமன்றம் என்றும் எழிலுடன் வாழி! வாழி! 5
- சிறப்புப் பேட்டி - சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்கள் 6
- மாமன்றத்தின் கௌரவம் பெறும் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் 8
- ஆடி அமாவாசை விரத மகத்துவம 9
- ஆன்மீகம் நிறைந்த ஆடி மாதம் 11
- பல்துறை வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் 12
- சைவர்களுக்கான கலங்கரை விளக்கு நாவலர் 13
- சிவ நாமத்தின் பெருமை 15
- இந்து ஆராய்ச்சி மாநாடு - ஒரு குறிப்பு 17
- இந்து ஆராய்ச்சி மாநாடு - நிகழ்ச்சி நிரல் தொகுப்பு 18
- மக்கள் துயர்போக்கிய சிவயோக சுவாமிகள் 29
- சுப்பிரமணிய பாரதியாரும் ஈழத்து சித்தர்களும் 30
- வாழ்வியல் சிந்தனை 33
- இந்துமா மன்றமெனும் இமயம் வாழ்க! 35
- நாவலர் ஞானபரம்பரையைத் தொடர வைத்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 36
- தமிழ் மன்னன் பரராசசேகரன் 37
- செல்வச் சிறப்பைத்தரும் வரலக்ஷ்மி விரதம் 38
- மாமன்றக் கட்டுரைப் போட்டி / சமூகப் பணி 39
- சிறப்புமிக்க ஆடிப்பூரம் 40
- உலகை நோக்கிய திருக்குறள் 41
- திருக்கேதீஸ்வரம் - இந்து கலாசார மண்டபம் 44

புத்தளத்தில் மாமன்ற கல்விக்குழுவின் பணிகள்

புத்தளம் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் கல்விக்குழுச் செயலாளருமான திரு. த. மனோகரன் உரையாற்றுகின்றார்

மாமன்ற கல்விக்குழு தலைவர் திரு. மா. கணபதிப்பிள்ளை உரையாற்றுகின்றார்

கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் திரு. எம். சிவஞானம் விரிவுரையாற்றுகின்றார்.

புத்தளம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. மா. நாகராஜா, திரு. த. மனோகரன், வலயக்கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. எம். அபுல்ஹாதா, மா. கணபதிப்பிள்ளை.

முழங்காவில் ம. வி ஆசிரியர் திரு. சி. சிவச்சந்திரன் விரிவுரையாற்றுகின்றார்.

பங்குபற்றிய மாணவ மாணவிகள்

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015

அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் நினைவுப்பேருரையும் 'தில்லை என்னும் திருத்தலம்' நூல் வெளியீட்டு விழாவும்

(05.07.2015)

வீரகேசரி நிர்வாக இயக்குநர் திரு. குமார் நடேசன் மங்கல விளக்கேற்றுகிறார்

சக்தி இல்ல மாணவிகளின் இறைவணக்கப் பாடல்

அமரர் பாலசுப்பிரமணியத்தின் நிழற்படத்திற்கு திரு. குமார் நடேசன் மாலையணிவித்து அஞ்சலி

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன்

கலாநிதி சந்திரிக்கா சுப்பிரமண்யன் நினைவுப் பேருரையாற்றுகிறார்.

திரு. குமார் நடேசனை மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா கௌரவிக்கிறார்.

மாமன்றப் பொருளாளர் திரு. வே. கந்தசாமி பிரதம விருந்தினரை கௌரவிக்கிறார்.

கொழும்பு இராமநாதன் இந்துக்கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா நூல் விமர்சன உரை

கலாநிதி சந்திரிக்கா சுப்பிரமண்யன் பிரதம விருந்தினருக்கு நூலின் முதல் பிரதி வழங்குகிறார்

மாமன்ற விடுதிகள் குழுத் தலைவி திருமதி அ.கயிலாசபிள்ளை நூலின் சிறப்புப் பிரதி பெறுகிறார்

கலாநிதி ஏ. கந்தசாமி நூலின் சிறப்புப் பிரதி பெறுகிறார்.

திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் நூலின் சிறப்புப் பிரதி பெறுகிறார்.

பிரதம விருந்தினருக்கு நினைவுச்சின்னம் வழங்கப்படுகிறது.

பொதுச் செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்விதழ் இல: 455, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.